ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரதகுருவே நம:

ஆழ்வார்கள் வாழி. அருளிச் செயல் வாழி.
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி. - ஏழ்பாரும்
உய்ய. அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி.
செய்ய மறை தன்னுடனே சேர்ந்து. (உபதேசரத்தினமாலை 3ஆம் பாசுரம்)

ஆழ்வார்கள் ஏற்றம். அருளிச் செயல் ஏற்றம்.
தாழ்வாதும் இன்றி அவை தாம் வளர்த்தோர் - ஏழ் பாரும் உய்ய.
அவர்கள் செய்த வியாக்கியைகள் உள்ளதெல்லாம்
வையம் அறியப் பகர்வோம் வாய்ந்து. (உபதேசரத்தினமாலை 34ஆம் பாசுரம்)

தெருளுற்ற ஆழ்வார்கள். சீர்மை அறிவாரார்.
அருளிச் செயலை அறிவாரார். - அருள் பெற்ற
நாதமுனி முதலாம் (முதலான) நம் தேசிகரை அல்லால்
பேதை மனமே! உண்டோ பேசு. (உபதேசரத்தினமாலை 36ஆம் பாசுரம்)

தை மாதத்தில் அவதரித்த ஆழ்வார், ஆசார்யர்கள் திருநாமங்களும்
திருநச்சத்திரங்களும் கீழே வருமாறு :


| வரிசை எண் | ஆழ்வார்கள் / ஆசார்யர்கள் திருநாமம் | திருநட்சத்திரம் | பக்கம் |
|---|---|---|---|
| 1 | திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் | மிருகசீரிஷம் | 02 - 28 |
| 2 | எம்பார் | புனர்பூசம் | 29 - 42 |
| 3 | திருமழிசையாழ்வார் | மகம் | 43 - 48 |
| 4 | கூரத்தாழ்வான், ஈச்சம்பாடி ஆச்சான் | ஹஸ்தம் | 49 - 55 |
| 5 | ஈச்சம்பாடி ஆச்சான், ஈச்சம்பாடி ஜீயர், ஸ்ரீ சுந்தரதேசிகன் | தனியன் | 56 - 57 |
| 6 | முடம்பை நம்பி | ஹஸ்தம் | 58 - 65 |
| 7 | குருகைக்காவலப்பன் | விசாகம் | 66 - 68 |
| 8 | சொட்டை நம்பி (ஆளவந்தார் திருக்குமாரர்), நாலூரரான் | பூரட்டாதி | 69 - 71 |



இவர்களின் தனியன், நாள்பாட்டு, வாழித்திருநாமம் மற்றும் இவர்கள் அருளியுள்ள ப்ரபந்தங்கள், க்ரந்தங்களைப் பற்றி கீழே அனுபவிப்போம் :

ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## திருக்கோவலூர் ஒன்றான எம்பெருமானார் ஜீயர் - வருஷ திருநட்சத்திரம் தை – மிருகசீரிஷம்



திருக்கோவலூர் ஒன்றான எம்பெருமானார் ஜீயர் மற்றும் 2வது பட்டம் ஜீயர்



திருக்கோவலூர் வர்த்தமான எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமி

புகைப்படம் உதவி : ஸ்ரீ கோபால் ஸ்வாமி, சேலம்

## தனியன்

புஷ்யே ம்ருக ஶிரோத்பூதம் ஸ்ரீஸேஷாம்ஸமஹம் பஜே /
ஸ்ரீமத்யதீந்த்ரப்ரவண ப்ரவணம் லக்ஷ்மணம் முநிம் //

ஸ்ரீஶைல நரஸிம்ஹார்ய ஸ்ரீபாதகமலாஶ்ரிதம் /
வந்தே யதீந்த்ர ப்ரவணப்ரவணம் லக்ஷ்மணம்முநிம் //

## வாழித்திருநாமம்

தையில் மிருகசீருடத்தில் தரணி வந்தோன் வாழியே
தண் கோவலூர் நகர் விளங்கத் தானுதித்தான் வாழியே
வையகத்தில் ஈடுரைக்கும் வாசகத்தோன் வாழியே
வரயோகி கருணையினால் வாழ்தருள்வோன் வாழியே
செய்ய இடைகழி ஆயன் செல்வம் வளர்த்தோன் வாழியே
சீராரும் கோவலூர் சிறக்க வந்தோன் வாழியே
மையல்மிகு கோவல் எம்மிராமானுசமுனி வாழியே
மலரடியும் முக்கோலும் மாநிலத்தில் வாழியே.

ஆரியர்கள் வாழ அருளிச்செயல் வாழ
தாரணியில் பூங்கோவலூர் வாழ - சீருடைய
மன்னுபுகழ் எம்பெருமானார் முனியே! மாயவனே!
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

## மங்கள ஸ்லோகம்

ஸ்ரீமதே பணிராஜாம்ஶ முநீந்த்ராய மஹாத்மநே /
ஸ்ரீகோபபுரீவாஸாய நித்யஶ்ரீ நித்ய மங்களம் //

அவதாரஸ்தலம் - திருவேங்கடமலைக்கு வடக்கே முல்குதிர் என்ற கிராமம்
திருநாமம் - இராமாநுஜன்
திருத்தகப்பனார் - கொண்டன் ஐய்யங்கார். இவருக்கு கிருஷ்ண ஐய்யங்கார் என்ற மற்றெரு பெயரும் உண்டு.
திருத்தாயார் - மாதவம்மங்கார் என்கிற செங்கமலவல்லி
இவர் திருவனந்தாழ்வான் அம்சம் ஆவார்.
ஆசாரியர் - ஏட்டூர் அத்தங்கி சிங்கராசாரியர் ஸ்வாமி

## திருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமி வைபவம்

### ஜீயர் திருவவதாரம் செய்ததற்கான காரணம் என்ன?

ச்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணன் பின்னானார் வணங்கும் சோதியாய் சேவை சாதித்து வரும் திருப்பதிகள் 108ல் நடுநாட்டு திருப்பதிகள் இரண்டு. அவையாவன - ஒன்று திருக்கோவலூர் மற்றொன்று திருவஹிந்திரபுரம். இவ்விரு திருப்பதிகளுள் துஞ்சா நீர் வளஞ்சுரக்கும் பெண்ணைத் தென்பால் என்று விளங்குவது திருக்கோவலூர் என்னும் திவ்ய தேசம் ஆகும்.

அக்காலத்தில் ஸ்ரீவேதவ்யாஸ பட்டர் என்பவர் திருவிக்ரமப் பெருமாளை மங்களாசாசநம் செய்து கொண்டும், சந்நதி கைங்கர்யங்களை நிர்வகித்துக் கொண்டும் வாழ்ந்து வந்தார். அப்பொழுது அந்நாட்டை ஆண்டுவந்த சைவ சோழ மன்னரால் அந்த சந்நதி அபகரிக்கப்பட்டது. எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் கர்ப்ப மண்டபத்து வாயில் கல் சுவரால் மூடப்பட்டும், முன்புறத்தில் சிவலிங்கமும், சிவாலயச் சின்னங்களும் அமைக்கப்பட்டும், சைவர்கள் வழிபாட்டு ஸ்தலமாகி மாறி விட்டது.

கோயில் கைங்கர்யங்களை இழந்த ஸ்ரீவேதவ்யாஸ பட்டர் ஆறாப் பெருந் துயர் உற்றார். தம் சரீரத்தை விடுவதற்கு நிச்சயித்து, உண்ணாது, உறங்காது, தளர்வுற்று வரும்போது ஒரு நாள் இரவில் தம்மையறியாது நித்திரை வசப்பட்டார். அடியவர்க்கு மெய்யனான திருவிக்கரமன் பட்டர் கனவில் தோன்றி பட்டரே! சோகத்தை தவிர்ப்பீர். ஒரு ஜீயர் அவதரிக்கப்போகின்றார். அவரால் இத்தலம் மீண்டும் மாற்றப்படும். அது வரையில் பொறுத்திரும் என்ற திருவாய் மலர்ந்தருளினார். பட்டரும் தெளிந்து எழுந்து பகவானின் பெருங்கருனையை பலகாலும் புகழ்ந்து, தமது எண்ணத்தை விடுவித்து, திருவரங்கத்தை அடைந்தார். அங்கு அரங்கநகர் அப்பனை மங்களாசாசநம் செய்து கொண்டு ஜீயரின் திருவவதார காலத்தை எதிர் நோக்கி தரித்து இருந்தார்.

இந்த திவ்ய தேசம் மட்டுமல்லாமல் அக்காலத்தில் பாண்டிய நாட்டு திருப்பதிகள் 18னுள் ஆழ்வார் திருநகரி முதலான நவதிருப்பதிகள் திடீரென போத்திமார்கள் கைவசமாகி அவர்கள் ஆராதனைக்கு உட்பட்டு இருந்தன. ஸ்ரீமுஷ்ணம், திருக்கண்ணமங்கை முதலிய திவ்ய தேசங்களும் சீரழிந்து கிடந்தன. திருவரங்கத்தில் கூரத்தாழ்வான் சந்நதி அமைப்பதற்கும்,

பிரம்மரதம் முதலிய அருளப்பாடுகளுக்கும் , தலத்தாராலும், அதிகார வர்க்கத்தாரலும் பல இடையூறுகள் ஏற்பட்டு இருந்தன. இவைகள் ஒழிந்து சீர் பெறுவதற்கும் ஜீயர் திருவவதரம் பண்ணக்கூடிய நாளை பட்டர் எதிர் பார்த்து காத்திருந்தார்.

## ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் திருவவதாரம்

பரன் சென்று சேர் திருவேங்கட மாமலைக்கு வடக்கே முல்குதிர் (மோட்சம் கொடுக்கக் கூடிய ஸ்தலம்) என்னும் கிராமம் உண்டு. அதில் கொண்டன் ஐய்யங்கார் என்பவர் ஒருவர் இருந்தார். இவருக்கு கிருஷ்ண ஐய்யங்கார் என்ற மற்றொரு பெயரும் உண்டு. அவர் மணைவியார் திருநாமம் மாதவம்மங்கார் என்கிற செங்கமலவல்லி. இவர்கள் இல்லறத்தை நல்லறம் பொலிய நடத்தி வந்து சிறப்புற்று வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு புத்தரிபாக்கியம் இல்லாமல் நெடுங்காலம் பெரும் குறையுடன் வாழ்ந்து வந்தார்கள்.

குளிரருவி வேங்கடத்துக்குச் சென்ற அப்பனிடத்தில் தங்கள் குறையைத் தீர்த்து வைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்.

சிலநாட்கள் சென்றதும் செங்கமலவல்லியார் கர்ப்பவதியாய் பிரசவ காலத்தில் பொறுக்க வொண்ணாத நோயுற்றுத் துடித்துக் கொண்டிருந்தார். அப்போது கிருஷ்ண ஐய்யங்கார் செடியாயவல்வினைகள் தீர்க்கும் திருமாலே! நெடியானே! வேங்கடவா! என் மணவி சுகமாக ஓர் ஆண் மகவைப் (பிள்ளையை) பெறுவாளாயின் அந்த மகவையை தேவரீர் சந்நிதியில் நித்திய கைங்கர்யம் செய்ய சமர்ப்பிக்கிறேன் என்று திருவேங்கடமுடையானைப் பிரார்த்திக் கொண்டார்.

செங்கமல வல்லியாரும் நண்ணாவசுரர் நலி வெய்த நல்லவமரர் பொலி வெய்த என்கிறபடியே ஓர் ஆண் பிள்ளையை கி.பி 1452க்குச் சரியான ஸ்ரீமுக வருஷம் தை மாதம் மீருகசீரிஷ நட்சத்திரம் கூடிய நன்னாளில் சுகமாக ஈன்று எடுத்தாள். (இவருடைய திருவவதாரம் மணவாளமாமுனிகள் பரமபதம் அடைந்து சுமார் 9 வருடத்திற்கு பிறகு ஆகும்).

அக்குழந்தையின் தேஜோரூப குணசேஷ்டிதங்களைக் கண்ட மறை வாணர்கள் அவனைத் திருவனந்தாழ்வான் அம்சமாக அறுதியிட்டனர். அக்குழந்தைக்கு இராமாநுஜன் என்று திருநாமம் சாற்றினர்.

வளர்பிறை சந்திரன் போல் வளர்ந்து வந்த அந்த பாலனுக்குத் தந்தையார் தக்க காலங்களில் ஜாதகர்மம், அன்னப்பிராசனம், சௌளம் ஆகிய சடங்குகளைச் செய்து வைத்தார்.

## உபநயனம் செய்வித்தல்

ஏழாவது வயதில் திருமலையில் உபநயநத்தை செய்விப்பதாகக் கொண்டனையய்யங்கார் முடிவு செய்தார். அவருடைய பிரயாணத்திற்கு முன்னாள் இரவில் சந்நிதி பரிகரத்தார் கனவிலும், அத்தங்கி ஏட்டூர் சிங்கராசாரியர் (இவரின் ஆசார்யர்) கனவிலும் திருவேங்கடமுடையான் தோன்றி நம் குழந்தை நாளைக்கு சந்நிதிக்கு வருகின்றான். அவனுக்குப் பெரும் சிறப்புடன் உபநயநத்தை நடத்தி வையுங்கோள். சிங்கராசாரியரே! நீர் அவனுக்குப் பஞ்ச சம்ஸ்காரங்களைச் செய்து, வித்தையும் அதிகரிப்பித்துவையும் என்று நியமித்தருளினான். அவர்கள் தாம் கண்ட கனவை வியந்து, புகழ்ந்து, ஆனந்தத்துடன் அப்பாலகனின் வரவை எதிர்பார்த்திருந்தனர். சில நாழிகைகள் கழிந்தன. கொண்டனையங்காரும், செங்கமலவல்லியாரும் சந்நிதியை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

ஒரு இள ஞாயிறு கால்கொண்டு நடந்தார் போல, அவர்கள் இடையே நடந்துவரும் இராமாநுஜரை சந்நிதி பரிகரத்தார் கண்டனர். பொலிக பொலிக பொலிக என்று மங்களாசாஸநம் செய்து, கலியும் கெடும் என்று போற்றிப் புகழ்ந்து அடங்கா மகிழ்ச்சியுடன் அவர்களைத் தக்க மரியதைகளுடன் வர வேற்றனர். திருவேங்கடமுடையான் சேவையைச் செய்வித்து அவர்களுக்கு தீர்த்த பிரசாதங்களும் வழங்கி எம்பெருமான் நியமனத்தையும் அறிவத்து அவர்களுடன் கூடியிருந்து குளிர்ந்தனர்.

நல்ல முகூர்த்தத்தில் உபநயநம் பெருஞ்சிறப்பாக நடந்தேறியது. கோயில் அனைத்துக் கொத்தினரும் இராமாநுஜரை சிங்கராசாரியர் (ஆசாரியன்) திருமாளிகைக்கு சகல வரிசைகளுடனும் மங்களவாத்தியங்களுடனும் அழைத்துக்கொண்டு போய்விட்டு, தாய் தந்தையருக்கும் விடை கொடுத்து அனுப்பி வைத்தனர்.

## இராமாநுஜர் சிங்கராச்சாரியர் திருவடிகளில் ஆச்ரயித்தல்

சிங்கராச்சாரிரும் பதிவ்ரதைகளுக்குப் பிரதானமான மாங்கல்ய சூத்திரம்போல், மோட்சத்திலே இச்சையுடைவர்களுக்குப் பிரதானமான பஞ்ச ஸம்ஸ்காரங்களை இராமாநுஜருக்குச் செய்து வைத்து வித்தையும் போதித்து வந்தனர். இராமாநுஜர் சாந்தீபனி முனவரிடம் ஓதிய கண்ணபிரானைப் போல சொற்ப காலத்துள் சகல வேத சாஸ்திர இதிகாசபுராண தர்க்க மீமாம்சாதிகளையும் ஓதி உணர்ந்து வல்லவரானார்.

## இராமாநுஜர் லசஷ்மணாரியர் என்னும் திருநாமம் பெறுதல் மற்றும் தாம் ஒரு அவதார புருஷர் என்று ஆசார்யனுக்கு உணர்த்துதல்

ப்ரஹ்ம ஸுத்ரத்திற்கு எம்பெருமானார் செய்தருளிய ஸ்ரீபாஷ்யத்தின் விளக்கமான சுருதப்பிரகாசிகையை சிங்கராசாரியர் இராமாநுஜருக்கு அருளிச் செய்து வந்தார். ஒரு நாள் நடுப்பகலில் சூரிய வெப்பத்தினால் சிரமமுற்ற இராமாநுஜர், சிங்கராசாரியர் (ஆசாரியன்) திருமாளிகைக்கு அடுத்த வீட்டின் இடைகழியில் அயர்ந்து உறங்கினார். பழமையினால் பழுதாயிருந்த அந்த வீட்டுக் கூறையின் இடுக்கு வழியாக வந்த சூரிய கிரணங்கள் அவருடைய முகத்தில் தாக்கிக் கொண்டு இருந்தன. அக்கிரணங்களை ஒரு பாம்பு தன் படத்தினால் தடுத்துக் கொண்டிருந்தது.

பிற்பகல், நெடு நேரமாகியும் இராமாநுஜர் காலசேஷபத்திற்கு வாராமையால், ஆசாரியர் தமது சீடர்களைக் கொண்டு அவரைத் தேடச் செய்தார். தேடச்சென்ற சீடர்கள் இராமாநுஜருடைய நிலமையைக்கண்டு அச்சமும் அதிசயமும் உற்று, விரைந்தோடிச் சென்று தாம் கண்ட ஆச்சர்யத்தை ஆசாயரிருக்கு அறிவித்தனர். அவரும் நேரில் சென்று பார்த்து வியப்புற்றார். இராமாநுஜருடைய உறக்கத்தை கலைக்காமல் திருப்பினார்.

சிறிது நேரம் சென்ற பின் உறக்கம் தெளிந்த இராமாநுஜர், காலசேஷபத்திற்கு காலம் தாழ்ந்தது கண்டு நொந்து கொண்டு, தமது ஆசார்யர் திருவடிகளில் சென்று பணிந்து தம்மை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டார். சிங்கராசாரியரும் பேர் ஆனந்தத்துடன் அவரை வாரி அனைத்து நம் லஷ்மணாரியரோ நீர்! என்று பணித்தார். அன்றிலிருந்து இராமாநுஜருக்கு லஷ்மணாரியர் என்கின்ற திருநாமம் வழங்கப்பெற்றது.

பின்னர், லஷ்மணாரியர் ஆழ்வார்கள் அருளிச்செயல்களையும், பூருவாசாரியர்கள் அருளிய இரகசிய க்ரந்தங்களையும், அவற்றின் வியாக்யானங்களுடன் ஐயந்திரிபற, மிகக்குறுகிய காலத்துள் ஓதி உணர்ந்தார். வயதும் 23 நிரம்பப்பெற்றார்.

## சிங்கராசாரியர் லஷ்மணாரியரை ஒரு அவதாரா புருஷராக மதித்தல்

லஷ்மணாரியருடைய அறிவு ஆற்றலையும், கல்வித் திறத்தையும், சாந்தமான குணப்பெருக்கினையும் கண்ட சிங்கராசாரியர் அவரை ஒரு அவதார புருஷராகவும், எதிராஜருடைய அம்சபூதராகவும் மதித்துத் தமது திருமாளிகையில் இனி அவர் வசித்தல் சரி அன்று என அறிதியிட்டு, திருவேங்கடமுடையான் சந்நிதியில் எழுந்தருளச் செய்து வைத்தார்.

## லஷ்மணாரியர் திருவேங்கடமுடையானுக்கு பூஷ்ப கைங்கர்யம் செய்தல்

லஷ்மணாரியரும் எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும் ஆவேனே என்று குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் (4 பத்து 10ஆம் பாசுரம்) அருளியபடி திருமலையில் தாம் செய்யத்தக்க கைங்கரியம் யாதென்று சிந்தித்து, புஷ்ப கைங்கர்யம் செய்வதே சிறந்தது எனத் தெளிந்து, சந்நிதிக்கு அருகில் ஓர் இடத்தில் அழகிய நந்தவனம் ஒன்றை அமைத்துப் பூத்தொண்டு செய்து கொண்டும், அப்பனை மங்களாசாசநம் செய்து கொண்டும் வாழ்ந்து வந்தார்.

## ஜீயர் என்னும் திருநாமம் பெறுதல் - பெரிய ஜீயர் பட்டத்தை அலங்கரித்தல்

இவ்வண்ணம் 3 ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் திடீரென திருவேங்கட முடையான் சந்நிதி ஸ்ரீகாரியத் துரந்தரராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் கேள்வியப்பன் பெரிய ஜீயர் திருநாடு அலங்கரித்தனர். சந்நிதி பரிகரத்தார் இந்த பீடத்திற்கு யாரை நியமித்தல் என்பது அறியாமல் அப்பன் திருவடிகளில் விண்ணப்பித்துக் கொண்டனர். திருவேங்கடத்து அப்பனும் அர்ச்சகமுகேன நமக்கு அந்தரங்கரான லஷ்மணாரியரை சந்யஸிக்கச் செய்து பெரிய ஜீயர் பீடத்தை அலங்கரிக்கச் செய்யவும் என்று நியமித்து அருளினான். சந்நிதி பரிகரத்தாரும் மிகவியந்து, கொண்டாடி, பகவான் நியமனத்தை லசஷ்மணாரிருக்கு அறிவித்தனர். அவரும் உவந்து எம்மானா! என்குலதெய்வமே! என்னுடை நாயகனே! நின்னுளேனாய்ப் பெற்ற நன்மை இவ்வுலகினில் யார் பெறுவார்! என்று வேங்கடத்தண்ணல் திருவருளையும், அன்பையும், அபிமானத்தையும் பலகாலும் புகழ்ந்து கொண்டாடி, உடனே சந்யசித்துத் த்ரிதண்ட காஷாயாதிகளை அணிந்து கொண்டார். சந்நிதி பரிகரத்தார் சகல மரியாதைகளுடன் அவரைச் சந்நிக்கு எழுந்தருளிச் செய்தனர்.

அங்கு அவரும் அப்பனைக் கண்களாரச் சேவித்து முற்றப்பருகி மங்களாசானம் செய்தார். அப்பனம் அவரை குளிர நோக்கி தனது சோதிவாய் திறந்து வாரீர் ஜீயரே! என்று அழைத்து தீர்த்தம், திருமாலை, திருப்பரியட்டம், ஸ்ரீசடகோபனையும் சாதித்துச் செங்கோல் முத்திரையையும் அவர் கையில் ஒப்புவித்தான். அன்று முதல் லஷ்மணாரியருக்கு ஜீயர் என்கிற திருநாமம் வழங்கப்பெற்றது.

ஜீயரும் பெரிய கேள்வி ஜீயர் பீடத்தை அலங்கரித்துக்கொண்டு, சந்நிதி ஸ்ரீகாரியங்களை குறையற விசாரித்து நிர்வகித்து வந்தார். இவருடைய கல்யாண குணங்களை கேள்விப்பட்டு அனேகர் சிஷ்யர் ஆனார்கள்.

## சந்திரகிரி மன்னன் வெங்கடபதி நாயக்கர் ஜீயரை ஆச்ரயித்தல்

ஜீயருடைய பிரபாங்களைக்கேள்வியுற்று, சந்திரகிரி நகரை ஆண்டு வந்த வெங்கடபதி நாயக்கர் திருமலைக்கு வந்து தன்னை ஆட்கொள்ளும்படி அவர் திருவடிகளில் பணிந்தான். ஜீயரும் உகந்து அம்மன்னனுக்கு பஞ்ச சம்ஸ்காரங்கள் செய்து அடிமை கொண்டார். அவனும் ஸ்வாமியைப் பிறிந்திருக்க இயலாதவனாய் அடிக்கடி அவரை வந்து சேவிப்பதும், சில நாட்கள் அவர் திருவடிவாரத்தில் தங்கியிருந்து காலசேஷபங்கள் கேட்பதும், அவருடைய விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றியும் வந்தான்.

## திருமலையப்பன் ஜீயருக்கும் சந்திரகிரி மன்னனுக்கும் சொப்பனம் சாதித்தல்

ஒரு நாள் இரவு திருவேங்கடமுடையான் ஜீயர் கனவில் தோன்றி, அவருடைய அவதாரத்தின் பிரயோஜநத்தையும், சோழனால் ஆக்கரமிக்கப்பட்டுள்ள திவ்ய தேசங்களையும், அவற்றின் புநருத்தாரணத்தின் பொருட்டு அவர் செய்ய வேண்டடியவற்றையும் திருவாய் மலர்ந்து அருளினான்.

அதே இரவில், சந்திரகிரி மன்னனான வெங்கடபதி நாயக்கர் கனவிலும் எம்பெருமான் தோன்றி அவன் ஜீயருக்கு செய்யவேண்டிய சகாயங்களையும் கட்டளையிட்டு வைத்தனன்.

## ஜீயர் திருக்கோவலூருக்கு எழுந்தருளுவதற்கான ஏற்பாடுகள் செய்தல்

ஜீயர் கனவில் கண்ட விர்த்தாந்தங்களை தம் சீடர்களுக்கு கூறி, அதனை வெங்கடபதி மன்னனுக்கு அறிவித்து வரும்படி அவர்களுள் சிலரை உடனே அனுப்பி வைத்தார்.

அதே சமயத்தில் சந்திரகிரி மன்னன் திருவேங்கடமுடையான் தனக்கு சாதித்த சொப்பனத்தை நினைந்து அதிசயமுற்று, உடனே தனது பரிவாரத்துடன் ஜீயருக்கு அதனை விண்ணப்பிக்க பிரயாணம் ஆனான்.

மன்னன் வழியிடையில் ஜீயருடைய சீடர்களை சந்தித்து, செய்தியை அறிந்து, பேரானந்த பெருங்கடலுள் அழுந்தினான். இருதிறத்தவரும் சேர்ந்து ஜீயர் மடத்தை வெகு விரைவில் அடைந்தனர்.

ஜீயர் திருத்தாள்களில் அரசன் விழுவதும் எழுவதுமாய், சந்தோஷப் பெருக்கினால் ஒன்றும் சொல்லமுடியாமல் நின்றனன். ஜீயரும் அவனைக் குளிரக் கடாசஷித்துத் தாம் திவ்யதேசப் புநருத்தாணரத்தின் பொருட்டு புறப்பட வேண்டியுள்ளதைத் தெரிவித்தார். மன்னனும் ஸ்வாமிக்குத் தண்டிகை முதலான சகல உபகரணங்களும் வேண்டிய பரிவாரங்களும் கொடுத்துப் பிரயாணப்படுத்தி அனுப்பி வைத்தான்.

அந்த சமயத்தில் திருக்கோவலூரனது செஞ்சியை ஆண்டு வந்த துவால் கிருஷ்ணப்ப நாயக்கருடைய அதிகாரத்திற்கு உட்பட்டு இருந்தது. அதனால் வெங்கடபதி மன்னன் அந்த செஞ்சி அரசனுக்கும், மற்றும் உள்ள அதிகாரிகளுக்கும் ஜீயரின் பிரயாண விவரங்களை எழுதி அவருக்கு வேண்டிய வற்றை அருகிலிருந்து செய்து வைக்குமாறு தெரிவித்து வைத்தான்.

## ஜீயர் திருமலையிலிருந்து விடைபெற்றுக் கொண்டு திருக்கோவலூருக்கு எழுந்தருளுதல்

### திருமலையப்பன் சந்தன ரதத்தை கொடுத்து நம்மாழ்வாரிடம் சமர்ப்பிக்கச் சொல்லுதல்

ஜீயர் ஸ்வாமி, திருமலை அப்பன் சந்நிதி பரிகரத்தார் அனைவரையும் கூட்டி, அவர்களுக்கு அப்பன் நியமனத்தையும், தமது பிராயணத்தையும் விவரமாகத் தெருவித்து, திருவேங்கடத்தானுக்கு திருவாராதனத்தையும், விழாக்களையும் குறையற பெருக்க நடத்தி வரும்படி நியமித்தார்.

அப்பனை மங்களாசாஸநம் செய்து, தீர்த்தப் பிரசாதங்களைப் பெற்றுத் திருமுன்பே கைகூப்பி நின்றனர். அப்பனும் அவரைக் குளிர நோக்கி ஜீயரே சுகமாகப் போய்வாரும் என்று விடை கொடுத்து, சந்தன ரதம் ஒன்றை அவரிடம் ஒப்படைத்து திருக்குருகூரில் நம் சடகோபனுக்கு இதைச் சமர்ப்பியும் என்று பணித்தருளினான்.

ஜீயர் பல திவ்யதேசங்களில் செய்த கைங்கர்யங்களை கீழே அனுபவிப்போம்.

## 1) ஜீயர் திருக்கோவலூரை புநருத்தாரணம் செய்தல்

17 ஆண்டுகள் திருமலையில் ஸ்ரீமத் கேள்வியப்பன் பெரிய ஜீயர் மடத்தை அலங்கரித்து, எம்பெருமான் நிமனப்படியே தமது 47வது வயதில் சந்தன ரதத்தை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு, சகல பரிவாரங்களும் புடைசூழத் திவ்யதேசப் புநருத்தாரணத்திற்காகப் புறப்பட்டார்.

முதன்முதலாக திருக்கோவலூரின் நிமித்தமாகச் செஞ்சி மன்னன் துவால் கிருஷ்ணப்பநாயகர் சமஸ்தானத்தை நாடிச்சென்றார்.

சந்திரகிரி அரசன் அனுப்பிய கடிதத்தினால் ஜீயரின் வரவை அறிந்து காத்துக்கொண்டிருந்த செஞ்சி வேந்தன், சுவாமியைத் தக்க மரியாதைகளுடன் எதிரில் சென்று வரவேற்று உபசரித்தான்.

ஜீயரும் திருக்கோவலூர் ஆயனார் சந்நிதியின் விவரத்தை அம்மன்னனுக்குத் தெளிவுபெற எடுத்துக்கூறி, அத்தலத்தை தம்மிடம் ஒப்புவிக்கும்படி பணித்தார். அவனும் மறுமாற்றம் ஒன்றும் சொல்ல இயாலாதவனாய், ஜீயருடன் திருக்கோவலூர் வந்து சேர்ந்தனன்.

### சைவர்களின் எதிர்ப்பு

துவால் கிருஷ்ணப்ப நாயக்கர் வரவின் விவரத்தை அறிந்த அத்தலத்துச் சைவர்கள், தங்கள் வழி பாட்டில் வந்து கொண்டிருக்கும் அந்த சந்நிதி வைணவத்தலமன்று எனப்பலமாக மறுத்தும் அதனை விடக்கூடாதென அரசனை நிர்ப்பந்தித்தனர். ஜீயரை எதிர்த்து வாதிட்டனர். அரசனும் ஒன்றும் தோன்றப் பெறாதவனாய்க் கலங்கி ஜீயரைப் பணிந்து, சுவாமி! சிவச்சின்னங்கள் பலவற்றால் சூழ்ந்து விளங்கும் இந்தக் கோவிலில் விஷ்ணுச்சின்னங்கள் ஒன்றும் காணப்பட வில்லையே. தேவரீருடைய விருப்பத்தை அடியேன் எங்ஙனம் நிறைவேற்ற இயலும்? என்று தழுதழுத்த குரலில் விண்ணப்பித்துக் கொண்டான்.

ஜீயரும் ஆழ்வார் அருளிச் செயல்களையும், புராண வரலாறுகளையும், மற்றும் பல விருத்தாந்தங்களையும் எடுத்துக் கூறி தெளிவை ஊட்டினார். ஆனால் சைவர்கள் இதனை ஒப்புக்கொள்ளவில்லை. மன்னனிடம் சைவர்கள் பிரத்தியசஷமாகத் தாங்கள் கண்டு வந்ததும், கண்டு வருவதுமே எங்கள் பசஷத்திற்கு அசைக்கமுடியாத அத்தாச்சியன்றோ? இது சிவத்தலந்தான் என்பதில் தாங்கள் ஐயுற வேண்டாம் என்று மன்றாடினர்.

மன்னன் அவர்களை நோக்கி நீங்கள் சொல்வதும் உண்மையே. ஆயினும் உங்கள் பசஷத்தைக் கொண்டு இப்பெரியார் கூற்றினை மறுத்தற்கில்லேயே. ஆழ்வார் மங்களாசாசநத்திற்குற்றதான விஷ்ணுத் தலம் வேறு ஒன்றும் ஈண்டு காணப்படவில்லையே. இருந்து காலப்போக்கில் அழிந்து விட்டது என்று கேள்வியுற்றதும் இல்லையே. இருந்தது உண்டாயின் சொல்லிக் காணுங்கள் என்றான்.

## சைவர்கள் ஜீயரை சுண்ணாம்புக் காளவாயின் இடை இருந்து தம் பஷத்தை நிறுபிக்கச் செய்தல்

மன்னனின் மனோ நிலையை அறிந்த சைவர்கள் இனி அவன் வழிச் செல்வதொழிய வேறு ஒன்றும் செய்வதற்கில்லை என்று தீர்மானித்து, வஞ்சகமுறையில் ஜீயரை முடித்துவிட முடிவு செய்தனர்.

அரசனை நோக்கி தலைவா! தாங்கள் பகர்வதும் சரியே. ஆயினும் எங்கள் இருதிறத்தோரின் வாதில் உள்ள உண்மையினை ஓர் அருஞ்செயல் மூலமாக நிலை நிறுத்துவதே சாலச் சிறந்ததாகும். நாங்கள் கண் கூடான சாசஷியைக்காட்டி வாதிக்கின்றோம். இந்த ஜீயர் நூல் அளவைக்கொண்டு வாதிக்கிறார். ஆதலின் இவரே தமது வாதத்தின் உண்மையை அருஞ்செயல் மூலம் நிலை நிருத்த வேண்டியவர். எனவே, இவர் தீ முட்டிய சுண்ணாம்புக் காளவாயின் இடை இருந்து தமது பசஷத்தை உறிதிப்படுத்து வாராயின் நாங்கள் இசைகிறோம். இதனால் உலகோர் பழிதூற்றுதலும் தங்களுக்கு நேராது என்றனர்.

இதைக் கேட்ட மன்னன் மனம் முடைந்து ஒன்றும் சொல்ல இயலாதவனாய் தயங்கி நின்றான்.

இதைக்கண்ட ஜீயர் மன்னனை அறமொழிகளால் தேற்றி அரசே! அஞ்ச வேண்டாம். எம்பெருமான் திருவருள் முன்னிற்கும். நான் இவர்கள் விருப்பப்படியே செய்கின்றேன். ஆனால் இவர்கள் நான் சொல்லும் நிபந்தனைக்கு உட்படவேண்டும். அதாவது யான் வெற்றி பெற்றால் இவர்கள் அத்தனைபேரும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆக வேண்டும் என்றார். ஜீயர் காளவாயின் வெந்தீயால் மாண்டு விடுவார் என்ற திட நம்பிக்கைக் கொண்ட சைவர்கள் அவ்வாரே தாங்கள் உடன் படுவதாக மன்னனிடம் வாக்குறிதி அளித்தனர்.

## ஜீயர் வெற்றி பெறுதல்

ஜீயரும் தாமதமின்றிச் சுண்ணாம்புக் காளவாய் அமைக்கச் செய்யும்படி அரசனைக் கோரினார். அரசன் அவ்வண்ணமே ஏவ, உடனே சுண்ணாம்பு

காளவாய் ஒன்று அமைத்து அதில் படுக்கும்படி ஜீயரைக் கோரினர். தங்கள் சூழ்ச்சி பலித்துவிட்டது என்று சைவாதிகள் உள்ளம் பூரித்துத் தங்கள் களிப்பை வெளிக்காட்டாமல் இருந்தனர்.

ஜீயர் பெருமானும் குளிர் அருவி வேங்கடக்கோன் திரு ஆனையைச் சிந்தை செய்து இடைகழி எந்தையன் இன்னருளே அரணாகக் கொண்டு, அங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூறும் அடியவர்கட்கு ஆரமுதமானவனே! தூவடிவின் பார்மகள் பூமங்கையோடு சுடராழி சங்கு இருபால் பொலிந்து தோன்ற காவடிவின் கற்பகமே போல நின்று கலந்தவர்கட்கு அருள்புரியும் கருத்தினானே! சிரேறு மறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவலூர் அதனுள் உன்னைக் கண்டிடக்கூடும் நாள் இன்று கொல்! இன்று கொல்! பின்னை என்று கொல்? என்று ஆயனார் திருவடிகளில் விண்ணப்பித்துக் கொண்டே அக்காளவாயின் இடையே சாய்ந்தருளனார். சூழ்ச்சியாளர்கள் தீ மூட்டினர். காளவாய் செந்தழலும் வெந்தழலும் கொண்டு, புறமெங்கும் கடுங்கனல் பறவி கொழுந்து விட்டு ஓங்கி எரியலுற்றது.

ஆயனார் திருவருளால் காளவாயின் வெந்தீ, ஜீயர் பெருமானுக்குச் சிறு வெப்பமும் தரவில்லை. மெல்லிய பூங்காற்றினிடை பூம்படுக்கையில் இருந்து எழுவது போல் திருமேனி கோலமழியாமல், வாடாமல், அப்பொழுதே பூத்த செந்தாரை ஒத்த திருமுகம் செவ்வியுற்று ஒளிர, செந்துவராடை மின்ன எழுந்து ஆயனார் எழுந்தருளியுள்ள திக்குநோக்கி இருகரங்களையும் கூப்பித் தொழுத வண்ணம் காளவாய் எரிந்து தணியும் வரையில் நின்று கொண்டிருந்தார்.

ஜீயருக்கு என்ன விளையுமோ என்று வயிறு பிசைந்தவனாய் வாட்டமுற்று நின்றிருந்த மன்னன் இந்த அற்புதக்காட்சியைக் கண்டு வியந்து மகிழ்ந்து பலமுறையும் தொழுவன் ஆனான்.

ஒழிந்தார் ஜீயர் என்று உள்ளம் களித்து நின்ற வஞ்சக வாதிகள் உடல் நடுங்கி, உள்ளம் நடுங்கி, எண்ணம் இழந்து நின்றனர். பின்னர், மன்னன் வேண்ட ஜீயர் பெருமான் காளவாயிலிருந்து வெளியேறி, நடுங்கி நின்ற சைவர்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்களோடு அரசனையும் கோயிலுக்குள் அழைத்துச் சென்றார். (மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சி போன்ற ஒன்று எம்பெருமானார் காலத்தில் ஸ்ரீகூர்மம் என்ற திவ்ய தேசத்தில் நடந்தது. அங்கு எம்பெருமானார் சைவர்களை விரட்டு நம் ஸ்ரீவைஷ்ணவத்தை நிலை நாட்டினார். அந்த நிகழ்ச்சியை இங்கே நமக்கு நினைக்கத் தோன்றுகிறது)

## ஆயனார் காட்சி தருதல்

அவர்களைக் கர்ப்ப மண்டபத்து வாயிலை மூடியிருந்த கல்திரையின் முன் நிறுத்தி, அந்தச் சுவற்றில் ஜீயர் தமது முக்கோலால் (த்ருதண்டத்தால்) ஓர் அளவு காண்பித்துத் திறக்கும்படி பணித்தார். மன்னனும் அங்ஙனமே செய்வித்தனன். நீள்வாள் குறளுருவாய் நின்றிரந்து மாவலி மண் ஓங்கி அளந்த உத்தமன் காட்சியளித்ததை மன்னனும் மற்றவரும் கண்டனர், திடுக்கிட்டனர். ஜீயர் பெருமானின் அருள் சக்தியைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். அவரைப்பலகாலும் வலம் வந்து ஏத்தித்தொழுதனர்.

ஆயனார் சேவையைக் கண்ட ஜீயர் பேரானந்தப் பெருங்கடலுள் ஆழ்ந்து, தம்மை மறந்து, பின்பு தெளிந்து, அன்றிவ் வுலகம் அளந்தாய் அடிபோற்றி (திருப்பாவை 24ஆம் பாசுரம்) என்று மங்களாசானம் செய்து, மஞ்சாடு வரையேழும் கடல்களேழும் (பெரியதிருமொழி 2-10-1) என்னும் பாசுரத்தை அநுசந்தித்து தொழுது ஏத்தி நின்றார்.

## புல்லைக்காட்டி நந்தியைக் கீழையூர்க்கு கொண்டு விடுதல்

திருக்கோவலூர் கோயிலில் உள்ளும் புறமும் அமைக்கப்பட்டு இருந்த சிவச்சின்னங்கள் அனைத்தையும் அரசனைக்கொண்டு, கீழையூர் சிவன் கோயிலில் சேர்க்கச் செய்தனர். நந்தி மாத்திரம் எவ்வகையாலும் அகற்ற முடியாததாய் இருந்தது. அதனைத் தாமே புல்லைக்காட்டித் தந்திரமாக அழைத்துச் சென்று அந்தக் கோயிலில் நிலைக்க வைத்தார். அது முதல் ஜீயருக்குப் புல்லைக்காட்டி நந்தியை கீழையூர் விடுத்தவர் என்னும் திருநாமம் வழங்கப் பெற்றது.

## ஜீயர் எல்லை நிபந்தனை செய்வித்தல்

ஜீயர் செஞ்சி மன்னனிடம் இனி இத்தகைய ஆக்ரமிப்புக்கு இடம் நேராத வண்ணம் ஆயனார் திருத்தலத்திற்கு ஓர் எல்லை குறிப்பிட்டு அந்த எல்லைக்குள் சைவர்கள் குடியிருக்கக் கூடாது என்னும் கட்டளையிட்டு வைத்தல் நல்லது எனப்பனித்தருள மன்னனும் இதற்கு இசைந்தனன். இந்த நிபந்தனைக்கு இசைய மனமில்லாத சிலசைவர்கள் அப்பொழுதும் ஒரு சூழ்ச்சி செய்யலுற்றனர். மன்னனிடம் வேந்தே! இந்த நிபந்தனை

ஏற்கக்கூடியதாக இல்லை. தங்கள் ஆனையையும் மறுப்பதற்கும் இல்லை. எங்கள் கோரிக்கை ஒன்றை ஏற்று அருள்க. ஒருவன் தலையில் நெருப்புக் கரகம் வைத்து வயிற்றில் சூலத்தைக் குத்தி எல்லை ஓட விட வேண்டும். இவ்வண்ணம் அமைக்க படும் எல்லையே பசஷபாதம் அற்றதாகும் என்று கூறினர். மன்னனும் ஜீயர் பெருமானின் அநுமதி கொண்டு சம்மதித்தான். எனினும் அவர்கள் ஒருவரும் அந்தச் செயலுக்கும் உடன்பட்டு முன்வரவில்லை.

அத்தலத்தைச் சேர்ந்த திருக்குலத்தடியார் சேரியில், ஆயனார் திருவடிகளில் பெரும் பக்தி சீலனாய் வாழ்ந்த வந்த பெரியன் என்ற ஓர் அடியார் முன் வந்து உலகங்களை எல்லை நடந்து தன்னது என ஏடிட்டு வைத்த என் அய்யனுக்கு யான் எல்லை இடுகின்றேன் என்று சொல்லி, எல்லையிட்டு வைத்தார். சைவக்குறும்பர் ஏமாற்றம் அடைந்தனர். அரசனும் அந்த எல்லைக்குள் சைவர்கள் ஒருவரும் குடியிருக்கூடாது என்று ஆனையிட்டு வைத்தான்.

## செஞ்சி மன்னனும் சைவவாதிகளும் ஜீயரிக்கு சீடர் ஆகுதல்

ஜீயர் பெருமானுடைய அற்புதமான வைபவத்தைக் கண்கூடாகக் கண்ட செஞ்சி மன்னனான துவால் கிருஷ்ணப்ப நாயக்கன் ஜீயர் தீவடிகளை ஆச்ரயித்து அவருக்குச் சீடன் ஆனான். ஜீயருக்குக் கொடுத்திருந்த வாக்குறிதிப்படி வாதிட்ட சைவர்களையும் அவருக்குச் சீடராக்கி வைத்தனன். வைணவர் ஆவதற்கு துணியாத சைவர்கள் பெரும் பாலோர் அத்தலத்தைவிட்டு வெளியேறி பல விடங்களுக்குச் சென்று விட்டனர். அவர்கள் ஒவ்வொருவர் கனவிலும் ஜீயர் எழுந்தருளி, அவர்களுக்குப் பஞ்ச சம்ஸ்காரங்களை செய்து வைத்து ஆட்கொண்டார்.

## எம்பெருமானார் ஜீயர் என்னும் திருநாமம் பெறுதல்

ஜீயர் கிருஷ்ணப்ப நாயக்கரின் உதவியைக்கொண்டு ஆயனார் சந்நிதிக்கு வேண்டிய திருப்பணிகளை முடித்து வைத்தார். ஆயனாருக்கு நித்திய கைங்கர்யங்களும் திருவிழாக்கள் முதலானவைகளும் பெரும் சிறப்பாக நடந்து வருகைக்கு ஆவனவற்றை நியமித்து வைத்தார்.

ஆயனாரைத் திருவடி தொழுது மங்களாசாசனம் செய்து வருகையில், எம்பெருமான் மிக்க மகிழ்ச்சியுடன் ஜீயரைக் குளிர கடாசஷித்து **வாரீர் எம்பெருமானாரே?** என்று அழைத்தருளினன். அது முதல் ஜீயர் **எம்பெருமானார் ஜீயர்** என்று அழைக்கப்பெற்றார்.

## 2) ஜீயர் ஸ்ரீமுஷ்ணத்தை புநருத்தாரணம் செய்தல்

ஆயனார் ஜீயருக்கு சகல மங்களங்களும் கண்டருளும்படி செய்து வைத்தார். ஜீயர் 3 வருடகாலம் திருக்கோவலூரில் இருந்து கைங்கர்யங்கள் செய்து வந்தார். பிறகு சந்நிதி நிர்வாகத்தை நெருங்கி நின்று கவனிக்கும்படி செஞ்சி மன்னனுக்கு நியமித்து அருளி, ஆயனாரிடம் விடைபெற்று தமது ஐம்பதாவது வயதில் ஸ்ரீமுஷ்ணத்திற்கு எழுந்தருளினார்.

ஸ்ரீமுஷ்ணம் சந்நிதியை புநருத்தாரணத்தை செய்து வைத்து ஞானப்பிரானை ஈனச்சொல்லாயினுமாக (திருவிருத்தம் 99ஆம் பாசுரம்) என்னும் பாசுரத்தை அநுசந்தித்து மங்களாசாசநம் செய்து வருகையில் பூவராகப் பெருமானும் மிகவும் கடாசஷித்தருளி தீர்த்தம், திருமாலை, திருப்பரிவட்டம், ஸ்ரீசடகோபன் சாதித்து அவருக்கு அத்தலத்தில் ஒருமடமும், சந்நிதியில் இரண்டாம் தீர்த்தமும், கருவூலத் திறப்பு முத்திரைகள் முதலான சுதந்திரங்களையும் வழங்கி வைத்தான்.

## 3) திருக்கண்ணமங்கை சந்நிதியை புநருத்தாரணம் செய்தல்

ஜீயர் ஒரு வருட காலம் ஸ்ரீமுஷ்ணத்தில் இருந்து கைங்கர்யங்கள் செய்து வந்தார். பிறகு ஞானப்பிரான் நியமனம் பெற்றுக்கொண்டு, திருக்கண்ணமங்கைச் சென்று சேர்ந்தார். அங்கு ஸ்ரீபக்த வத்ஸலன் ஆலயப் புநருத்தாரண கைங்கர்யங்களைப் பூர்த்தி செய்தார். அங்கு பேய்முலைத்தலை நஞ்சுண்ட பிள்ளையைத் தெள்ளியார் வணங்கப்படும் தேவனை, மாயனை மதில் கோவல் இடைகழி மைந்தனை (பெரிய திருமொழி 7-10-4) என்னும் பாசுரத்தை அநுசந்தித்து மங்களாசானம் செய்தருளுகையில், அந்தணர் கற்பாகிய அப்பன் உகந்தருளி, ஜீயரை வாழ்த்தி, அத்தலத்தில் அவர்க்கு மடமும், செங்கோல் முத்திரையும், கருவூலத் திறப்பு முதலான உரிமைகளும் வழங்கி வைத்தான். இவர் அங்கு ஒரு வருடகாலம் மங்களாசாசநம் செய்து கொண்டு இருந்தார்.

## 4) நவதிருப்பதியை புநருத்தாரணம் செய்தல்

பின்பு திருக்கண்ணமங்கை எம்பெருமான் நியமனம் பெற்றுக் கொண்டு, ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளினார். அக்காலத்தில் நவதிருப்பதி போத்திமார்கள் கைவசம் இருந்து வந்தது. அவர்களைச் சாஸ்த்ரோத்தமான வழியிலும், தர்மயுக்தியாலும், நல்லுரையாலும் தெளிவித்து, ஜெயித்து, அத்திருப்பதிகளை தம் வசமாக்கினார் ஜீயர். பின்பு புநருத்தாரணம் செய்தார்.

## நவதிருப்பதி ஜீயர் என்னும் திருநாமம் பெறுதல்

திருக்குருகூரில் பொலிந்து நின்ற பிரானை மங்களாசாசனம் செய்தருளுகையில் ஆடுபுட்கொடி ஆதிமூர்த்தியும் ஜீயரை விசேஷ கடாக்ஷம் செய்தருளி, தீர்த்தம், திருமாலை, திருப்பரியட்டம் , ஸ்ரீசடகோபனையும் சாதித்து தன் சோதி வாய் திறந்து **வாரீர் நவ திருப்பதி ஜீயரே! நமது சந்நிதி ஸ்ரீகாரியங்களைக் கவனித்து நடத்துக்கொண்டு போரும்** என்று பணித்தனன். ஜீயரும் தந்யோஸ்மி என்று ஆதிப்பிரானைத் தொழுதார். அன்று முதல் ஜீயருக்கு நவதிருப்பதி ஜீயர் என்னும் திருநாமம் வழங்களாயிற்று. பிறகு நம்மாழ்வாரை மங்களாசாசனம் செய்து அவருக்கு திருவேங்கடமுடையான் கொடுத்தனுப்பிய சந்தன ரதத்தை சமர்பித்தார்.

## நவதிருப்பதி அதிபதியான வீரவேங்கட தேவராயன் ஜீயரை ஆச்ரயித்தல்

ஜீயருடைய வைபவங்களையும், திருமேனி பொலிவையும், லௌகிக வல்லமையையும் நேரில் கண்டு அதிசயித்த நவதிருப்பதி தேசத்து அதிபதியான வீரவேங்கட தேவராயன் என்னும் சைவ அரசன் ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்து சீடன் ஆனான். ஜீயருக்கு மடம் ஒன்று அமைத்துக் கொடுத்து நவதிருப்பதி மரியாதைகளையும் ஏற்படுத்தி வைத்தனன்.

## ஜீயர் ஸ்ரீவைங்குண்டத்திற்கு எழுந்தருளுதல்

பெரு மகிழ்ச்சியுடன் ஜீயர் நவதிருப்பதிகளையும் ஒவ்வொன்றாகச் சென்று மங்களாசாஸாசனம் செய்து வருகையில் ஸ்ரீவைகுண்டத்தில் விண்ணோர் பரவும் தலைமகனான ஸ்ரீவைகுண்ட நாதன் சந்நிதியல் எழுந்தருளியிருக்கும் சேனை முதலியார் போர உகந்தருளி **வாரீர் நவதிருப்பதி ஜீயரே!** என்று அருளப்பாடிட்டுத் தீர்த்த பிரசாதங்களை வழங்கி, அத்தலத்திலேயே நித்தயவாசம் செய்யும்படி நியமித்தருளினார்.

வீரவேங்கட தேவராயன் அவ்விடத்தில் ஸ்வாமிக்கு ஒரு மடம் அமைத்துக்கொடுத்து, சந்நிதி மரியாதைகளையும், செங்கோல் முத்திரை முதலான சகல உரிமைகளையும், பல மானியங்களையும் வழங்கினான். ஸ்வாமியும் மிகவும் சிறப்புடன் 14 வருடகாலம் ஸ்ரீவைங்குண்டத்தில் எழுந்தருளியிருந்து, நவதிருப்பதி ஸ்ரீகாரியங்களையும் நிர்வகித்து வந்தார். அங்கு வாழ்ந்து வந்த பெரும்பாலான மக்கள் ஸ்வாமியை ஆச்ரயித்து சீடர்கள் ஆயினர்.

## 5) ஜீயர் திருவரங்கத்திற்கு எழுந்தருளுதல்

தமது பெரும்புகழ் எட்டுத்திசைகளும் சுடர்விட்டுப் பிரகாசிக்க, ஜீயர் ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் செய்தியைக் கேள்வியுற்று திருவரங்கத்தில் வாழ்ந்து வந்த வேதவ்யாச பட்டர் பெரும் சந்தோஷ மடைந்தார். அவரைத் திருவரங்கத்திற்கு எழுந்தருளச் செய்வதற்காக ஸ்ரீவைங்குண்டத்திற்குப் பயணம் மேற்கொள்ள ஏற்பாடு செய்து கொண்டு இருந்தார்.

அப்போது நம்மாழ்வார் ஜீயர் கனவில் தோன்றி **ஜீயரே! நீர் திருவரங்கத்திற்குச் சென்று அங்கு நம் கூரத்தாழ்வான் சந்நிதியை பிரதிஷ்டை செய்யவும்** என்று நியமித்தார். உடனே ஜீயரும் தமது சொப்பன விருத்தாந்தத்தை வீரவேங்கட தேவராயனுக்கு அறிவித்து நவதிருப்பதி கைங்கர்யங்கள் குறையற நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்து தமது 66வது வயதில் திருவரங்தற்குப் பிரயாணமானார். தேவராயனும் ஜீயருக்குச் சகாயமாக பரிவாரங்களை அனுப்பி வைத்தான்.

ஜீயர் வரவை அறிந்த கோயில் திருமுற்றத்தாரும் , வேதவ்யாச பட்டரும் தக்க மரியாதைகளுடன் அவரை எதிர்சென்று அழைத்து அவருக்காகக் குறிப்பிட்டிருந்த திருமாளிகையில் எழுந்தருளச் செய்து உபசரித்தனர்.

வேதவ்யாச பட்டரும் ஏகாந்தத்தில், கோயிலில் முக்கியமாக நடைபெற வேண்டிய கூரத்தாழ்வான் சந்நதி பிரதிஷ்டைக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு, கைசிக புராண படன அருளப்பாடுகளின் குறைவு, அதிகார வர்க்கத்தாரால் நேர்ந்துள்ள
இடுக்கண்கள் முதவானவற்றை ஜீயரிடம் பெரும் துக்கத்துடன் விண்ணப்பித்துக் கொண்டார். ஜீயரும், திருவரங்கன் திருவருளால் அனைத்தையும் சீர் படுத்துவோம் எனப்பணித்து, தன்னுடைய கனவின் வரலாற்றையும் அறிவித்து, அவரைத் தேற்றித் தம் காரிய சித்திக்கு அநுகூலமான சமயத்தை எதிர் பார்த்திருந்தார்.

### வேதவ்யாஸ பட்டரின் விருப்பத்தை நிறைவேற்றுதல்

கூரத்தாழ்வான் சந்நிதி ப்ரதிஷ்டைக்கு இடையூறு செய்தவர்களை ஜீயர் திருத்திப்பணி கொண்டார். அதனால் தடைப்பட்டிருந்த கூரத்தாழ்வான் சந்நிதிப் ப்ரதிஷ்டையும் இனிது நடைபெற்றது. பட்டருக்குச் சாஸனமும் செய்து கொடுத்தார். பின்னர் ஸ்ரீகைசிக புருாண படனம், ப்ரஹ்மரத அருளப்பாடுகள் ஆகியவற்றைத் தாமே நடத்திக் கொண்டு, ப்ரஹ்மரதத்திற்கு

தடையாக இருந்து வந்த பிரம்மராசக்ஷசை அடக்கி விரட்டியோட்டினார். பட்டருக்கு அதிகார வர்க்கத்தாரால் நேர்ந்திருந்த இடுக்கண்களையும் நலமாக்கிக் கொடுத்தார். பட்டரும், தமது மணக்குறைகள் முற்றும் ஒழியப் பெற்று ஜீயர் திறத்தில் மிக்க க்ருதஜ்ஞுராய் இருக்கலுற்றார்.

## திருவரங்கத்தில் ஜீயர் பல மரியாதைகள் பெறுதல்

திருவரங்கத்தில் மடமும், சந்நிதியில் தீர்த்த மரியாதைகள் மற்றும் பல உரிமைகளும் ஜீயருக்கு அதிகார வர்க்கத்தாரால் கட்டளையிடப்பட்டன.

ஒரு வருடகாலம் அரங்கநகர் அப்பனை மங்களாசாசனம் செய்து கொண்டு, ஜீயர் திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்தார்.

ஜீயருடைய வைபச்சிறப்பினைக் கண்ட கோயில் திருமுற்றத்தாரும், ஸ்ரீரங்க நாராயண ஜீயர் முதலான ஆசாரிய புருஷர்களும், நம்பெருமாள் சந்நிதி பெரிய மண்டபத்தில் ஒன்று கூடி, பட்டருக்கு அபிமானத் தலமாகிய திருக்கோவலூர் ஆயனார் சந்நதி ஸ்ரீகாரிய துரந்தரத்வம் ஜீயருக்கே தான் இருத்தல் வேண்டும் எனத் தீர்மானத்துத் தங்கள் விருப்பத்தை ஜீயருக்கு அறிவித்துச் சம்மதிக்கச் செய்தனர்.

அந்த சந்நதியில் முதல் தீர்த்தம், கைசிகபுராண ப்ரஹ்மரத அருளப்பாடு முதலிய சகல உரிமைகளும் திருவரங்கத்திலும் மற்ற திவ்யதேசங்களிலும் ஆசாரிய புருஷர்களுக்கு நடந்தேறி வருவதைப் போன்று அருளப்பாடு மரியாதைகளும் நடந்து வரவேண்டும் என்றும் அதிகார வர்க்கம் இவற்றை கவனித்து வரவேண்டும் என்றும் ஜீயருக்குப் பட்டயம் பண்ணிக் கொடுத்தார்கள். இத்தகைய வரிசைகளைப் பெற்றுக்கொண்டு பெரும் சிறப்புடன் தமது 67ஆம் வயதில் திருக்கோவலூருக்கு மீண்டும் எழுந்தருளினார்.

## ஜீயர் மீண்டும் திருக்கோவலூருக்கு எழுந்தருளுதல்

எம்பெருமானார் ஜீயரின் வரவை அறிந்த செஞ்சி மன்னன் தூவால் கிருஷ்ணப்ப நாயக்கரும் , சந்திரகிரி மன்னன் வெங்கடபதி நாயக்கரும் திருக்கோவலூருக்கு விரைந்து வந்து ஜீயரை பணிந்தனர். ஆனந்தப் பெருக்கினால் கண்களில் நீர் பெருக நின்றனர். சுவாமி அவர்களை நல்லாசி கூறி வாழ்த்தி, அவர்களுக்கு நடந்த விருத்தாந்தங்கள் அனைத்தையும் விவரமாக் கூறினார். மன்னர் இருவரும் மகிழ் வெய்தி, சுவாமியின் வைபத்தைப் பலகாலும் போற்றி புகந்து கொண்டாடினர்.

ஜீயருக்குத் திருக்கோவலூரில் மடம் ஒன்று அமைத்து வைத்தனர். ஆயனார் சந்நிதியில் பல மண்டபங்கள் கட்டி வைத்தனர். மடத்துக்கும், சந்நதிக்கும் நித்திய ஆராதனைக்கும் , உற்சவாதிகளுக்கும் வேண்டிய மானியங்கள் எழுதி வைத்தனர். இவற்றைச் செய்து முடித்து, ஜீயரின் பேருவுப்புக்கு இலக்காகிப் பாக்கிய சாலிகளாய், அவர் நியமனம் பெற்றுத் தத்தம் நகரம் சேர்ந்தனர்.

## ஜீயர் திருக்கோவலூர் சந்நிதி நிர்வாகங்களைக் கவனித்தல்

ஜீயரும், தாம் புநருத்தாரணம் செய்துவைத்து வந்த திவ்ய தேசங்களின் ஸ்ரீகாரியங்களை விசாரித்துக்கொண்டும், ஆயனார் சந்நதி ஸ்ரீகாரியங்களை நேராக நடத்திக் கொண்டும், சந்நதி சகல மரியாதைகளுடன் ஆயனாரை மங்களாசாஸநம் செய்து கொண்டு, மடத்தில் எண்ணிறந்த சம்பத்துடன் எழுந்தருளி இருந்தார்.

## ஜீயர் திருநாடு அலங்கரித்தல்

பிறகு, தமது திருவடிகளில் தொண்டு செய்து வந்த சிஷ்யர்களுள் சிறந்து விளங்கிய திருமலை நம்பி என்பவரை சந்யஸிக்கச் செய்து திரிதண்ட, காஷாயாதிகளைக் கொடுத்து திருமலை நம்பி எம்பெருமானார் ஜீயர் என்கிற திருநாமத்தைச் சார்த்தி தமது பீடத்தை அலங்கரிக்கச்செய்தார். தம்முடைய சகல உரிமைகளையும் அவருக்கு ஆக்கி வைத்தார்.

தமது 116வது வயதில் கண்ணன் விண்ணுராகிற திருநாட்டை அலங்கரித்தார்.

## ஜீயரின் வைபத்தை படிப்பதனாலும், கேட்பதனாலும் ஏற்படும் பலன்

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம் (முதல் திருவந்தாதி- 53ஆம் பாசுரம்) என்கிறபடியே, எம்பெருமானுக்கு எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லா நிலைகளிலும், எல்லாவிதமான அடிமைகளையும் பலவகை வடிவுகொண்டு செய்து, உவப்பிக்கும் திருவனந்தாழ்வானுடைய அம்சபூதரான ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் வைபவத்தை பக்தி சிரத்தையுடன் படிப்பவர்களும், கேட்பவர்களும் ஸ்ரீமத் ஜீயர் பெருமானின் பரிபூரண கடாசஷத்தைப் பெற்று, ஸ்ரீபூங்கோவல் நாச்சியார் ஸமேத திருவிக்ரமன் இன்னருளுக்குப் பாத்திர பூதராய், இம்மை, மறுமை இன்பங்களைப் பெற்று இன்புறுவர்.

இந்த வைபவ நூலை கோயிலாழ்வாரில் வைத்து நித்யம் ஆராதித்து வரலாம். இதனால் எல்லா நன்மைகளும் உண்டாகும் என்பது திண்ணம்.

பொலிக! பொலிக! பொலிக !

மேலே குறிப்பிட்ட விஷயங்கள் புதுவை ஸ்ரீ N.துரைரங்கராமாநுஜ தாஸர் எழுதியுள்ள திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் வைபவம் என்னும் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது. இக்கட்டுரை ஸ்ரீசைலேசதயாபாத்ரம் 2013ஆம் ஆண்டு மார்கழி, தை மாத (இருமாத) இதழில் வெளிவந்துள்ளது. இதை பதிப்பித்த ஸ்ரீ உ.வே.R.ரகுராமன் ஸ்வாமிக்கு (பாலாஜி ஸ்வாமி) அடியேனுடைய நன்றி உறித்தாகுக.

திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் செய்த கைங்கர்யங்களின் தொகுப்பு (எந்த திருநட்சத்திரத்தில் (வயதில்) என்ன கைங்கர்யம் செய்தார் என்பதை கீழே அனுபவிப்போம்)

7ஆம் வயதில் - உபநயனம்

23ஆம் வயதில் - திவ்ய ப்ரபந்தம் , இரகசிய க்ரந்தங்கள் அனைத்தையும் கற்று உணர்தல்

26ஆம் வயதில் - புஷ்ப கைங்கர்யம் செய்தல்

30ஆம் வயதில் திருமலையில் பெரிய ஜீயர் ஆகுதல்

47ஆம் வயதில் திருக்கோவலூருக்கு எழுந்தருளி புநருத்தாரணம் செய்தல்

50ஆம் வயதில் ஸ்ரீமுஷ்ணம் எழுந்தருளி புநருத்தாரணம் செய்தல்

51ஆம் வயதில் திருக்கண்ணமங்கை எழுந்தருளி புநருத்தாரணம் செய்தல்

52ஆம் வயதில் நவ திருப்பதிக்கு எழுந்தருளி புநருத்தாரணம் செய்தல்

66ஆம் வயதில் திருவரங்கம் எழுந்தருளி வேதவ்யாச பட்டரின் விருப்பத்தை நிறைவேற்றுதல்

67ஆம் வயதில் திருக்கோவலூர் எழுந்தருளி கோயில் நிர்வாகம் செய்தல்

116ஆம் வயதில் பரமபதம் அடைதல்

---

**திருக்கோவலூர் திவ்ய தேச மங்களாசாசனப் பாசுரங்களை கீழே அனுபவிப்போம் - மொத்தம் 21 (திருமங்கையாழ்வார் - 18, பொய்கையாழ்வார் 2, பூத்தாழ்வார் - 1)**

திருமங்கையாழ்வார் - 18 பாசுரங்கள்

பெரியதிருமொழி - 2ஆம் பத்து 4ஆம் திருமொழி முதல் பாசுரம்

அன்றாயர் குலக்கொடியோடு அணிமாமலர் மங்கையொடு அன்பளவி
அவுணர்க்கு என்தானும் இரக்கமிலாதவனுக்கு உறையுமிடமாவது .
இரும்பொழில்சூழ் நன்றாயபுனல் நறையூர் திருவாலிகுடந்தை தடம்திகழ்
கோவல்நகர். நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்குஇடம்
மாமலையாவது நீர்மலையே.

பெரியதிருமொழி - 2ஆம் பத்து 10ஆம் திருமொழி- திருக்கோவலூர் பதிகம்

1)மஞ்சாடு வரை ஏழும் கடல்கள் ஏழும்
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம்
எஞ்சாமல் வயிற்று அடக்கி ஆலின் மேல் ஓர் இளந்தளிரில்
கண் வளர்ந்த ஈசன் தன்னை
துஞ்சாநீர்வளம்சுரக்கும் பெண்ணைத் தென்பால்
தூயநான்மறையாளர் சோமுச்செய்ய
செஞ்சாலிவிளைவயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே.

2) கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம்
தீபம் கொண்டு அமரர் தொழப் பணங்கொள் பாம்பில்
சந்தணி மென்முலை மலராள் தரணி மங்கை
வந்தனை செய்து இசையேழ் ஆறங்கம் ஐந்து
வளர் வேள்வி நான்மறைகள் மூன்று தீயும்
சிந்தனை செய்து இருபொழுதும் ஒன்றும். செல்வத்
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே.

3) கொழுந்தவலரும் மலர்ச் சோலைக் குழாங்கொள்பொய்கைக்
கோள் முதலை வாள் எயிற்றுக் கொண்டற்கு எள்கி
அழுந்திய மாகளிற்றினுக்கு அன்று ஆழி ஏந்தி
அந்தரமே வரத் தோன்றி அருள் செய்தானை
எழுந்த மலர்க் கருநீலம் இருந்தில் காட்ட

இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட
செழுந்தட நீர்க்கமலம் தீவிகை போல் காட்டும்
**திருக்கோவலூர்** அதனுள் கண்டேன நானே.

4) தாங்கரும்போர் மாலி படப் பறவை ஊர்ந்து
தராதலத்தோர் குறை முடித்த தன்மயானை
ஆங்கு அரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும்
அடியவர்கட்கு ஆரமுதம் ஆனான் தன்னை
கோங்கரும்புசுர புன்னை குரவார் சோலைக்
குழாவரி வண்டு இசை பாடும் பாடல் கேட்டு
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
**திருக்கோவலூர்** அதனுள் கண்டேன நானே.

5) கறை வளர் வேல் கரன் முதலாக் கவந்தன் வாலி
கணை ஒன்றினால் மடிய இலங்கை தன்னுள்
பிறை எயிற்று வாள் அரக்கர் சேனை எல்லாம்
பெருந்தகையோடு உடன் துணித்த பெம்மான் தன்னை
மறை வளரப் புகழ் வளர மாடந்தோறும்
மண்டபம் ஒண்தொளி அனைத்தும் வாரம் ஓத
சிறை யணைந்த பொழில் அணைந்த தென்றல் வீசும்
**திருக்கோவலூர்** அதனுள் கண்டேன நானே.

6) உறியார்ந்த நறுவெண்ணெய் ஒளியால் சென்று. அங்கு
உண்டானைக் கண்டு ஆய்ச்சி உரலோடு ஆர்க்க
தறியார்ந்த கருங்களிறே போல நின்று
தடங்கண்கள் பனி மல்கும் தன்மையனை
வெறியார்ந்த மலர்மகள் நாமங்கையோடு
வியன் கலை எண்தோளினாள் விளங்கு. செல்வச்
செறியார்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும்
**திருக்கோவலூர்**அதனுள் கண்டேன நானே.

7) இருங்கைம்மா கரி முனிந்து பரியைக் கீறி
இன விடைகள் ஏழடர்த்து மருதம் சாய்த்து
வரும் சகடம் இற உதைத்து மல்லை அட்டு
வஞ்சம் செய் கஞ்சனுக்கு தஞ்சானானை
கருங்கமுகு பசும்பாளை வெண்முத்து ஈன்று
காய் எல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்ட
செருந்திமிக மொட்டு அலர்த்தும் தேன்கொள் சோலைத்.
**திருக்கோவலூர்** அதனுள் கண்டேன நானே.

8) பாரேறு பெரும் பாரம் தீரப் பண்டு
பாரதத்துத் தூது இயங்கி. பார்த்தன் செல்வத்
தேரேறு சாரதியாய் எதிர்ந்தார் சேனை
செருக் களத்துத் திறல் அழியச் செற்றான் தன்னை

போரேறு ஒன்று உடையானும் அளகைக் கோனும்
புரந்தரனும் நான்முகனும் பொருந்தும் ஊர் போல்
சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத்
**திருக்கோவலூர்** அதனுள் கண்டேன நானே.

9) தூவடிவின் பார்மகள் பூமங்கையோடு
சுடர் ஆழி சங்கு இருபால் பொலிந்து தோன்ற
காவடிவின் கற்பகமே போல நின்று
கலந்தவர்கட்கு அருள் புரியும் கருத்தினானை
சேவடி கை திருவாய்கண் சிவந்த ஆடை
செம்பொன் செய் திரு உருவம் ஆனான் தன்னை
தீவடிவின் சிவன் அயனே போல்வார் மன்னு
**திருக்கோவலூர்** அதனுள் கண்டேன நானே.

10) வாரணம் கொள் இடர் கடிந்த மாலை. நீல
மரதகத்தை மழை முகிலே போல்வான் தன்னை
சீரணங்கு மறையாளர் நிறைந்த. செல்வத்
**திருக்கோவலூர்** அதனுள் கண்டேன் என்று
வாரணங்கு முலை மடவார் மங்கை வேந்தன்
வாள் கலியன் ஒலி ஐந்தும் ஐந்தும் வல்லார்
காரணங்களால் உலகம் கலந்து அங்கு ஏத்தக்
கரந்து எங்கும் பரந்தானைக் காண்பர் தாமே.

<u>பெரியதிருமொழி - 7ஆம் பத்து 3ஆம் திருமொழி 2ஆம் பாசுரம்</u>

தாய் நினைந்த கன்றே ஒக்க என்னையும்
தன்னையே நினைக்கச் செய்து. தான் எனக்
காய் நினைந்து அருள் செய்யும் அப்பனை
அன்று இவ்வையகம் உண்டு உமிழ்ந்திட்ட
வாயனை. மகரைக் குழைக் காதனை
மைந்தனை **மதிள் கோவல் இடைகழி**
**ஆயனை.** அமரர்க்கு அரியேற்றை என்
அன்பனை அன்றி ஆதரியேனே.

<u>பெரியதிருமொழி - 7ஆம் பத்து 10ஆம் திருமொழி 4ஆம் பாசுரம்</u>

பேய் முலைத்தல நஞ்சுண்ட பிள்ளையைத்
தெள்ளியார் வணங்கப்படும் தேவனை
மாயனை **மதிள் கோவல் இடைகழி மைந்தனை**
அன்றி அந்தணர் சிந்தையுள்
ஈசனை. இலங்கும் சுடர்ச் சோதியை
எந்தையை எனக்கு எய்ப்பினில் வைப்பினை
காசினை மணியைச் சென்று நாடிக்
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே.

திருநெடுந்தாண்டகம் - 6ஆம் பாசுரம்

அலம்புரிந்த நெடுந்தடக்கை அமரர் வேந்தன்
அஞ்சிறைப் புள் தனிப் பாகன் அவுணர்க்கு என்றும்
சலம் புரிந்து அங்குருள் இல்லாத் தன்மையாளன்
தான் உகந்த ஊரெல்லாம தன் தாள்பாடி
நிலம் பரந்து வரும் கலுழிப் பெண்ணையீர்ந்த
நெடுவேய்கள் படுமுத்த முந்த உந்தி
புலம் பரந்து பொன் விளைக்கும் பொய்கை வேலிப்
**பூங்கோவலூர்** தொழுதும் போது நெஞ்சே!

திருநெடுந்தாண்டகம் - 7ஆம் பாசுரம்

வற்புடையவரைநெடுந்தோள்மன்னர்மாள
வடிவாயமழுவேந்திஉலகமாண்டு
வெற்புடையநெடுங்கடலுள்தனிவேலுய்த்த
வேள்முதலாவென்றானூர் விந்தம்(தை)மேய
கற்புடையமடக்கன்னிகாவல்பூண்ட
கடிபொழில்சூழ்நெடுமறுகில்கமலவேலி
பொற்புடையமலையரையன்பணியநின்ற
**பூங்கோவலூர்** தொழுதும் போது நெஞ்சே!

திருநெடுந்தாண்டகம் - 17ஆம் பாசுரம்

பொங்கார் மெல்லிளம் கொங்கை பொன்னே பூப்பப்
பொருகயல் கண் நீர் அரும்பப் போந்து நின்று
செங்கால மடப்புறவம் பெடைக்குப் பேசும்
சிறு குரலுக்கு உடல் உருகிச் சிந்தித்து. ஆங்கே
தண்காலும் தண்குடந்தை நகரும் பாடித்
**தண்கோவலூர்** பாடி ஆடக் கேட்டு
நங்காய் நங்குடிக்கு இதுவோ நம்மை? என்ன
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே.

சிறிய திருமடல் - 69ஆம் கண்ணி

சீரார் திருவேங்கடமே **திருக்கோவலூரே**

பெரிய திருமடல் - 122ஆம் கண்ணி

**கோவலூர் மன்னும் இடைகழி யெம்மாயவனை**

பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி

77ஆம் பாசுரம்

வேங்கடமும் விண்ணகரும் வெ.ஃ.காவும்
பூங்கிடங்கின் நீள்கோவல் பென்னகரும் - நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர்

86ஆம் பாசுரம்

நியும் திருமகளும் நின்றாயால். குன்னெடுத்துப்
பாயும் பனி மறைத்த பண்பாளா! - வாசல்
கடைகழியா உள்புகாக் காமர் பூங்கோவல்
இடைகழியே பற்றி இனி.

பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி - 70ஆம் பாசுரம்

தமர் உள்ளம் தஞ்சை தலை அரங்கம் தண்கால்
தமர் உள்ளும் தன் பொருப்பு வேலை - தமர் உள்ளும்
மாமல்லை கோவல் மதிள் குடந்தை என்பரே
ஏவல்ல எந்தைக்கு இடம்.

திருக்கோவலூர் ஜீயர் ஸ்வாமியின் ஆசார்யரான ஏட்டூர் சிங்கராச்சார்யரைப்பற்றிய ஒரு சிறு குறிப்பு

ஏட்டூர் சிங்கராசார்யர் மாமுனிகளை ஆச்ரயித்தல்

எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்து அவராலே 74 ஸிம்ஹாஸனாதிபதிகள் என்று நியமனம் செய்யப் பெற்றவர்களில் திருமலை நல்லான் சக்ரவர்த்தி என்னும் ஆசார்யரும் ஒருவர். இவர் வம்சத்தில் அவதரித்தவர்கள் திருமலை நல்லான் சக்ரவர்த்தி என்று பிற்காலத்தில் வழங்கப்பட்டுவந்தனர். இந்த வம்சத்தில் வந்தவர்களில் ஏட்டூர் சிங்கராசார்யர் என்பவரும் ஒருவர். இவர் மிகவும் பிரசித்தி பெற்ற வித்வானாய் விளங்கினார்.

மாமுனிகள் திருவரங்கத்தில் அருள் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் பெரிய திருமலை நம்பியின் வம்சத்தில் அவதரித்த ஏட்டூர் சிங்கராசார்யர் செல்வச் செருக்கு உள்ளவராக திருமலையில் வாழ்ந்து வந்தார்.

இவர் பெரிய ஜீயரின் ஈடு இனையற்ற பெருமைகளையும் சொல்வன்மையையும் உரையிடும் திறனையும் கேள்விப்பட்டு பெரிய ஜீயரை ஆச்ரயிக்க விரும்பினார்.

தம்முடைய பெருமைகளையும் முக்குரும்புகளையும் (குலச் செருக்கு, கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு ஆகியவை சேர்ந்தது தான் முக்குறும்பு எனப்படும்) தவிர்த்துக்

கொண்டு, திருவரங்கத்தைச் சென்று அடைந்தார். அங்கு பெரிய ஜீயாரை தண்டனிட்டார். அவரிடம் தம்முடைய நிலைமையை அறிவித்து சரண் புகுந்தார். ஜீயரும் பரம கிருபையோடு அவரை ஆட்கொண்டார்.

## பெரிய ஜீயரிடம் தாம் கொண்டுவந்த செல்வத்தை சமர்பித்தல்

ஏட்டூர் சிங்கராசார்யர் தாம் கொண்டு வந்த நிதிகளை பெரிய ஜீயரிடம் சமர்பித்தார். ஜீயர் அந்த செல்வத்தை ஆழ்வார் திருக்கோபுர கைங்கர்யத்துக்காக என்று அங்கீகரித்து அதை ஆழ்வார் திருநகரிக்கு அனுப்பி வைத்தார். பின்னர் அந்த கைங்கர்யம் சிறிது குறைவாக இருந்ததை அறிந்த ஜீயர் நாயனார் (பெரிய ஜீயரின் பூர்வஸ்ரம திருப்பேரன்) அக்குறையை நிறை வேற்றிக் கொடுத்தார்.

## பெரிய ஜீயர் அஷ்டகோத்ர நிபந்தனையை ஏற்படுத்துதல்

பெரிய ஜீயர் வித்வானாய் விளங்கிய போளிப்பாக்கம் நாயனார் (இவருக்கு போரேற்று நாயனார் என்றும் சமர புங்கவாசாரியார் என்றும் திருநாமங்கள் உண்டு) என்பவரை அழைப்பித்தார். அவரைக் கொண்டு ஸ்ரீவத்ஸ வாதூலதி ஏழுகோத்ரங்களை ஒன்று சேர்த்து ஸப்த கோத்ர வ்யவஸ்தை பண்ணியருளினார்.

பின்பு இந்த ஏட்டூர் சிங்கராசார்யர் வைபவத்தை உணர்ந்து இவருக்கும் பெருமை விளைய வேண்டும் என்று எண்ணிய மாமுனிகள், அஷ்டகோத்ரத்தாராக நியமனம் பண்ணி அஷ்டகோத்ர வ்யவஸ்தை பண்ணினார் என்று பிள்ளைலோகம் ஜீயர் அருளியுள்ள யதீந்திரப்ரவணப் ப்ரபாவம் என்ற நூலால் அறியலாகிறது.

இந்த அஷ்ட கோத்தர நிபந்தனை கலி 4544 ஆம் ஆண்டு ருதிரோக்காரி வருஷம் வைகாசி மாதம் சுக்ல பக்ஷம் நவமி திதி புதன் கிழமை விடியர் காலை நேரத்தில் ஏற்பட்டது.

## அஷ்டகோத்திரங்கள் :

ஸ்ரீவத்ஸம்
வாதூலம்
கௌண்டின்யம்
கௌசிகம்
ஆத்ரேயம்
பாரத்வாஜம்
நைத்ருவகாச்யபம்
ஷடமர்ஷணம்

இதை கீழ்கண்ட ஸ்லோகம் விவரிக்கிறது

ஸ்ரீவத்ஸாத்ரேய கௌண்டின்யம் பாரத்வாசஸ்ச கௌசிக:
சடமர்ஷணஸ்ச வாதூல காச்யபஸ்ச அஷ்டகோத்ரஜா:

இப்படி எம்பெருமானார் , மாமுனிகள் முதலான ஆசார்யர்களால் அபிமானிக்கட்ட இந்த அஷ்டகோத்திர வம்சத்தவர்களுக்கு ஸ்ரீரங்கத்தை அடுத்த உறையூர், தொட்டியம் திருநாராயணபுரம், காஞ்சீபுரம் தேவப்பெருமாள சன்னதி, காஞ்சீ அஷ்டபுஜம் (அட்டபுயகரம்) சன்னிதி, காட்டு மன்னார் கோயில், ஸ்ரீபெரும்பூதூரில் ஸ்வாமி சன்னதி, திருச்சித்திரகூடம் கோவிந்தராஜர் சன்னதி (சிதம்பரம்) ஆகியவைகளில் முதல் தீர்த்தம், இரண்டாம் தீர்த்தம் என்ற முறையிலும் வேறு சில கிராமங்களிலும் மரியாதைகளும் பாத்யதைகளும் உள்ளன. இந்த அஷ்டகோத்ர வம்சத்தவர்களில் மாமுனிகளால் பரிகரணம் செய்யப்பட்ட நவரத்னங்களில் ஒருவராக ஏட்டூர் சிங்கராசார்யார் விளங்கினார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

மேலே சொன்ன விஷயங்கள் ஸ்ரீ.உ.வே முனைவர் K.A. மணவாள ஐயங்கார் ஸ்வாமி எழுதிய அஷ்டகோத்ர திருவம்சத்தினர் வரலாறும் பெருமையும் என்னும் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது. இக்கட்டுரை திருவல்லிக்கேணி ஸ்ரீ.உ.வே அஷ்டகோத்ரம் திருமலை நல்லான் சக்ரவர்த்தி பார்த்தசாரதி ஐயங்கார் ஸ்வாமியின் மணிவிழா மலரிலும் சதாபிஷேக மலரிலும் வெளிவந்துள்ளது. (சில விஷயங்கள் முனைவர் இரா அரங்கராஜன் ஸ்வாமி தொகுத்து வெளியிட்டுள்ள மன்னுபுகழ் மணவாளமாமுனிகள் என்னும் நூலில் இருந்தும் எடுக்கப்பட்டது)

திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய:

ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

**ஸ்வாமி எம்பார் - வருஷ திருநட்சத்திரம் - தை – புனர்பூசம்**



ஸ்வாமி எம்பார் - மதுரமங்கலம், அவதாரஸ்தலம்

புகைப்படஉதவி - ஸ்ரீ ஸ்ரீவத்ஸ கிருஷ்ணன், திருவல்லிக்கேணி



ஸ்வாமி எம்பார் - திருவல்லிக்கேணி

## தனியன்

ராமாநுஜ பதச்சாயா கோவிந்தாஹ் வாநபாயிநீ /
ததாயத்த ஸ்வரூபா ஸா ஜீயாந் மத்விஸ்ரமஸ்தலீ //

புஷ்யே புநர்வஸு॰ திநே ஜாதம் கோவிந்த தேஸிகம் /
ராமாநுஜ பதாம்போஜ த்வந்த்வ ப்ரவணமாநஸம் //

இவருடைய தாஸ்ய நாமம் - ஸ்ரீகோவிந்ததாஸர், ராமாநுஜபதச்சாயையார்
ஆசாரியன் - எம்பெருமானார்; இவர் பெரிய திருமலைநம்பிக்கு மருமகனார்
இவர் எம்பெருமானாருடைய சிறிய தாயாரின் திருக்குமாரர்
சிஷ்யர்கள் - பெரியபட்டர் ; ஸ்ரீராமப்பிள்ளை
திருத்தம்பியார் - சிறிய கோவிந்தப் பெருமாள்
இவர் அருளிச்செய்தருளின ப்ரபந்தம் - விஜ்ஞானஸ்துதி
இவர் எம்பெருமானாருடைய திருவடி நிழலாய் இருந்தார்
இவர் எம்பெருமானாருக்குச் செய்த கைங்கர்யங்கள் - திருமேனி திருவடிகள் பிடிக்கவும், எண்ணெய்க்காப்பு சாத்தவும், திருப்பரியட்டங்கள் திருத்தவும், திருக்கை சமர்ப்பிக்கவும், திருப்படுக்கை சோதிக்கவும், திருமேனிகாவல் முதலான கைங்கர்யங்கள்

## வாழித்திருநாமம்

பூவளரும் திருமகளார் பொலிவுற்றோன் வாழியே
பொய்கைமுதல் பதின்மர்கலைப் பொருளுரைப்போன் வாழியே
மாவளரும் பூதூரன் மலர்ப்பதத்தோன் வாழியே
மகரத்தில் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே
தேவு மெய்ப்போருளும் படைக்கத் திருந்தினான் வாழியே
திருமலை நம்பிக் கடிமை செய்யுமவன் வாழியே
பாவையர்கள் கலவி யிருள் பகலென்றான் வாழியே
பட்டர்தொழு மெம்பார் பொற்பத மிரண்டும் வாழியே.

## நாள் பாட்டு

மட்டவிழ் பூம்பொழில் மழலை நன்னகர் வாழ்வள மோங்கிய நாள்
வட்டமணிக்குல மாதவர் மனமிசை வாழ்ச்சி வளர்ந்திடு நாள்
கட்டமகன்றொருகால் இளையாழ்வார் கச்சிபொருந்திய நாள்
கட்டவிழும்படி காசினியோர்க்கொரு கற்பகமாகிய நாள்
பட்டரிடர்கெட பாஷ்யகாரர்தம் பார்வை பலித்திடு நாள்
பட்டபராசரர் பாதுகையாக்கிய பரமன் உதித்திடு நாள்
பொட்டணி மாதர்தம் பொய்க்கலவிக் கிருள் போந்தணியா
எம்பார் போந்து பிறந்திடும், தையதனில் புனர்பூசம் அதெனு நாளே.

திருவரங்கம் திருக்குருகூர் திருவேங்கடம் வாழ
திருவத்தியூர் முதலான திருப்பதிகள் தாம் வாழ
காதலுடன் கடல்சூழ்ந்த ஞாலத்தே வந்துதித்த
கோவிந்த மாமுனியே ! இன்னுமொரு நூற்றாண்டிரும்.

## எம்பார் அருளியுள்ள பெரிய திருமொழி தனியன்

எங்கள் கதியே இராமாநுசமுனியே
சங்கைகெடுத்தாண்ட தவராசா - பொங்குபுகழ்
மங்கையர்கோனீந்த மறை யாயிரமனைத்தும்
தங்கு மனம் நீ எனக்குத் தா.

## மங்கள ஸ்லோகங்கள்

1) பாரத்வாஜேவதீர்ணாய புண்டரீ காசஷஜந்மநே
அஸ்மத் குலஸ்ய நாதாய கோவிந்தார்யாய மங்களம்

2) ஸ்ரீஸைல பூர்ணகுருணா ராமாவரஜ யோகிநே
தத்தாய உதகபூர்வம் ஸ்யாத் கோவிந்தார்யாய மங்களம்

3) பட்டார்யாய ஸ்வஸிஷ்யாய வேதாந்தத்வய தாயிநே
ப்ரபத்திம் சோபதிஸதே கோவிந்தார்யாய மங்களம்

4) ஆத்மா வரஜ கோவிந்த தத்தநூஜம் குருகாதிபம்
ஸ்வ வம்ஸாக்ரியம் க்ருதவதே கோவிந்தார்யாய மங்களம்

5) ஸ்ரீஸைலபூர்ண வ்யாக்யாதி ஸுக்திம் ஸ்ம்ருத்வா ஸடத்விஷ:
தம்குரும் ஸம்ஸ்ரிதாயாஸ்து கோவிந்தார்யாய மங்களம்

6) ஸடாரி ஸுக்தி ஸ்ரோதவ்யே ஸதா ஸந்துஷ்ட சேதஸே
வைராக்யம் சோபதிஸதே கோவிந்தார்யாய மங்களம்

7) ராமாநுஜார்யாத் வேதாந்த த்ரமிடோபநிஷத் கிராம்
ரஹஸ்யார்த்தாநர்த்தவதே கோவிந்தார்யாய மங்களம்

8) மங்களம் தேஸிகேந்த்ராய மங்களம் குண ஸிந்தவே
மங்களம் கோவிந்தார்யாய நித்யஸ்ரீ நித்ய மங்களம்

ஸ்வாமி எம்பெருமானார் வடிவழகு - எம்பார் அனுபவித்து அருளிச்செய்தது

பற்பமெனத்திகழ் பைங்கழலும் தண் பல்லவமே விரலும்
பாவனமாகிய பைந்துவராடை பதிந்த மருங்கழகும்
முப்புரிநூலொடு முன்கையில் ஏந்திய முக்கோல் தன்னழகும்
முன்னவர் தந்திடு மொழிகள் நிறைந்தது முறுவல் நிலாவழகும்
கற்பகமே விழி கருணை பொழிந்திடு கமல முகத்தழகும்
காரிசுதன் கழல் சூடிய முடியும் கனநற்சிகை அழகும்
எப்பொழுதும் எதிராசன் வடிவழகு என் இதயத்துளதால்
இல்லையெனக்கெதிர் இல்லையெனக்கெதிர் இல்லையெனக்கெதிரே.

எம்பாரின் வைபவச்சுருக்கம்

1) எம்பார் திருவவதராம் எம்பெருமானார் அவதரித்து நான்கு வருஷங்கள் கழித்து துர்மதி வருஷத்தில் (கி.பி 1021) ஸ்ரீபெரும்பூதூரை அடுத்த மதுரமங்கலத்தில் வட்டமணிக்குடியில் பாரத்வாஜ கோத்திரத்தில் எம்பெருமானாரின் சிறிய தாயாரான ஸ்ரீதேவிக்கும் அவருடைய பர்த்தாவான கமலநயன பட்டருக்கும் குமாரராக கோவிந்தன் என்னும் திருநாமத்துடன் எம்பார் அவதரித்தார்.
2) இவர் இராமானுஜருடன் யாதவப்ரகாஸரிடத்தில் கல்வி பயின்றார்.
3) இராமானுஜரின் உயிரைக்காப்பற்றியது
இராமானுஜரிடத்தில் உள்ள த்வேஷத்தாலே அவரை கங்கையில் தள்ளிக் கொன்று விடுவதற்காக யாதவப்ரகாஸர் காசியாத்திரையை தம் சிஷ்யர்களுடன் மேற்கொண்டார். தமது தம்பியான கோவிந்தர் மூலமாக அச்சதித் திட்டத்தை அறிந்து கொண்ட இராமானுஜர் பேரருளாளன் பேர் அருளாலே இந்த யாத்திரையில் இருந்து மீண்டு, காஞ்சிக்குத் திரும்பினார்.
4) கோவிந்தர் மறுபடியும் ஸ்ரீவைஷ்ணவராக பெரிய திருமலை நம்பிகளால் திருந்துதல்
யாதவப்ரகாஸரோடு காசிக்குச் சென்ற கோவிந்தர் கங்கையில் மூழ்கி எழும்போது அவருடைய உள்ளங்கையில் ஓர் லிங்கம் அகப்பட்டது. யாதவப்ரகாஸரால் உள்ளங்கை கொணர்ந்த நாயனார் என்று பெயரிடப்பெற்றார். சைவராகி அந்த லிங்கத்தை மதுரமங்கலத்தில் ப்ரதிஷ்டை செய்தார். பிறகு இவர் காளஹஸ்திச் சிவன் கோயிலில் தொண்டு செய்து வந்தார். ஸ்ரீராமானுஜரின் ப்ரார்த்தனைக்கு இணங்கி மாதுலரான (மாமா) பெரிய திருமலை நம்பி காலஹஸ்தி சென்று கோவிந்தரை மறுபடியும் ஸ்ரீவைஷ்ணவராகத் திருத்தினார்.
5) ஸ்ரீராமானுஜர் முதன் முதலாக திருமலைக்குச் சென்றபோது கோவிந்தரை தானமாகமாகப் பெற்று தம் சிஷ்யராக ஸ்ரீரங்கத்திற்கு அழைத்து சென்றார்.
6) கோவிந்தர் பரம வைரக்கிமுடையவராய் இருந்த படியால் ஸந்யாஸ ஆஸ்ரமத்தை பெற்று எம்பார் என்னும் திருநாமத்தை அடைந்தார்.
7) இராமானுஜபதச்சாயா (இராமானுஜருடைய திருவடி நிழலாய் இருப்பர்) என்று பெயர் பெற்று எம்பெருமானாரை விட்டு பிரியாமல் இருந்து வந்தார்.
8) திருவாய்மொழி முதலான த்வ்ய ப்ரந்தங்களுக்கு இவர் அருளிச்செய்துள்ள நிர்வாஹங்கள் இவர் பரம ரஸிகர் என்பதைக் காட்டுகின்றன.
9) கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர் அவதரித்தவுடன் அக்குழந்தையைக் கடாசஷிப்பதற்காக எடுத்து வரும்படி எம்பெருமானாரால் நியமிக்கப்பெற்ற எம்பார், குலக்கொழுந்தான அக்குமாரரைத் தம் மார்பிலே அணைத்துக்கொண்டு குழந்தைக்கு

ரசைஷயாகத் த்வயானுஸந்தானம் செய்து கொண்டு வந்து எம்பெருமானாரிடம் காட்டினார். எம்பெருமானாரும் எம்பாரே குழந்தையிடம் த்வயம் பரிமளிக்கின்றதே என்ன செய்தீர்? என்று கேட்க அவரும் குழந்தைக்கு ரசைஷயாக த்வயானுஸந்தானம் பண்ணிக் கொண்டு எடுத்து வந்தேன் என்று கூற, இவருடைய ஹிதத்திற்கு நீர் முற்பட்டீர் ஆகையாலே நீரே இவருக்கு ஆசார்யராகக் கடவீர் என்று எம்பெருமானார் நியமித்தார். அதன்படி எம்பார் பட்டருக்கு ஆசார்யரானார்.

சரமோபாய நிர்ணயம் - எம்பார் பட்டரிடத்தில் எம்பெருமானாரே உத்தாரகர் என்று உபதேசித்தல்

எம்பார் ஒரு ராத்திரி திருவீதியிலே குணநுபத்துடனே உலாவி வரும்போது, பட்டர் அவரை பார்த்தவுடன் ஸேவித்து ஆசார்யத்வமும் த்விவித்மாய், தத்விஷய ஸ்வீகாரமும் த்விவிதமாயன்றே இருப்பது. எதிலே தேவரீர் அறுதி இட்டிருப்பது என்று கேட்க எம்பாரும் க்ருபா மாத்ரப்ரஸன்னாசார்யனே முக்யன். பரகதஸ்வீகாரமே பேற்றுக்கு உடல். இவை இரண்டையும் நான் எம்பெருமானிடத்திலே அறுதியிட்டிருப்பன். நீரும் பெருமாள் நம்மை புத்ர ஸ்வீகாரம் பண்ணி அருளினார், ஆழ்வானுடைய பிள்ளை, ஸகல வித்யைகளை அப்யஸித்தோம், நமக்கு ஏது குறை என்று இறுமாந்திராதே. என்னைப்போலே எம்பெருமானார் இடத்திலே உத்தாரகத்வ ப்ரதிபத்தி பண்ணி அவரே உத்தாரகர் என்று நினைத்திரும் என்று அருளிச்செய்தார்.

<u>வார்தாமாலை 188</u>

நித்ய ஸம்ஸாரிகளிலே ஒருவனை உபயவிபூதி விலசஷணனாப்படி எம்பெருமான் ஆக்கினான் என்று எம்பார் அருளிச்செய்வார்.

விவரணம் நம்மாழ்வாருடைய பெருமையைப் பார்க்கும்போது திருக்குறுங்குடி நம்பியான எம்பெருமானே நம்மாழ்வாராக வந்து அவதரித்தான் என்று சொல்லாம் என்பது ஆளவந்தார் திருவுள்ளம். மாறி மாறிப்பல பிறப்பும் பிறந்து (2ஆம் பத்து 6ஆம் திருவாய்மொழி 8ஆம் பாசுரம்) முதலான பாசுரங்களில் பொய்யில்லாத பாடல்களைப் பாடிய நம்மாழ்வாரே தம்மை அநாதிகாலமாகப் பலபிறவி எடுத்த நித்ய ஸம்ஸாரியாக அநுசந்தித்துக்கொண்டு இருக்கையாலே, ஒரு நித்ய ஸம்ஸாரியை விண்ணுளாரிலும் சீரியாராக ஆக்கினான் எம்பெருமான் என்பது தான் உண்மை நிலை. கீதை 10-41 ஸ்லோக்கத்தின் விவரணம் - எந்தெந்த ஜந்துக்கள் செல்வம், காந்தி, நற்செயல்களில் உறுதி முதலான சிறப்புகளை உடையனவயாக இறுக்கின்றனவோ அந்தந்த ஜீவராசிகள் என்னுடைய நியமன ஸக்தியின் ஒரு பகுதியாலே உண்டானவை என்று அறிவாயாக என்று ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுநனுக்கு உபதேசித்தார். இதன்படி எம்பெருமானுடைய அம்ஸத்தால் உண்டானவர் நம்மாழ்வார் என்பதையிட்டுப் பூர்வாசார்யர்கள் அவரை பகவத அவதாரமாக அருளிச்செய்கிறார்கள் என்பது எம்பார் திருவுள்ளம்.

210ஆம் வார்த்தை

எம்பார் திருமலைநம்பி திருமாளிகைக்கு சர்வவித கைங்யர்யங்களும் பண்ணிக்கொண்டு இருக்கிறதைக் கண்டார் உடையவர். ஒரு நாள் எம்பார் நம்பிக்கு திருப்படுக்கைபடுத்தி, முதலில் அதிலே படுத்துக்கொண்டு பார்க்க, இதைக்கண்ட உடையவர் இவர் செய்த காரியத்தை திருமலை நம்பிக்கு அருளிச்செய்தார். அவரும் எம்பாரை அழைத்து ஸ்ரீகோவிந்தப்பெருமாளே! நீர் நமக்குள்ள படுக்கையில் படுத்துக்கொண்டிரீர் என்று கேள்விப் பட்டோம். இப்படி செய்யலாமோ? இதுக்கு பலன் ஏது? என்றால் நரகம் என்றார். இப்படி அறிந்து இருந்தும் எதற்கு செய்தீர்? என்று கேட்டார்.

அதற்கு இவர் தேவரீர் திருமேனியில் ஒன்று உறுத்துதல், ஊன்றுதல், கடித்தல் செய்யாமல் கண்வளரப் பெற்றால் அடியேனுக்கு நரகமே அமையும் என்று விண்ணப்பம் செய்தார். இதனைக் கேள்வி உற்ற உடையவர் இதொரு ப்ரதிபத்தி விசேஷம் இருந்தபடி என்? என்று உகந்தருளினார்.

எம்பாருடைய முக்தக ஸ்லோகம்

லஷ்மீநாதாக்ய ஸிந்தௌ ஸடரிபு ஜலத:
ப்ராப்ய காருண்யநீரம்
நாதாத்ராவப்யஷிஞ்சத் ததநு
ரகுவராம்போஜ சசக்ஷுர்ஜராப்யாம்
கத்வா தாம் யாமுநாக்யாம் ஸரிதமத
யதீந்த்ராக்ய பத்மாகரேந்த்ரம்
ஸம்பூர்ய ப்ராணி ஸஸ்யே ப்ரவஹுதி
பஹுதா தேஸிகேந்த்ர ப்ரமௌகை:

இந்த ஸ்லோகத்தின் அர்த்தம்

லசஷ்மீ நாதனாகிற பெருங்கடலில் சடகோபராகிய மேகம் கருணை நீரைப்பருகி நாதமுனிகளாகிற மலையிலே பொழிந்தது. அந்நீர் புண்டரீகாசஷரென்னும் உய்யக்கொண்டார், ராமமிஸ்ரர் எனும் மணக்கால்நம்பி ஆகிய இரு அருவிகளின் மூலம் யாமுநாசார்யர் எனும் ஆளவந்தாராகிய பேராற்றை அடைந்து, அதில் இருந்து பெரிய நம்பிகள் முதலான ஐந்து ஆசார்யர்கள் ஆகிற கால்வாய்கள் மூலம் யதிராஜராகிற பெரிய ஏரியை அடைந்து, அதிலிருந்து எழுபத்து நாலு ஆசார்யர்களாகிற மதகுகளாலே உயிர்களாகிற பயிர்களின் பொருட்டுப் பெருகுகிறது.

(மேலே சொன்ன விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி தொகுத்தருளிய ஆசார்ய வைபவ மஞ்ஜரி என்கிற நூலில் இருந்து ஏடுக்கப்பட்டது)

## எம்பார் திருநாடு அலங்கரித்தல்

எம்பார் கடைசி நாட்களிலே கணியனூர் சிரியாச்சான், சட்டம்பள்ளி ஜீயர், ஈச்சம்பாடி ஜீயர் இவர்களுக்கு உடையவர் ப்ரஸாதித்த அர்த்த விசேஷங்களை உபதேசித்து தர்ஸநத்தை நிர்வஹித்து வரவேண்டும் என்று மங்களாசாசனம் செய்தார். அவர்களுக்கு பட்டர் திருவடியைக் காட்டிக்கொடுத்து, உடையவர் திருவடியைத்தியானித்துக்கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

## எம்பாரின் தன்னேற்றம்

### 1) இளையாழ்வாரின் உயிரைக் காத்தது

இளமையில் இளையாழ்வாரும் கோவிந்தரும் வேதாந்தக் கல்வியை அக்காலத்தில் பிரசித்தனாய் இருந்த யாதவப்ரகாசன் என்ற வித்வானின் பள்ளியில் கற்று வந்தனர். வேதாந்த வாக்கியங்களுக்கு யாதவப்ரகாசன் சொன்ன அத்வைதப் பொருள்கள் இளையாழ்வார் மனத்துக்கு இசையாததால் தமது மனத்துக்கு தோற்றிய மாற்றுப் பொருள்களைக் கூறி வந்தார். அத்வைத மதத்துக்குப் புறம்பான வேறுபொருள்களைக் கூறும் இவரை வளரவிட்டால் அந்த மதத்துக்கே கேடு வரக்கூடும் என்று தீர் மானித்து, அவரை (இளையாழ்வாரை) காசி யாத்திரை என்று அழைத்துப் போய் கங்கையில் மணிகர்ணிகையில் தள்ளி மூழ்கடித்து விடுவது என்று திட்டமிட்டான்.

மணிகர்ணிகை என்பது காசியிலுள்ள கங்கா நதி ஸ்நாநகட்டம். இவ்விடத்தில் ஸ்நாநம் செய்தால் சகல பாபங்களும் விலகும் என்று புராணங்கள் கூறும். இங்கு இவரை முடித்து விட்டால் அத்வைத மதத்திற்கு பேருதவியாகும். தன்னையும் ப்ராஹ்மணனைக் கொன்ற பாபம் சாராது என்று யாதவன் அபிப்ராயப்பட்டான். இந்த சூழ்ச்சியை கோவிந்தர் பள்ளியில் பயின்ற மாணவர்கள் மூலம் அறிந்தார். அதனை இளையாழ்வாரிடம் சொல்ல தக்க தருனத்தை எதிர்பார்த்திருந்தார்.

யாதவன் பள்ளியில் பயின்ற சிஷ்யர்கள் அனைவருடனும் காசி யாத்திரை கிளம்பி பல நாள் நடந்து விந்திய மலைச் சாரலை அடைந்தனர். விந்திய மலைச்சாரல் காட்டு ப்ரதேசம் ஆகும். அங்கே கோவிந்தருக்கு தனிமையில் இளையாழ்வாரை சந்தித்து பேச ஒரு வாய்ப்பு கிடைத்தது. கோவிந்தர் தமயனிடம் விஷயத்தை விளக்கமாகச் சொல்லி அங்கிருந்து எப்படியாவது தப்பிவிடும்படி வேண்டிக்கொண்டார். இளையாழ்வாரும் யாவரும் அறியாமல் தப்பி காட்டில் மறைந்துவிட்டார். கோவிந்தர் இளையாழ்வார் எப்படியாவது தப்பி காஞ்சி சென்று சேர்ந்துவிடுவார் என்ற மனஅமைதியுடன் யாதவனுடைய கூட்டத்தில் ஒன்றும் அறியாதவர் போல் இருந்து விட்டார். இவ்வாறு கோவிந்தர் இளையாழ்வாரின் உயிரைக் காத்தார்.

## 2)ஆசார்ய பக்தி

கோவிந்தப் பெருமாள் (எம்பார்) ஆசாரியரான திருமலை நம்பிக்கே ஆட்பட்டவராய் வாழந்து வருகையில் ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீராமாயணத்தின் ஆழ்பொருளை எல்லாம் மாதுலரான (மாமா) திருமலை நம்பியிடம் உபதேசமாகப் பெருதல் பொருட்டு ஓராண்டு காலம் திருப்பதியில் வசித்திருக்க நேரிட்டது. அக்காலத்தில் நம்பியினால் திருத்தப்பட்ட கோவிந்தரின் நற்பண்புகளை நெருக்கத்தில் நேரில் காண ராமாநுஜருக்கு வாய்ப்பு கிடைத்தது. ஒரு சமயம் நம்பிக்கு அமைந்த படுக்கையில் கோவிந்தர் தாமே சிறிது நேரம் படுத்து எழக்கண்ட ராமாநுஜர் அதற்கான காரணம் அடியேனுக்கு விளங்கவில்லையே என்று நம்பியிடன் கேட்க நம்பியும் அவரையே கேட்கலாமே என்று அவரை அழைத்துக்கேட்டார். இக்கேள்விக்கு கோவிந்தர் அளித்த பதில் ஆசார்யனுக்கு என்று அமைத்த படுக்கையில் சிஷ்யன் சிறிது நேரமேனும் படுப்பது கொடிய பாவமே. இதற்கு பலன் நரக வாசமே என்பதை அடியேன் அறிவேன். ஆயினும் சமைத்த உணவு நன்றாக உள்ளதா என்று சுவைத்துப் பார்பது போல படுக்கையின் நலத்தையும் சோதித்துப் பார்த்தேன். ஆசார்யனுக்கு பாங்காக படுக்கை அமைந்துள்ளது. அவர் அதில் ஸுகமாக கண் வளர்ந்தருளுவர் (துங்குவர்) என்று அறிந்தால் போதும். இதனால் அடியேனுக்கு எந்த பாவம் வந்தாலும் வரட்டும் என்றே சஷணநேரம் படுத்துப் பார்த்தேன் என்றார். இதைக்கேட்ட ராமாநுஜர் தம்பியின் ஆசார்ய பக்தியின் கனத்தைக் கண்டு (எல்லை) ஆச்சர்யப்பட்டு மிகவும் உகந்தார்.

## 3) ஜீவ காருண்யம்

ஒரு நாள் நம்பியின் பூந்தோட்டத்தில் உடையவர் எழுந்தருளி இருந்தபோது, ஓரிடத்தில் கோவிந்தர் பாம்பின் வாயிலிலே கையை விட்டு மீண்டும் நீராடிக் கைங்கர்யத்திலே ஈடுபடக்கண்டார். அவரை அழைத்து என் செய்தீர்? என்று கேட்க, அவர் பாம்பு நாக்கை நீட்டிக் கொண்டு நோவு படக் கண்டு, அதன் நாக்கிலே ஒரு சிறு முள்ளிருக்கக் கண்டு அகற்றினேன் என்று விண்ணப்பம் செய்தார். இதுகேட்ட உடையவர் அவருடைய ஜீவகாருண்யத்தை வியந்து பாராட்டினார்.

## 4) விற்ற பசுவுக்கு புல்லிடுவார் உண்டோ?

ஓராண்டுகாலம் பெரிய நம்பியிடம் ஸ்ரீராமயணத்தின் ஆழ்பொருளை எல்லாம் கேட்டறிந்து முடித்த பின்னர் ராமாநுஜர் மீண்டும் திருவரங்கம் செல்ல அனுமதி கோரிய போது, இவ்வளவு தூரம் எழுந்தருளி ஓராண்டு காலம் எனக்கு நற்காலமாகப் பொழுது போக்குவதற்கு உதவிபுரிந்த உமக்கு ஒன்றும் தரப்பெற்றிலோமே என்று சொல்ல, உடையவர் அப்படித்திருவுள்ளமாகில் தவறான பாதையில் சென்று கொண்டுருந்த கோவிந்தப்பெருமாளை அடியேன் விண்ணப்பித்தற்கு ஏற்பதத் திருத்தி பணிகொண்டபின், உடன் கூடுவது என்று கொலோ! என்று இருந்த அடியேன் நினைவைத் தலைக்கட்டி அருளிய தேவரீர் இவரை அடியேனுக்குத் தந்திடல் ஆகாதோ? என்று விண்ணப்பம் செய்தார்.

உடையவர் சொல்லியதைக் கேட்ட நம்பிகள் கோவிந்தரை அழைத்து வாரீர் கோவிந்தப் பெருமாளே! இன்று முதல் நம்மிராமாநுஜரை நம்மைக் கண்டாற்போலே சேவித்திரும் என்று சொல்லி நீர் வார்த்து தானம் பண்ணிக் கொடுத்தருளினார். தன்னைப் பெரியோர்கள் , பாகவதர்கள் அதிலும் ஆசாரியன் விற்கவும் அல்லது தானமாகக் கொடுக்கவும், வாங்கிக் கொள்ளும்படியும் அமைத்துக் கொள்வது உத்தம ஸ்ரீவைஷ்ணவ லசஷ்ணம் ஆகும்.

பெரியாழ்வார் கேசவா! புருடோத்தமா! கிளர்சோதியாய்! குறளா! என்று* பேசுவார் அடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே – என்று தமது திருமொழி 4-4-10 பாசுரத்தில் இதைப்பற்றி கூறியுள்ளார்.

கோவிந்தரை அழைத்துக்கொண்டு திருவரங்கம் செல்லும் வழியில் பெருமாள் கோயிலை (காஞ்சிபுரம்) அடைந்தபோது, கோவிந்தர் முகம் வாடி வெளுத்திருந்தது கண்டு, அவனை விட்டகன்று யிராற்றகில்லா என்று நம்மாழ்வார் அருளியதுபோல், நம்பியைப் பிரிந்ததன் விளைவிது என்று கண்டு கொண்டு இவரை நோக்கி நீர் மீண்டும் சென்று நம்பியை ஒரு முறை சேவித்து வாரும் என்று சொல்லி ஒரு துனைவருடன் அனுப்பி விட்டார். உடையவர் அங்கேயே தேவப் பெருமாளை சேவித்துக் கொண்டு தங்கயிருந்தார்.

கோவிந்தரும் திருமலை நம்பி திருமாளிகையைச் சென்றடைந்து வாசலிலே தண்டன் சமர்ப்பித்து நிற்க இதையறிந்த நம்பி பித்தனைப் போகச் சொல்லுங்கோள் என்று தாம் முகம் கொடாமல் அனுப்பிவிட்டார்.

மிகவும் வெறுத்து மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார் என்று ஆண்டாள் பாடியபடி ஏங்கி நின்ற கோவிந்தருக்கு இப்பேச்சு மிகவும் வருத்த மளித்தது. நம்பியின் மணைவி (தேவிகள்) இத்தனை தூரம் இளைத்து வந்தவனை அழைத்து இன்சொல் சொல்லி ஸ்ரீபாததீர்ததமும் தளிகைப்பிரசாதமும் ப்ரஸாதித்தல் ஆகாதோ? என்று கோபித்துச் சொன்னாள். தானம் கொடுத்த மாட்டிற்கு புல் இடுவார் உண்டோ என்று சொல்லி நம்பி முகம் கொடாமல் இருந்து விட்டார். உள்ளே நடந்த இந்தப் பரிமாற்றங்களைக் காதுற்ற கோவிந்தர் ஆசார்யனைக் காணும் ஆசையைத் துறந்து, இவர் திருமாளிகை வாசலில் தண்டன் சமர்ப்பித்து விட்டுச் சிறிதும் தாமதிக்காமல் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினார். எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்று தண்டனிட்டுக்கிடந்தார்.

நடந்ததை எல்லாம் உடன் சென்றவர் உடையவருக்கு விண்ணப்பிக்க அதைக்கேட்ட அவர் நம்பி நம் நினைவறிந்து நடந்து கொண்டாரே ! என்று வியந்து உகந்தார்.

உடையவர் உடனே கோவிந்தரை முடிப்பிடித்து எடுத்து, குளிரக் கடஷித்து அவரை அழைத்துக் கொண்டு பயணகதியில் திருவரங்கம் சென்று பெரியபெருமாளையும், ஸ்ரீரங்க நாய்ச்சியாரையும் சேவித்து மகிழ்ந்தார்.

## 5) விஷயாந்தர விரக்தி

இராமாநுசன் மிக்க சீலமல்லால் உள்ளாது என்னெஞ்சு ஒன்றறியேன் என்குற்ற பேரியல்வே (இராமாநுஜ நூற்றந்தாதி 2ஆம்பாசுரம்) என்கிறபடியே அவர் குணாநுபவமே தமக்கு பொழுது போக்காகக் கொண்டு வாழ்ந்து வருகையில், ஒரு நாள் கோவிந்தருடைய தாயார் கோவிந்தா! நமது குடும்பம் விளங்கவேண்டாவோ? என் மணாட்டுப் பெண் வாழவேண்டாவோ? என்று கேட்க நாம் தனியாய் இருக்கும் போது அவகாசம் பார்த்து அவளை அனுப்பி வையும் என்றார்.

தாயார் பல நாள் காத்திருந்தும் அப்படி ஒரு அவகாசம் காணாமையால் உடையவரிடம் முறையிட்டார். உடனே உடையவர் தம்பியை அழைத்து கோவிந்தரே! நமது ஆனை - ஒரு நல்வேளையில் மனையாளுடன் க்ருஹஸ்த தர்மம் நடத்துவீராக! என்று நியமித்தார்.

### கோவிந்தர் துறவு மேற்கொள்ளுதலும் எம்பார் என்ற திருநாமம் ஏற்படுவதும்

கோவிந்தரும் தமது மனையாளை அழைத்து, ஓரிரவு பூராவும் அவளுக்கு அந்தர்யாமியான பகவானைக் காட்டித் தந்து, பகவத் குணாநுபவத்தைப் பண்ணிவைக்க, வேறு எதற்கும் வாய்ப்பு இல்லாமலே போயிற்று.

நடந்ததை மருமகள் மூலம் கேட்டறிந்த தாயார் மகனிடம் தன் விருப்பம் நிறை வேறாமைக்கு வருத்தப்பட, கோவிந்தரும் அந்தர்யாமி ஒளிவிட்டு விளங்க, அழிச்சாட்டம் கூடவில்லையே என்று கூறினார். தாய் மீண்டும் உடையவரிடமே முறையிட்டாள். ஸ்வாமி தம்பியை அழைத்து நடந்தது என்ன என்று வினவ, இவரும் அந்தர்யாமி ப்ரகாசிக்கும் போது இதற்கு இருட்டு ஏது? தனிமை ஏது? அடியேன் செய்யக்கடவது எது? என்றார். ஆசாரியரும் இவருடைய பற்றற்ற நிலைகண்டு மகிழ்ந்து க்ருஹஸ்த தர்மத்தை அநுஷ்டிக்க இயலாதபடி விஷயாந்தர விரக்தி உமக்கு உள்ளதாகில் உத்தமாஸ்ரமத்தைக் கைக் கொள்ளும் (துறவரம் மேற்கொள்ளும்) என்று நியமித்து, அவருக்கு த்ரிதண்ட காஷாயங்களை அளித்து தம்மை போன்ற முக்கோற் பகவராக்கியருளினார். அப்புதிய துறவிக்கு எம்பெருமானார் என்று தமது பெயரை சூட்டினார். ஆனால் பெயரைப் பெற்றவரோ இத்திருநாமம் அடியேனால் சுமக்க முடியாது. ஸ்வாமிக்கு நிழலும் அடிதாறுமாய் உள்ளவனுக்கு பொறுக்கும்படிப் பெயர் அருள வேணும் என்று வேண்ட ஸ்வாமியும் அத்திருநாமத்தை ஒருவாறு சுருக்கி எம்பார் என்ற திருப்பெயரைச் சூட்டி அருளினார்.

## இதர விஷயங்களில் பற்று அற்று இருத்தல்

பகத் விஷயத்தைத் தவிர்ந்த, இதர விஷயங்களில் பற்று அற்றவர் எம்பார். இதனால் பல விஷயங்களைப் பற்றி இவர் அறியாதவராக இருந்தார். ஒரு சமயம் இவர் சிங்கப்பிரான் என்பரை பெண்களுக்கு அசாதாரணமான அவயவங்கள் எப்படி இருக்கும் என்று கேட்டார் என்பது ப்ரஸித்தம். இப்படியிருந்தாலும் பகவத் விஷயத்தில் ஆழந்து அநுபவிப்பார்.

## 6) பிள்ளை என்னும் அரையருக்கு உபதேசம் செய்தல்

ஒரு நாள் அரையர் சேவையில் நடந்த நிகழச்சியை கீழே அனுபவிப்போம்.

எம்பெருமான் தான் உகந்த பெண்களுடன் (கண்ணபிரான் இடைப் பெண்களுடன்) எப்படிப் பழகுவான். அவர்கள் எப்படி மறுமாற்றம் தருவார்கள் என்று நன்றாக எம்பார் அறிந்திருந்தார். பெருமாள் திருமொழி ஆறாம் பத்து எட்டாம் பாசுரம்:

என்னை வருக வென்று குறித்திட்டு............இன்ன மென்கையத்தீங்கொருநாள் வருதியேல் என் சினம் தீர்வன் நானே

என்ற பாசுரத்திற்கு உய்ந்த பிள்ளை என்னும் அரையர் நம்பெருமாள் முன்பே அபிநயம் செய்தார்.

ஒரு ஆய் மகள் கண்ணன் தான் வருவதாகச் சொன்ன சொற்படி வராததால் அவன் மேல் கோபம் கொண்டு ஊடி நீ என்றாவது ஒரு நாள் என் கையில் வந்து அகப்படுவாய். அப்போது நான் உன்னைத் தண்டித்து சினம் தணிவேன் என்று கூறுவதாக அமைந்துள்ளது. உய்ந்த பிள்ளை அரையர் இந்த பாசுரத்தைப் பாடி அபிநயம் காட்டும் போது சினம் தீர்வன் என்பதற்கு அவள் கண்ணனைக் கையாலே தள்ளுவது காலாலே உதைப்பது போல நடித்துக்காட்ட, அந்த கோஷ்டியிலே இருந்த எம்பார் இங்ஙனம் அன்று, கண்ணனைப் பார்க்க மாட்டேன் என்று முகத்தை மாற வைத்து அவன் தன்னைப் பார்க்க வொட்டாமல் தடுப்பாள். இதுவே கண்ணனுக்குத் தண்டனை என்று திருவுள்ளப் பட்டு முகத்தை மாறவைத்துக் காட்டினார். அது கண்ட அரையர் அப்படியே நடித்துக் காட்டினாராம். ஆச்சி கையால் தள்ளப் பெறுவது, காலால் உதைக்கப்பெறுவது இவைகள் கண்ணன் உகப்போடு ஏற்றுகொள்ளக்கூடிய தண்டனையாகாது என்பது எம்பாரின் கருத்து.

## 7) எம்பாரும் எம்பெருமானாரும்

எம்பெருமானார் அமுது செய்ததும் 100 அடி நடப்பது என்ற பழக்கத்தைக் கொண்டு இருந்தார். ஸ்வாமியின் நடை அழகை எம்பார் பக்கத்திலிருந்து கண்டு சுவைத்து மகிழ்வார். இப்படி உலாவுகையில் ஸ்வாமி ஆழ்வார்களின் பாசுரங்களை மனதில் அநுஸந்தித்து அருளவது பழக்கம். ஒரு நாள் இப்படி உலாவுகையில் வழக்கமாகச் செல்லும் தூரம் முழுவதும் செல்லாமல் சடெக்கெனத் திரும்பக்கண்ட எம்பார் திருமாலிருஞ்சோலை பதிகம் திருவுள்ளத்திலே ஓடுகிறதோ? என்று கேட்க ஸ்வாமியும் அப்படியே என்று அருளினார்.

இந்த நிகழ்ச்சி திருவாய்மொழி ஈடு 10-8-3 பாசுர வ்யாக்யானத்தில் பேசப்பட்டுள்ளது. இப்பாசுரத்தின் இரண்டாவது அடி மடித்தேன் மனைவாழ்க்கையுள் நிற்பதோர் மாயையினால் என்பதை அநுசந்தித் போது மடித்தேன் = திரும்பினேன் என்றபடி சடக்கெனத் திரும்பினார். பாசுரத்தில் ஈடுபட்டதால் தம்மையும் அறியாமல் செய்த காரியங்கள் இது. இதைக்கண்டு எம்பார் இந்த பாசுரம் ஸ்வாமியின் திருஉள்ளத்தில் ஒடுகிறது என்று கண்டு கொண்டது வியக்கும் படியாக உள்ளது.

பெரியாழ்வார் தம் திருமொழியை சாயை போலப் பாட வல்லார் தாமும் அணுக்கர்களே என்று முடிதிருக்கிறார். சாயை என்று நிழலைச் சொன்னார். நிழல் போலப் பாடவல்லவர் நெருக்கமுடையவர்கள் என்று மேல் போக்காகப் பொருள் கிடைக்கிறது. இது புரியவில்லையே என்று ஒருவர் எம்பாரைக் கேட்டாராம். இப்பாசுரத்தின் பொருளை அடியேன் எம்பெருமானார் சன்னதியில் கேட்டதில்லை. ஆயினும் அவர் அருளாளே உமக்கு பொருள் சொல்லுவேன் என்று கூறி ஆசாரியன் பாதுகைகளைத் தமது முடியின் மேல் இருத்திச் சில நொடிகள் ஸ்வாமியை மனதில் தியானம் பண்ணி விட்டு உடனே இதோ ஸ்வாமி ப்ரசாதித்த பொருள் கேட்பீராக!

இத்திருமொழியைப் பாடவல்லார் எம்பெருமானுக்கு நிழல் போல் நெருங்கி எப்பொழுதும் பிரியாமல் வாழ்வார்கள் என்று அருளிச் செய்தார்.

## அரையர் சேவை

திருவரங்கம் பெரிய கோயிலிலே திருமொழித்திருநாள் (பகல் பத்து) நடந்து கொண்டிருந்தது. நம்பெருமாள் திருமுன்பே எம்பெருமானாரும் முதலிகளும் கோஷ்டியாக வீற்றிருந்தார்கள். ஸ்வாமி அருகில் சற்று பின் தள்ளி எம்பார் அமர்ந்திருந்தார். யாவரும் அரையர் சேவை அநுபவத்தில் ஈடுபட்டு இருந்தனர். உய்ந்த பிள்ளை என்னும் அரையர் கண்ணன் பிள்ளை விளையாட்டுக்களை விவரிக்கும் பெரியாழ்வார் திருமொழி பாரங்களை இசைத்துக் கொண்டு இருந்தார். அப்போது மெச்சூது சங்கம் இடத்தான் (2-1-1) பாசுரத்திற்கு அபிநயம் செய்யும் போது அரையர் அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான் என்று பாடி அத்தூதன் என்று பெருமாளைச் சுட்டி காட்டினார். அப்பூச்சி என்பதற்கு கண்ணை பிதுத்துவதாகக் காட்டினார். கண்ணன் தன்னுடன் உள்ள பிள்ளைகளைப் பயமுறுத்த அப்பூச்சி காட்டுகின்றான். கண்ணை அழுத்தி விழித்தல் கண்ணிமையை மடக்கி சிவப்பாகக் காட்டுதல் முதலிய சேஷ்டைகளால் கண்ணன் மற்ற குழந்தைகளை பயமுறுத்துவதாக அரையர் அபிநயமாகக் காட்டினார். இது எம்பார் திருவுள்ளத்துக்குச் சேரவில்லை. கண்ணன் தனது தெய்வ வேஷத்தைக் (சங்கு சக்கரங்களைக் கையிலேந்தி நான்கு தோளனாய்) காட்டியே ஆயர் சிறுவர்களுக்கு அச்சம் விலைவிப்பான் என்று அரயருக்குத் தமது இருகை களையும் தோள்களுக்கு மேல் நம்பெருமாளின் திருக்கைகள் போலே உயர்த்திக் காட்டி உணர்த்தினார். அவரும் மீண்டும் அபிநயமாகக் காட்டும்போது திருவாழி திருச்சஙகு ஏந்தியது போல் திருக்கைகளைத் தோளுக்கு மேலே உயர்த்திக் காட்டினார்.

உடையவர் இது கண்டு உகந்து, அரையர் இப்படி மாற்றி அபிநயம் செய்ததற்கான காரணம் எம்பாருடைய உணர்த்துதல் ஆகவே இருக்கவேண்டும் என்று கருதி திரும்பிப் பார்த்து புன்முறுவலுடன் ஸ்ரீகோவிந்தப் பெருமாளே! நீர் இங்கே இருக்கிறீரோ! என்று அருளிச் செய்தாராம். உடையவர் மனத்தைத் தெளிய எம்பார் அறிந்திருந்தது முன்பு மடித்தேன் மனைவாழ்க்கையுள் என்ற விஷயமான நிகழ்ச்சியில் கண்டோம். இங்கு எம்பார் மனத்தை ஸ்வாமி அறிந்து வைத்திருந்ததைக் தெளியக் காணலாம்.

## 8) அர்ச்சையில் ஈடுபாடு

நம்பெருமாள் ஆண்டு தோறும் மூன்று ப்ரஹ்மோத்ஸவங்கள் கண்டுருளுகிறார். ஸ்ரீரங்கத்து வீதிகளில் புற்பாடு கண்டு கண்டுருளுவதோடு அருகாமையில் உள்ள பல ஊர்களுக்கும் எழுந்தருளுகிறார். ஒவ்வொரு உத்ஸவத்திலும் 10 நாட்கள் புறப்பாடு கண்டருளி உத்ஸவம் முடிந்தவுடனே கர்ப்பக்ருஹத்துக்கு எழுந்தருளுவர்.

முதலியாண்டானும் எம்பாரும் ஒருவருக்கு ஒருவர் தோஷமே நிறைந்த சம்சாரிகள் நடுவே 10 நாட்கள் உத்ஸவம் கண்டருளி நம்பெருமாள் ஒரு அபாயம் இன்றி சேஷமமாகத் தமதிடம் (கர்ப்பக்ருஹத்துக்கு) சேர்ந்தனரே. அது நமது பாக்யமே பாக்யம் என்று சொல்லிக் கொண்டு மகிழ்ந்ததை நஞ்சீயர் நேரில் கண்டாராம். இவர்களுக்கு நம்பெருமாளின் அர்ச்சைத் திருமேனியில் எத்தகைய பரிவுணர்ச்சி இருந்தது என்று நம்மால் அளவு இட்டு அறிய முடியாது.

## 9) தருமம் தலைகாக்கும்

நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம் 28ஆம் பாசுரத்தில் வள்வாயலகால் புள்நந்துழாமே பொருநீர் திருவரங்கா! அருளாய் என்று ஆழ்வார் எம்பெருமானை வேண்டுவதாக சொற்கள் அமைந்துள்ளான.

அவன் முன்னர் த்ரௌபதி முதலானார்க்கு அருளியது போலத் தனக்கு அருளாளதது ஏன்? என்று ஆழ்வார் திருவுள்ளமாத் தெரிகிறது. வள்வாயலகால் புள் நந்துழாமே பெருநீர் என்று திருவரங்கத்தில் காவிரியிலுள்ள நீரின் இயல்பை ஆழ்வார் வருணிக்கிறார். வள்வாயலகால் - வளைந்த அலகு போன்ற வாயாலே, புள் - மீன் முதலியவற்றைத் தின்னும் பறவை, நந்து – (நத்தை) மீனை, சங்குப்பூச்சியை, உழாமே - உழாமல் (நலியாதபடி) , பொரும் - சண்டையிடும், நீர் - நீரை உடைய, திருவரங்கா! - திருவரங்கத்து நாதனே!

அங்கு தண்ணீரில் வாழும் ஜீவராசிகளை அந்த நீர் தன்னை அண்டினவை என்ற காரணத்தால் , அவற்றை நலியவரும் பிராணிகளிடம் அகப்படாமல் (அலை வீசிச் சண்டையிட்டு) காப்பாற்றுகின்றனவாம். இப்படி அசேதனமும் சரணாகதரை (தன்னிடம் அண்டியவரை) அவை வேண்டா திருப்பினும் (சங்கு போன்றவை தண்ணீரை "என்னை காப்பாற்று" என்று வேண்டாதிருப்பினும்) தாமே ரசஷிக்கிற இடத்திலுள்ள பரம சேதனான நீ என்னை ரஷிக்காது இருப்பது எங்ஙனே? என்று ஆழ்வார் கேட்பதாக அபிப்ராயம்.

இங்கு வ்யாக்யானத்தில் எம்பாரைப் பற்றி ஐதிஹ்யம் ஒன்று அருளப்பட்டுள்ளது. அதனை கீழே அனுபவிப்போம்.

வீரஸுந்தரப்ஹ்மராயன் என்று ஓர் அரசாங்க அதிகாரி இருந்தான். இவன் பராசரபட்டரிடம் விரோதித்தவன். எம்பாரிடமும் இவன் விரோதம் பராட்டியது இயல்பே. இவனுடைய எதிரி ஒருவன் எம்பார் மடத்தில் சரணமடைந்தான். எம்பார் அவனைக் காப்பதாக வாக்களித்தார். இதைக்கண்ட எம்பார் சீடர்கள் முன்னமே ராஜமநுஷ்யனான அவனுடன் விரோத மிருக்க இப்போது அவனுக்கு எதிரியான ஒருவனை மடத்தில் வைத்துக்கொண்டு மேலும் அதை வளர்க்க வேணுமோ! என்று தடுத்துப் பேசினார்கள். எம்பார் சிறிதும் கலங்காமல் நம்மை சரணம் என்று வந்தடைந்தவனைக் காக்க வேண்டியது நம் கடமை. அக்கடமையை நிறைவேற்றும் வகையில் இவனைக் கைக்கொண்டால் நாம் நிறைவேற்றபுகும் சரணாகதி தர்மமே எல்லாரையும் ரக்ஷிக்கும் என்று அருளிச்செய்தாராம்.

சரணாகதி தர்மம் என்பது அசேதனமன்றோ? என்னில்: தன்னையண்டிய நீர் வாழ் ஜந்துக்களை அசேதனமான அந்த நீரானது நலிவுபடாதபடி ரக்ஷிக்குமானால் அசேதனமான அந்த தர்மம் ஏன் ரக்ஷியாது?

முடிவுரை - ஆசார்ய கைங்கர்யமே பரம ப்ரயோஜனமாகத் தம்மைப் பேணாமையையும் , ஆசார்ய விஷயத்தில் விற்கவும் பெறும்படி பணிந்திருக்கையும் ஆசார்யன் திறத்தில் நிழல் போல பரதந்த்ரனாயிப்பும் எம்பாருக்கே அமைந்த சிறப்புக்கள் எனலாம்.

மேலே சொன்ன விஷயங்கள் ஸ்ரீ உ.வே. V.V.ராமாநுஜம் ஸ்வாமி எழுதியுள்ள எம்பார் வைபவம் என்னும் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது. இக்கட்டுரை ஸ்ரீசைலேசதாயாபாத்திரம் 2009 ஆண்டு தை மாத இதழில் வெளிவந்தது.

மங்கள ஸ்லோகம்

மங்களம் தேஸிகேந்த்ராய மங்களம் குண ஸிந்தவே
மங்களம் கோவிந்தார்யாய நித்யஸ்ரீ நித்ய மங்களம்

எம்பார் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சக்ஷந்தவ்ய:

ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## திருமழிசையாழ்வார் - வருஷ திருநட்சத்திரம் - தை - மகம்



### திருமழிசையாழ்வார் - அவதாரஸ்தலம்

தனியன்

மகாயாம் மகரே மாஸே சக்ராம்ஸம் பார்க்கவோத்பவம் /
மஹீஸாபுராதீஸம் பக்திஸாரமஹம் பஜே //

ஸக்தி பஞ்சமய விக்ரஹாத்மநே ஸுக்திஹார ஜிதசித்த ஹாரிணே
முக்தி தாயக முராரிபாதயோர் பக்திஸாரமுநயே நமோ நம:

நாள்பாட்டு - உபதேசரத்தினமாலை - 12 பாசுரம்

தையில் மகமின்று தாரணியீர் ஏற்றம். இந்தத்
தையில் மகத்துக்குச் சாற்றுகின்றேன் - துய்யமதி
பெற்ற மழிசைப்பிரான் பிறந்தநாளென்று.
நற்றவர்கள் கொண்டாடும் நாள்.

வாழித்திருநாமம்

அன்புடனந்தாதி தொண்ணூற்றாறுரைத்தான் வாழியே
அழகாருந் திருமழிசை யமர்ந்தசெல்வன் வாழியே
இன்பமிகு தையில் மகத் திங்குதித்தான் வாழியே
எழில் சந்தவிருத்தம் நூற்றிருபதீந்தான் வாழியே
முன்புகத்தில் வந்துதித்த முனிவனார் வாழியே
முழுப்பெருக்கில் பொன்னியெதிர் மிதந்த சொல்லோன் வாழியே
நன்புவியில் நாலாயிரத்தெழுநூற்றான் வாழியே
நங்கள் பக்திசாரர் இருநற்பதங்கள் வாழியே.

திருத்தகப்பனார் - பார்க்கவ ரிஷி
திருத்தாயார் - கனகாங்கியம்மாள்
வளர்த்தவன் - ஹரிதாஸன்
திருநாமங்கள் - ஸ்ரீபக்திஸாரர், மஹீஸாரபுராதீஸர், பார்க்கவாத்மஜர், திருமழிசையாழ்வார், மழிசைப்பிரான்,
சிஷ்யர்கள் - கணிகண்ணன், த்ருடவ்ரதன்
ஆசாரியன் - ஸேனைமுதலியார்
புருஷகாரர் - பேயாழ்வார்
அருளிய ப்ரபந்தங்கள் - திருச்சந்தவிருத்தம் (120 பாசுரங்கள்),
நான்முகன் திருவந்தாதி (96 பாசுரங்கள்)
அவதாரஸ்தலம் - திருமழிசை
இவரது திருவரசு திருக்குடந்தையில் (கும்பகோணத்தில்) உள்ளது.

இவரை போற்றி உரைக்கும் இராமாநுச நூற்றந்தாதி - 12ஆம் பாசுரம்

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக் கிறைவன். இணையடிப்போ
தடங்கும் இதயத் திராமானுசன். அம்பொற் பாதமென்றும்
கடங்கொண் டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல்செய்யாத்
திடங்கொண்ட ஞானியர்க்கே. அடியே னன்பு செய்வதுவே.

உறையிலிடாதவர்

இவருடைய திவ்யப்ரபந்தங்கள் பகவத் பரத்வத்தை நிர்த்தாரணம் செய்து, இதர மதங்களை நிரஸநம் செய்வதிலே ஊற்றமுடையவையாயிருக்கும். அதனாலேயே இவருக்கு உறையிலிடாதவர் என்று ஆசார்ய ஹ்ருதயத்தில் திருநாமம் சாற்றினார் அழகியமணவாளப்பெருமாள் நாயனார்.

## முதலாழ்வார்களும் திருமழிசையாழ்வாரும்

பொய்கையாழ்வார் `வையம்தகளியா' என்றும் பூதத்தாழ்வார் `அன்பே தகளியா' என்றும் விளக்கேற்றிக்காட்டா பேயாழ்வார் `திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்` என்று எம்பெருமானை அனுபவத்தபடி பாசுரங்கள் இயற்றினார். முதலாழ்வார்களின் மூன்று திருவந்தாதிகளும் பகவத் அனுபவம் நிறம்பியிருக்கும். பகவதனுபவத்திற்கு களையாவது இதரதேவதைகளிடத்தில் பரத்வயுத்தி பண்ணுகையே யாகும். அந்தக்களையை திருமழிசையாழ்வார் நிக்கினார். முதல் பாசுரம் தொடங்கி கடைசி பாசுரம் வரையில் தனது முதற்ப்ரபந்தமான நான்முகந்திருவந்தாதியிலும், `அன்று நான் முகற் பயந்த ஆதிதேவனல்லையே' மற்றும் பல பாசுரங்களில் தனது சரம ப்ரபந்தமான திருச்சந்தவிருத்ததில் ஐயம் திறிபர பகவத் பரதத்வநிர்ணையம் செய்து உள்ளார். தமிழில் ப்ரபந்தத்தை விருத்தமாக முதலில் அருளியவர் என்ற பெருமை திருமழிசை ஆழ்வார் ஒருவரயே சாரும். இதனை தொடர்ந்து நம்மாழ்வாரும் திருவிருத்தம் என்ற ப்ரபந்தத்தை அருளிச் செய்துள்ளார்.

## பக்திஸாரர் என்ற பெயர் ஏற்படக்காணம்

பேயாழ்வார் திருவருளால் திருமழிசைப்பிரான் பரம வைஷ்ணவராகி சாக்கியம் கற்றோம் சமணம் கற்றோம் சங்கரனார் ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம் செங்கட் கரியானைச் சேர்ந்தோம் யாம் தீதிலமே எங்கட் கரிய தொன்றில் என்று அநுசந்தித்துக் கொண்டு திருமழிசையில் யோக நிலையில் திருமகள் கேள்வனை த்யானமத்துக் கொண்டி வாழ்ந்து வந்தார்.

அப்படி இருக்கையில் ஒருநாள் ரிஷப வாஹனத்தில் ஏறி பார்வதியும் சிவனும் ஆகாய மார்க்கமாய்ச் செல்லுகையில் உமாதேவி இவருடைய தேஜஸ்ஸைக் கண்டு வியப்புற்று இவர் யார் என்று வினவ சிவபிரான் இம்மஹாநுபாவர் நம் அடியானாய் இருந்து இப்போது நம்மை விட்டு நாராயணனுக்கு அடிமைப் பட்டிருப்பவர் என்று சொன்னவுடன் அம்பிகை அத்தகைய பெரியவனுக்கு நாமும் ஏதேனும் வரமளித்துச் செல்வோம் என்று கூற அவள் விருப்பப்படி திருமழிசைப்பிரான் முன் தோன்றினார்கள்.

திருமழிசைப்பிரான் சிவனைப் பார்த்ததும், பாரதவர் போல் ஒரு கந்தைத் துணியைத் தைத்துக்கொண்டு வீற்றிருந்தார். இதைக்கண்ட உமாபதி உனக்கு அருள்செய்ய வந்த நம்மை நீ கண்டு கொள்ளமல் இருப்பது தகுதியோ? என்று கேட்க, மழிசைப்பிரான் உம்மால் ஆகவேண்டுவது எனக்கு ஒன்றும் இல்லை. ஆதலால் நான் உதாஸீனனாய் இருந்தேன் என்று உரைத்தார். அதற்கு பின்பும் சந்த்ரசேகர் நம்வரவு வீண்போகக் கூடாது என்று நினைத்து நீ விரும்பிய வரத்தைப்பெற்று வாழ்வாய் என்று நிர்பந்தமாக கூறினார். ஆழ்வார் மோசஷலோகமான பரமபதத்தை அருள வல்லீராகில் அருள்வீர் என்று கேட்டார். அதற்கு மஹாதேவர் அது நம்மால் இயலாது. மோஷத்தைத் தரவல்லவன் ஸ்ரீமந் நாராயணன். அது தவிர வேறுவரம் வேண்டுவாய் என்று கூறினார். திருமழிசைப்பிரான் புன்முறுவல் செய்து அந்த முக்தியைப் பெறுவதற்கான சாதனங்களை அநுஷ்டிப்பதற்கு உறுப்பாக நீண்ட ஆயுளையேனும் எனக்குத் தரவேணும்

என்று வரம் கேட்டார். அது கேட்ட கைலாசநாதர் அது கர்மானுகுணமாக ஏற்கனவே வரம்பு கட்டுபட்டுவிட்டது. அதை வளரச்செய்ய என்னாலாகது. வேறு வரம் வேண்டுவாய் என்று விளம்பினார்.

திருமழிசைப்பிரான் இகழ்ச்சி தோன்ற நகைத்து, நான் துணி தைக்கும் இந்த ஊசியின் பின்னே நூல்வரும்படி வரம் தருவீர் என்று பரிஹாசமாக வார்த்தையைச் சொன்னார். அது கேட்டுக் கடும் சினம் கொண்ட கண்ணுதலோன் செருக்குடைய உன்னை இப்போதே பொசுக்கி விடுகிறேன் பார் என்று கூறி நெற்றிக்கண்ணைத் திறந்திட அதிலிருந்து ஊழிகால நெருப்புப் போலே அக்னி கிளர்ந்து எழுந்தது. இது கண்ட திருமழிசைப்பிரான் இந்திரன் போல் உடல் முழுவதும் கண் காட்டினாலும் அஞ்சுவேன் அல்லேன் என்று சொல்லித் தமது வலத்திருவடி பெருவிரலில் உள்ளதொரு கண்ணைத் திறந்துவிட அதிலிருந்து ஒரு பெரும் தீ எழுந்து ஊழிகால நெருப்பிலும் பல மடங்கு பெரியதாகி நெற்றிக் கண்ணிலிருந்து கிளர்ந்த நெருப்பை அடக்கி முக்கண்ணையும் சுடத்தொடங்கிற்று. அது கண்ட கங்காதரர் அத்தீயில் இருந்து தப்புவதற்காகத் தன் சடையில் இருந்த பல மேகங்களை ஏவி ஊழிகாலத்தைப் போல மழை பொழியும்படி நியமித்தார்.

அவ்வண்ணமே அம்மேகங்களும் மழை பொழிந்ததனால் பெருவெள்ளம் ஏற்படவும் பரமபாகவதரான திருமழிசைப்பிரான் சிறிதும் அசையாமல் எம்பெருமானை த்யானித்துக் கொண்டு வீற்று இருந்தார். இதைக்கண்ட சிவன் ஆழ்வாருக்கு பக்தி ஸாரர் என்று விருது அளித்து அவரை மிகக் கொண்டாடினார். இதை ஆழ்வாரே கீழக்கண்ட பாசுரங்களில் உணர்த்தி உள்ளார்.

<u>நான்முகன் திருவந்தாதி - 26ஆம் பாசுரம்</u>

மற்றுத் தொழுவார் ஒருவரையும் யான் இன்மை
கற்றைச் சடையான் கரிக் கண்டாய். எற்றைக்கும்
கண்டு கொள் கண்டாய். கடல் வண்ணா! யான் உன்னைக்
கண்டு கொள்கிற்குமாறு.

<u>நான்முகன் திருவந்தாதி - 84ஆம் பாசுரம்</u>

பிதிருமனமிலேன். பிஞ்ஞகன் தன்னோடு
எதிர்வன் அவன் எனக்கு நேரான். அதிரும்
கழற்கால மன்னனையே கண்ணனையே. நாளும்
தொழக்காதல் பூண்டேன் தொழில்.

புத்தூர் ஸ்வாமி வெளியிட்டுள்ள நாலாயிர திவ்ய ப்ரபந்த நூலில் இருந்து மேலே சொன்னது எடுக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட இரு பாசுரங்களுக்கும் விளக்கவுரை (Dr.M.A.வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமி வெளியுட்டுள்ள நம்பிள்ளை படி இயற்பா வ்யாக்யான நூலில் இருந்து எடுக்கப்பட்டது)

நான்முகன் திருவந்தாதி - 26ஆம் பாசுரம் விளக்கவுரை

இப்பாசுரத்தில் உன்னைத் தவிர வேறு சிலரைப் பற்றுபவன் அல்லேன் நான் என்பதற்கு சிவனே சாட்சி என்கிறார். (திருமழிசை ஆழ்வாரிடத்தில் சிவன் வந்து தன்னை ஒருவரம் வேண்டிக் கொள்ளும்படி கேட்டபோது ஆழ்வார் அதற்கு, அவனை அலட்சியம் செய்த சரித்திரம் மேலே குறிப்பிடப் பட்டுள்ளது). எம்பெருமானுடைய அழகில் மயங்கிய ஆழ்வார் அதில் அமிழ்ந்து போய்விடாமல் அவனை அனுபவிக்க வல்லராகத் தாம் ஆகவேண்டும் என்று வேண்டுகிறார் என்றும் கொள்ளலாம். கடல்போல் கருத்துக் குளிர்ந்த வடிவை உடையவனே! உன் அழகில் நான் மயங்கிவிட்டேன். நான் உன்னை விடாமல் அனுபவிக்க நீ கடாஷிக்க வேண்டும். (கற்றைச் சடையான்) சிவனும் ஏதோ ஒன்றைச் சாதிப்பதற்காகத் தவம் செய்து ஜடையை தரித்துக் கொண்டு இருக்கின்றபடியாலே, அவனைப் பற்றுவதால் நமக்கு ஒரு பலனும் இல்லை என்கிறார்.

நான்முகன் திருவந்தாதி - 84ஆம் பாசுர விளக்கம்

எம்பெருமானைப் பற்றுவதையே தொழிலாகக் கொண்ட எனக்கு சிவனும் சமமாக மாட்டான் என்கிறார் ஆழ்வார். நான் இரண்டு பட்ட மனத்தை உடையவன் அல்லேன். ஞானத்தால் நான் ருத்தரனுக்கு சமமானவன். எம்பெருமானிடத்தில் எனக்கு உள்ள ஆசையில் அவன் எனக்குச் சமம் ஆனவன் அல்லன். அடியவர்களின் விரோதிகளை அழிப்பதற்காக வீரக் கழலை அணிந்து அச்செயலால் என்னை அடிமை கொண்ட கண்ணனை என்றும் தொழு வதற்குரிய காதலே தொழிலாகக்கொண்டேன்.

திருமழிசையாழ்வார் மகிமை

இவ்வாழ்வார் அருளிய திவ்வியப் பிரபந்தங்கள் இரண்டு. 1. நான்முகன் திருவந்தாதி 2. திருச்சந்த விருத்தம். இவை இரண்டும் திவ்ய ப்ரபந்தங்கள் எல்லா வற்றினுள்ளும் வேதாந்த விழுப்பொருள்கள் நிரம்பித் ததும்பிய மிகச் சிறந்த அரிய பெரிய நூல்களாம். இவ்வாழ்வாருடைய காலத்தில் தேவதாந்தர பரத்துவம் கொள்ளும் மதாந்தரஸ்தர்கள் மலிந்து இருந்ததனால் அவர்களைத் திருத்தி வழிபடுத்த வேண்டுவது இவர்க்கு அவசியமாய் அமைந்தது. ஆகவே இவர் திருவந்தாதி தொடங்கும் போதே **ஸ்ரீமந்நாராயண பரத்வத்தை** மிக அழுத்தமாக அருளிச் செய்கின்றார் (நான்முகனை நாரயணன் படைத்தான்). அது தலைக்கட்டும் மிடத்தும் இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம், இனியறிந்தேன் எம்பெருமானுன்னை என்கிறார். இடையிலும் பல பல பாசுரங்களினால் தேவதாங்தரங்களின் அபூர்த்தியையும் பரமபுருஷனுடைய பூர்த்தியையுமே பேசுகின்றார். ஆகவே இவரது திருவந்தாதி பெரும்பாலும் பரதத்வஸ்தாபனத்தில் நோக்குடைத்தாயிருக்கும்.

இதில் முதல் பாசுரம் நான்முகனை நாராயாணன் படைத்தான், நான்முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான் - யான் முகமாய் அந்தாதி மேலிட்டு அறிவித்தேனாழ் பொருளைச் சிந்தாமற் கொண்மினீர் தேர்ந்து என்பதாம். பெரியவாச்சான்பிள்ளை இப்பாசுரத்தின் வியாக்கியான அவதாரிகையில் அருளிச்செய்யப்பட்டுள்ள ஒரு அற்புதமான திவ்ய ஸுக்தியை கீழே காண்போம்.

ப்ரஹ்மாதிகள் ஸம்ஸாரத்தை ப்ரவர்த்திப்பிக்க ப்ரதாநர் ஆனாப்போலே, தந்நிவ்ருத்திக்கு ப்ரதாநன் ஆனேன் நான் என்கிறார். இந்த ஸ்ரீசுக்தியின் காம்பீர்யம் வாசாமகோசரம். இதன் கருத்தாவது. நாராயணன் நான்முகனைப் படைத்து வைத்தான். அந்த நான்முகனும் மற்றுள்ள ஸ்ருஷ்டிகளைப் பண்ணிப்போனான். ஆக இவ்விருவரும் இப்படி ஸம்ஸாரத்தை வளரச் செய்து வைத்தார்களே யன்றிஅடியறுக்கப் பார்த்தாரல்லர். நான் அங்ஙனம் இன்றியே உங்களுடைய ஸம்ஸாரம் வேரறும்படியாக ஆழ்பொருள்களை அறிவிக்க முற்படுகின்றேன் காண்மின் என்று ஆழ்வார் அருளிச் செய்வதாகப் பெரியவாச்சான் பிள்ளை எடுத்துக் காட்டியருளியிருப்பது பரமரஸம்.

இவ்வாழ்வார் ஆழ்பொருளை அறவிக்கத் தொடங்கும்போதே அறிவித்தேனாழ் பொருளை என்று இறந்த காலத்தாற் கூறினது தம்மைக் கொண்டு அறிவிக்க விரும்பிய எம்பெருமான் ஸத்ய ஸங்கல்பனாகையாலும், எம்பெருமானுடைய பரத்து வத்தைப்பற்றிப் பாசுரங்கள் பேசித் தலைக்கட்டியே தீரும்படியான தம் உறுதியினாலும் இப்பிரபந்தம் தலைக்கட்டி விட்டதாகவே நினைத்தோம். இதனைத் தமிழர் தெளிவினால் எதிர்காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி என்பர். இப்பாசுரம் முதலிய இருநூற்றுப் பதினாறு பாசுரங்களை (இரண்டு நூலாக) உதவி அருளின இம்மஹான் தையில் மகத்தில திருவவதரித்து நம்மை வாழ்வித்தருளினர். (மேலே குறிப்பிட்ட விஷயங்கள் காஞ்சீ ஸ்வாமி அருயுள்ள திருவத்யயனோத்ஸவ வைபவ தீபிகையிலிருந்து எடுக்கப்பட்டது)

திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய:

ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

ஸ்ரீகூரத்தாழ்வான், ஈச்சம்பாடி ஆச்சான் - வருஷ திருநட்சத்திரம் - தை - ஹஸ்தம்





ஸ்ரீகூரத்தாழ்வான் - கூரம் (அவதாரஸ்தலம்) மற்றும் ஸ்ரீரங்கம்

## தனியன்

மகரே ஹஸ்த நசஷத்ரே ஸா்ப்பநேத்ராம்ஸ ஸம்பவம் /
ஸ்ரீமத் கூரகுலாதீஸம் ஸ்ரீவத்ஸாங்க முபாஸ்மஹே //

ஸ்ரீவத்ஸசிஹ்ந மிஸ்ரேப்யோ நம உக்திம் அதீமஹி /
யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்கள ஸீத்ரதாம் //

## வாழித்திருநாமம்

சீராருந்திருப்பதிகள் சிறக்க வந்தோன் வாழியே
தென்னரங்கா் சீரருளைச் சேருமவன் வாழியே
பாரரு மெதிராசா் பதம் பணிந்தோன் வாழியே
பாடியத்தினுட்பொருளைப் பகருமவன் வாழியே
நாரயணன் சமயம் நாட்டினான் வாழியே
நாலுரான் தனக்கு முத்தி நல்கினான் வாழியே
ஏராருந் தையிலத்தத் திங்கு வந்தான் வாழியே
எழில் கூரத்தாழ்வான் தன்னிணையடிகள் வாழியே.

பொருள்விரிக்கும் எதிராசா் பொன்னடியோன் வாழியே
பொன்வட்டில்தனை எரிந்த புகழுடையோன் வாழியே
மருள்விரிக்கும் முக்குறும்பை மாற்றவந்தோன் வாழியே
மயா்வறவே மெய்ஞ்ஞானம் விளங்கிடுவோன் வாழியே
இருள்விரிக்கும் சிவமெதிரிட்டு எழுத்திட்டோன் வாழியே
ஏதமற எவ்வுயிா்க்கும் இதமளித்தோன் வாழியே
அருள்விரிக்கும் அரங்கத்தான் அடி இணையோன் வாழியே
அழகாரும் கூரத்தாழ்வான் அடியிணைகள் வாழியே.

## இவரை போற்றும் பாசுரம் - இராமாநுசநூற்றந்தாதி - 7 பாசுரம்

மொழியைக்கடக்கும் பெரும் புகாழான் . வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும் நம்கூரத்தாழ்வான் சரண்கூடியபின்
பழியைக்கடத்து மிராமாநுசன் புகழ்பாடியல்லா வழியைக்கடத்தல்
எனக்கினியாதும் வருத்தமன்றே.

குருபரம்பரை விஷயமாக இவா் அருளிய தனியன்

லசஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்
அஸ்மதாசாா்ய பா்யந்தாம் வந்தே குருபரம்பரம்

## எம்பெருமானார் விஷயமாக இவர் அருளிய தனியன்

யோ நித்யமச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஸரணம் ப்ரபத்யே.

## பெரிய திருமொழி தனியன்

நெஞ்சுக்கிருள்கடிதீபம் அடங்காநெடும்பிறவி
நஞ்சுக்கு நல்லவமுதம். தமிழ்நன்னூல் துறைகள்
அஞ்சுக்கிலக்கியம் ஆரணசாரம். பரசமயப்
பஞ்சுக்கனலின் பொறி. பரகாலன் பனுவல்களே.

இவர் திருநாமங்கள் - ஸ்ரீவத்ஸாங்கர், கூரத்தாழ்வான், கூரேஸர், கூராதிபர், கூராதிபதி, கூரநாதர், ஸ்ரீவத்ஸசிஹ்நர்,
தேவியார் - ஆண்டாள்
திருக்குமாரர்கள் - பெரியபட்டர், ஸ்ரீராமப்பிள்ளை
ஆவதாரஸ்தலம் - கூரம்
ஆசாரியன் - எம்பெருமானார்
இவர் செய்தருளின க்ரந்தங்கள் - வரதராஜஸ்தவம், ஸுந்தர பாஹுஸ்தவம், அதிமானுஷஸ்தவம், ஸ்ரீவைகுண்டஸ்தவம், ஸ்ரீஸ்தவம், யமகரத்நாகரம், கத்யத்ரய வ்யாக்யானம்.
எம்பெருமானாருக்கு ஸகோதரருமாய், பவித்ரமுமாயிருப்பர்.
சிஷ்யர்கள் - பட்டர், பிள்ளைப்பிள்ளையாழ்வான், திருவரங்கத்தமுதனார், நாலுரான்

## முக்குறும்பை அறுத்தவர்

கல்விச்செருக்கு, செல்வச்செருக்கு, குலச்செருக்கு என்ற இம்மூன்று அஹங்காரங்கள் மிகக்கொடியவை; இவற்றைக் கடத்தல் ஆர்க்கும் அரிது; இவற்றை கடந்தவர் என்னும் ஏற்றம் ஆழ்வான் ஒரவருக்கே பொருந்தும் என்பது எம்பெருமானார் காலத்திலேயே ப்ரஸித்தமாய்யிருந்தது. நாமும் இவரைப் போல் வாழ முயற்சிப்போம்.

## கூரத்தாழ்வான் என்ற திருநாமம் ஏற்பட்ட விதம்

இவர் பகவத்விஷயத்தில் மிகவும் உருக்கம் உடையவர். இவர் தன் சிஷ்யர்களுக்கு திருவாய்மொழி வ்யாக்யான காலசேஷபம் செய்வார். முதல் பாசுரம் `உயர்வற உயர்நலமுடையவன்' என்று எடுத்த எடுப்பிலேயே `ஸகல கல்யாண குணங்களும் நிரம்பப் பெற்றவன் எம்பெருமான்' என்று எம்பெருமானின் கல்யாண குணங்களை விவரிக்கும் பொழுதே மூர்ச்சையாகிவிட்டார். இதனையறிந்த எம்பெருமானார், இவரிடம் வந்து, இவர் முதுகைத் தட்டி, `ஆழ்வான், ஆழ்வான்'
என்று கூப்பிட்டார். இவர் மோஹம் தெளிந்து எழுந்தார். அதுமுதல் இவருக்கு ஆழ்வான் என்ற திருநாமம் ஏற்பட்டது.

## ஆழ்வானும் பிள்ளைப்பிள்ளையாழ்வானும் - பாகவதாபசாரம் பண்ணக்கூடாது

ஆழ்வானுடைய சிஷ்யர்களில் பிள்ளைப்பிள்ளையாழ்வானும் ஒருவர். அவர் உயர்குடியில் பிறந்து வித்வானாய் இருந்தார். அதனால் வந்த கர்வத்தினால் விநயமின்றிப் பரமபாகவதரிடத்தும் சுடுசொல் பேசி பாகவதாபசாரப் படுவதையே இயல்பாகக் கொண்டிருந்தார். இதையறிந்த ஆழ்வான் அவரைத் திருத்தி பணிகொள்ள வேண்டும் என்று எண்ணி ஒரு புண்ணியதினத்தன்று அந்த சிஷ்யர் தீர்த்தமாடிக்கரையேறின அளவிலே அவரிடம் சென்று `இன்று புண்யகாலம் அவரவர் ஸக்திக்கேற்றகடி தானம் செய்யாலாம். நமக்கு ஒருதானம் செய்ய வேண்டும்` என்று கேட்டார். சிஷ்யரும் ஸ்வாமி எதை விரும்பினாலும் அதை தானமாகத்தர ஸித்தமாக உள்ளேன்` என்று சொல்ல, ஆழ்வானும், `மணம், மொழி, மெய் இவை எதனாலும் பாகவத அபசாரம் பண்ணாமல் வாழக்கடவேன்` என்று நம் கையில் நீர் வார்த்து தானம் பண்ணிக் கொடும்` என்று வேண்ட, அவரும் அப்படியே என்று உதகதானம் பண்ணித்தந்தார். ஆனாலும் பழக்கதோஷம் காரணமாக ஒருநாள் ஒரு பாகவதரிடம் அபசாரப்பட நேர்ந்தது. அப்படி நேர்ந்துவிடவே ஆசார்யனுக்கு பண்ணியதானத்தை நினைந்து மிகவும் வருந்தி ஆசாரியன் திருமாளிகைக்கு செல்லவில்லை. சிலநாட்கள் இவர் வராததைக்கண்டுஆழ்வான் அவர் இல்லம் சென்று காரணத்தை வினவினார். அதற்கு பிள்ளைப்பிள்ளையாழ்வானும் `ஒருவரிடம் பாகவத அபசராப்பட்டேன்` என்று உம்மிடம் ஸத்தியம் பண்ணிக்கொடுத்தும், அடியேனால் மனம், மொழி, மெய் இம்முன்றாலும் பாகவதர்களிடம் அபசாரம் படாமலிருக்க இயலவில்லை' என்று கூறினார். இச்செயலை மன்னித்து ஆழ்வான் அவரை மனம் தேற்றினார்.

## மின்னின் நிலையில மன்னுயிரக்கைகள்

ஆழ்வான் தாமே தமது குமாரர்களுக்கு திருவாய்மொழி முதலானஅருளிச்செயல்களையும் பொருளையும் எடுத்துரைத்தார். ` எண் பெருக்கந் நலத்து' என்ற பாசுரத்தின் அர்த்தத்தை விளக்குகையில் திருமந்த்ரார்த்தத்தை சொல்ல நேறிட்டது. திருமந்த்ரார்த்தத்தை ஆசாரியன் எம்பாரிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தார். ஆனால் உடனே `மின்னின் நிலையில மன்னுயிரக்கைகள்' என்ற பாசுரம் நினைவுக்கு வர, அடுத்த நிமிடம் நீங்கள் உயிருடன் இருப்பீர்கள் என்பது நிலையில்லை ஆதலால் இப்போதே இச்சீரிய பொருளைக்கேட்டு நலனடையுங்கள் என்று ஆழ்வான் பிள்ளைகளுக்கு திருமந்த்ரார்த்தத்தை உபதேசம் செய்தார்.

## பெரியபெருமாள் ஆழ்வானுக்கும் அவர் ஸம்பந்தமுடையாருக்கும் மேல்வீடு அளித்தல்

ஆழ்வான் ஸம்ஸாரத்தில் இருப்புக்கொள்ளாமல் `அடியேனை திருநாடு ஏறப்போம்படி திருள்ளமாக வேணும்' என்று பெரியபெருமாளிடம் விண்ணப்பம் செய்தார். `உமக்கும் உமது ஸம்பந்தமுடையாருக்கும் நமது வீடு தந்தோம்' என்று பெருமாள் அருளினார். எம்பெருமானார் இது அறிந்து தமக்கும் பெருவீடு நிச்சயம் என்று மகிழ்ந்து மறுநிமிடமே திருவரங்கப்பெருமாள் அரையர் திருமாளிகையில் ஆழ்வான் இருப்பது அறிந்து அங்கு சென்றார். ஆழ்வானிடம் `ஏன் இப்படி' என்று கேட்க, அதற்கு ஆழ்வான், அடியேன் ஸம்ஸாரத்தின் அடிக்கொதிப்பால் ஆசாரியனைப் பிரியவேணும் என்பதையும் மறந்து பெருமாளிடம் மேல்வீடு தரும்படிகேட்டதாகச் சொன்னார்.

## ஆழ்வான் நாள்பாட்டு

மட்டவிழும் பொழில்சூழ் குருகேசர் மறைத்தமிழ் வாழ்ந்திடுநாள்
மண்ணுலகில் ஸ்ரீபாஷ்யம் விளங்கிட வந்து பிறந்தவர் நாள்
எட்டு மிரண்டு மிசைந்த சுலோக மிசைத்திட வந்தவர் நாள்
இல்லையெனச் சிவமென்றே யெதிரிட் டெழுத்திட வந்தவர் நாள்
துட்ட குதிர்ட்டிகள் மாயிகள் வாழ்வைத் துணித்திட வந்தவர் நாள்
சூரியபூமியராரிய ரென்று துதித்திட வந்தவர் நாள்
அட்ட திசைக்கும் நிறைந்த புகழ்ந்தணர்வாழ கூரத்தாழ்வான்
வந்தருளிய தையில் விளங்கிடு அத்தமது நன்னாளே.
(அத்தமதெனு நாளே என்பதும் பாடம்)

## ஸ்ரீஈச்சம்பாடி ஆச்சான் (பெரிய திருமலைநம்பியின் திருப்பேரன்)

### வாழித்திருநாமம்

ஏராரும் தையத்தம் இங்குதித்தான் வாழியே
சுந்தரேசன் திருமகனாய்த் துலங்குமவன் வாழியே
பார்புகழும் யதிராஜன் பதம்பணிவோன் வாழியே
சீராரும் வேங்கடத்தில் திகழுமவன் வாழியே
பார்மகிழும் பாடியத்தைப் பகருமவன் வாழியே
உத்தமமாம் குலமதனில் உதித்தபிரான் வாழியே
தொண்டர்குழாம் கண்டுகக்கும் தொல்புகழோன் வாழியே
நல் ஈச்சம்பாடி வாழ் நம்மாச்சான் வாழியே.

திரவவதாரஸ்தலம் - திருமலைக்கு அருகிலுள்ள ஈச்சம்பாடி என்னும் அக்கிரஹாரம்
திருநாமம் - ஸ்ரீனிவாசாசாரியர், ஈச்சம்பாடி ஆச்சான்
திருத்தாயார் - பெரிய திருமலைநம்பியின் குமாரத்தி
திருத்தகப்பனார் - ஸ்ரீஅழகப்பிரான் என்கிற ஸ்ரீசுந்தரதேசிகன் (இவருக்கு திருமாலிருஞ்சோலை தாஸர் என்கிற தாஸ்ய நாமம் உண்டு)
இளையசகோதரார் - ஈச்சம்பாடி ஜீயர் (ஸ்ரீவேங்கடேசன்)
இவர் எம்பெருமானார் ஏற்படுத்திய 74 சிம்மாசநாதிபதிகளில் ஒருவர் ஆவார்.

## ஸ்ரீஅழகப்பிரான் என்கிற ஸ்ரீசுந்தரதேசிகன் வைபச்சுருக்கம்

ஈச்சம்பாடி ஆச்சானின் வைபத்தை அனுபவிக்கும்போது அவருடைய திருத்தகப்பனார் திருமலை ஈச்சம்பாடி ஸ்ரீஅழகப்பிரான் என்கிற ஸ்ரீசுந்தரதேசிகன் ஸ்வாமியைப் பற்றியும் அவருடைய இளைய சகதோரர் ஈச்சம்பாடி ஜீயரைப்பற்றியும் சில விஷயங்களை இங்கே அனுபவிப்போம்.

ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீபாதத்து முதலிகளான 20 திருநாமங்களில் ஒருவராயும் ஸ்ரீஆளவந்தாரால் திருமாலிருஞ்சோலை தாஸர் என்னும் தாஸ்ய நாமம் சாத்தப்பட்ட ஸ்ரீஅழகப்பிரான் என்கிற ஸ்ரீசுந்தரதேசிகன் புரட்டாசி மாதத்தில் ஸ்வாதி நட்சத்திரத்தில் திருமலைக்கு சமீபத்தில் உள்ள ஈச்சம்பாடி என்னும் அக்கிரகாரத்தில் அவதரித்தார். இவ்வழகப்பிரான் சகல வித்யைகளையும் காலக்கரமேண அப்யஸித்தருளினார். இக்குமாரரைக் கண்டு உகந்த பெரிய திருமலை நம்பி தன் குமாரத்தியைக் கொடுப்பதாகச் சொல்ல, அதை உகந்து இவர் திருத்தகப்பனார் ஸ்ரீனிவாசாரியரும் தம் குமாரர் சுந்தரதேசிகனுக்கு திருக்கல்யாணம் செய்தருளினார்.

பிறகு திருத்தகப்பனார் நியமனத்தினால் ஆளவந்தாரை ஆச்ரயித்தார். ஆளவந்தார் இவருக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்கள் செய்து திருமந்த்ரம், த்வயம், சரமச்சோலகம் முதலிய ரஹஸ்யார்த்தங்கள், வேத வேதாரார்த்தங்கள், ஸகல புராண, இதிஹாஸங்கள், திவ்ய ப்ரபந்தங்கள் முதலான க்ரந்தங்களை உபதேசித்தார்.

ஆசார்யரான யமுனைத்துறைவரையே தமக்கு எல்லாமாகக்கொண்டு, அவரிடத்திலேயே சகல அடிமைகளும் செய்து கொண்டு இருந்தார். அந்த காலகட்டத்தில், ஆளவந்தார் இவரை அழைத்து திருவேங்கடமென்னும் திருப்பதியில் திருமஞ்சனம், திருத்துழாய், புஷ்பம், சாத்துப்படி, தூபதீபம், வேதபாராயணம், மந்தரபுஷ்பம், புராணம் முதலிய ஸகல கைங்கர்யங்களையும் நீரும் பெரிய திருமலை நம்பியைப் போல் திருவேங்கடத்தானுக்கு செய்து கொண்டு போரும் என்று நியமித்தார்.

திருமலையில் செண்பகப் பிராகாரத்தில் தசஷிணபாகத்தில் (தெற்குப் பாகத்தில்) ஒரு பூவலவாபி எடுத்து அந்த கூபத்திற்குத் தம்முடைய திருநாமத்தைச் சாத்தி **(ஸுந்தர கூபம்),** அந்த கூபத்திலிருந்து பெருமாளுக்குத் திருமஞ்சனம் நித்யம் சமர்பித்துக் கொண்டு இருந்தார். இப்போதும் அந்த ஸுந்தர கூபத்தில் இருந்து திருவேங்கடத்தான் திருவாராதனம் கண்டு அருளுகிறார்.

இவ்வழகப்பிரான் திருமலையில் ஸ்வாமி புஷ்கரணிக்கரையில் திருமலை நம்பிகள் திருமாளிகைப் பக்கத்தில் இருந்து கொண்டு ஸந்நிதி ப்ராகார வெளியில் அனேக திருநந்தவனங்களின் நடுவே தாமும் ஓர் உத்யானவனம் செய்து, அந்த தோட்டத்திற்கு தம்முடைய திருநாமமான திருமாலிருஞ்சோலை தாஸர் என்னும் பேர் சாத்தி அந்த தோட்டத்தில் இருந்து பலவித புஷ்பங்கள், திருத்துழாய், தவனம், மருகு முதலான மாலைகளும் மலையப்பனுக்கு நித்யம் ஸமர்ப்பித்துக் கொண்டு இருந்தார். திருவாராதன காலத்தில் வாசிக கைங்கர்யமான திருப்பல்லாண்டு பாடுகை, வேதபாராயணம், மந்திரபுஷ்பம் முதலான ஸகல கைங்கர்யங்களிலும் அந்வயித்து எழுந்தருளியிருந்தார்.

## எம்பெருமானாருக்கு குரு ஆகுதல்

அந்தச்சமயத்தில் நம் இராமாநுசன் ஒரு கால் திருவேங்கட யாத்திரை சென்றபோது பெரிய திருமலை நம்பியின் நியமனத்தால் ஸுந்தர தேசிகரிடத்தில் தாபநீயோ உபநிஷத்தையும் ந்ருஸிம்ஹ மந்திரம் முதலியனவைகளையும் கேட்டு அறிந்தார். இந்தக் காரணத்தால் ஸுந்தர தேசிகர் இராமாநுசருக்கும் குருவாக விளங்கினார்.

## ஈச்சம்பாடி ஆச்சானும் ஈச்சம்பாடி ஜீயரும்

இவ்வாறு இவர் திருமலையில் மலையப்பனுக்கு கைங்கர்யங்கள் பண்ணிக்கொண்டு போகும் காலத்தில், ஒரு குமாரர் தை மாதம் ஹஸ்த நடசத்திரத்தில் அவதரித்தார். அவருக்கு **ஆச்சான் ஸ்ரீனிவாஸாசாரியர்** என்ற திருநாமம் சாத்தினார். அதற்கு பிறகு நாலைந்து வருஷம் கழித்து மற்றொரு குமாரர் ஆனி மாதம் திருவோண நட்சத்திரத்தில் அவதரித்தார். அவருக்கு **ஸ்ரீவேங்கடேசன்** என்ற திருநாமம் சாத்தினார்.

இவ்வழகப்பிரான் இவ்விரு குமரார்களுக்கும் காலக்கரமேண அந்தந்தக் காலங்களில் சாஸ்திரவிதிப்படி செய்யவேண்டியவைகளைச் செய்து, வேத அத்யயனம் முதலான ஸகலவித்யைகளையும் அப்யஸிக்கும்படி செய்தருளினார். இத்திருக்குமாரர்கள் ஸகல வித்யைகளிலும் ஸமர்த்தர்களாய் விளங்கும் ஸமயத்திலே இவர்களைக் கண்டு உகந்து, பெண் வீட்டார்கள் தம் கன்னிகைகளைக் கொண்டு கொடுக்க, திருத்தகப்பனாரும் மிக உகந்து 2 திருக்குமாரார்களுக்கும் திருக்கல்யாண மஹா உத்ஸவத்தையும் சாஸ்திர விதிப்படி செய்தருளினார்.

அனந்தரம் திருக்குமாரர்கள் இல்லர வாழ்க்கையை நடத்திக் கொண்டு போகும் காலத்தில், திருத்தகப்பனார் ஸ்ரீஅழகப்பிரான் தன் குமாரர்களைக் கடாஷித்து, நீங்கள் இனி நம் இராமாநுஜன் திருவடிகளை அடைந்து உய்ம்மின் என்று நியமித்தார். அப்படியே இவர்களும் இராமாநுஜன் திருவடிகளை அடைந்து திருமந்த்ர த்வ்ய சரமஸ்லோகார்த்தங்களையும், உபநிஷத் அர்த்தங்களையும், ஸ்ரீபாஷ்யம், திவ்ய ப்ரபந்த அர்த்தங்களையும், ஸகல இதிகஹாஸ சாஸ்திரபுராண வ்யாக்யன தர்க்க மீமாம்ஸாதி சாஸ்திரங்களையும், ஆளவந்தார் சாதித்த க்ரந்தங்களையும் மற்றுமுள்ள க்ரந்தங்களையும் கெட்டு அறிந்தனர். இராமாநுஜனையே எல்லா உறவுமாகப் பெற்று சகல அடிமைகளும் செய்து வாழ்ந்து வந்தனர். இவர்கள் இருவரும் எம்பெருமானார் ஏற்படுத்திய 74 சிம்மாசனாதபதிகளில் தலைவர்களாயும் எழுந்தருளி இருந்தார்கள். சில காலத்திற்கு பிறகு இரண்டாவது திருக்குமாரர் ஸ்ரீவேங்கடேசர் ஜ்ஞானபக்தி விரக்தி யுக்தராய் யதிராசரிடத்தில் ஸந்யாச ஆஸ்ரம ஸ்வீகாரம் பெற்று அதுமுதல் **ஈச்சம்பாடி ஜீயர்** என்று பெயர் சாற்றப் பெற்று விளங்கினார். மிகவும் நிஷ்டையுடன் அதிவிரக்தராய் சிஷ்யர்களுக்கு ஸ்ரீபாஷ்யம், திவ்ய ப்ரபந்தங்களுக்கு அர்த்தங்களை சாதித்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். **(மேலே குறிப்பிட்டது புத்தூர் ஸ்வாமி வெளியிட்டு உள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரி என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது)**

**ஸ்ரீகூரத்தாழ்வான், ஸ்ரீஈச்சம்பாடி ஆச்சான் திருவடிகளே சரணம்.**

**வாசிக தோஷ: சஷந்தவ்ய:**

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமுடும்பை பூர்ணாய நம:
ஶ்ரீமத் வரவரமுநயே நம:
ஶ்ரீமத் வரதகுருவே நம:

## ஈச்சம்பாடி ஆச்சான் - தை ஹஸ்தம் - தனியன்

1. ஶ்ரீ பாஷ்யகார யதிவல்லப தத்த பஞ்ச
ஸம்ஸ்கார பாஷ்ய பகவத் விஷயாதி கம்ச
ஶ்ரீஸுந்தரேச குருலப்த ரஹஸ்ய மந்த்ரம்
ஶ்ரீ ஶ்ரீநிவாஸ குருவர்ய மஹம் ப்ரபத்யே.

2. ஶ்ரீகௌண்டிந்ய குலாத்ரி சேகரவர
ஶ்ரீஸுந்தரேசா த்மஜம்
ஶ்ரீராமாநுஜ பாதபத்ம யுகளீ
நிர்வேல நிர்வேசனம்
திக் தந்தாவள கும்பமத்ய விலஸந்
முக்தா ஸராடம் பர
ப்ரௌடோதார யசஸ்கரம் குருவரம்
ஶ்ரீ ஶ்ரீநிவாஸம் பஜே.

3. ஶ்ரீஸுந்தரேச குருவர்ய ஸமுத்பவாய
தஸ்மாத வாப்த சிதசித்ப்ர விபோதநாய
கௌண்டிநயவம்ச கலசோததி கௌஸ்துபாய
ஶ்ரீ ஶ்ரீநிவாஸ குரவே கலயே ப்ரணாமாந்.

## ஈச்சம்பாடி ஜீயர் - ஆனி திருவோணம் - தனியன்

உபாத்த சரமாச்ரமம் யதிபுரந்தாரா திந்திரா
நிவாஸ குரு பூர்வஜம் யதிவரம் ஸதாஸம் ச்ரயே
அசம்சல த்ருகஞ்சல த்ருடித ஸர்வ துர்வாஸநா
கதாங்குர விகஸ்வரம் நிஜகுலா பிஜாத வ்ரஜம்
பூயோபி ப்ரணமாமிதம் சமதம ப்ரக்ஞாதி ரத்நாகரம்
ஶ்ரீராமாநுஜ யோகிவர்ய கருணா விச்ராணி தாந்த்யாப்ரமம்
குர்வாணம் நிஜபாத பக்த ஜநதாம் நிர்வாண ஸம்பத் கரீம்
ஈச்சம்பாடி முநிம் மஹாந்தம நகம் ப்ராப்யைக பாராபணம்

## ஸ்ரீ சுந்தரதேசிகன் (அழகப்பிரான்) தனியன் / ஸ்லோகம் - புரட்டாசி ஸ்வாதி

1.ஸ்ரீமத் ஸுந்தர ராஜாக்ய: ஸ்ரீநிவாஸ புரோஹித:
ஸ்ரீநிவாஸஸுத: ஸ்ரீமாந் ச்ரேயஸே மேஸ்து பூயஸே.

2.யஸ்தாப நீயோபநிஷத் ப்ரதாநாத் யதீச்வாஸ்யாபி குருர் பபூவ
கௌண்டி ந்யவம்சாப்தி களாநிதிமதம் ஸ்ரீஸுந்தரேசம் சிரஸா பஜாம:

3.நாரஸிம்ம மநுதான தோஷிதோ ராம ஸோதர முநிர்நநந்தயம்
தாத ஸம்ய குபதிஷ்ட மித்யமும் ஸுந்தரேச குருவர்ய மாச்ரயே

4.ய: ஸ்ரீநிவாஸாலய சம்பகாக்ய ப்ராகார பர்யந்தர தக்ஷிணாம்சே
ஸ்வநாமத: கூபவரம் சகார யஸ்தம்குரும் ஸுந்தர ராஜமீடே

5.ஸ்ரீதாபநியோ பநிஷத் ரஹஸ்யம் யேநோபதிஷ்டம் யமிநாம் வராய
ஸ்ரீவேங்கடாதீச புரோத ஸம்ச பஜேமதம் ஸ்ரீகர ஸுந்தரேசம்

6.ஸ்ரீவேங்கடேசாசல சம்பகாக்ய ப்ராகாரமத்யே நிஜகா நகூபம்
ஆராத நாயாங்கித மாத்ம நாம்நா பஜேமதம் ஸ்ரீகர ஸுந்தரேசம்

7.ஸ்ரீமத்யாமுந யோகிந: பதயுகம் ப்ராப்தம் பரம் ஸாதநம்
தத்காருண்ய கடாக்ஷ லப்த ஸகல த்ராயந்த வித்யா நிதிம்
பத்மே சஸ்ய புரோகஸம் புஜகராட் பூமி தர ஸ்வாமிந:
கௌண்டிந் யாந்வய பூஷணம் குருவரம் ஸ்ரீஸுந்தரேசம் பஜே

8.ஸ்ரீ ஸுந்தராசார்ய வரோப திஷ்ட ஸ்ரீ தாபநீயோ பநிஷத் ரஹஸ்யம்
ஸ்ரீ மந் தமஸ்மத் குலதேசிகம் தம் ஸ்ரீ பாஷ்ய காரம் யதிராஜ மீடே
(ஸ்ரீ பாஷியகாரர் விஷயம் இந்த ஒருச்லோகம்)

**ஸ்ரீ சுந்தரதேசிகன், ஈச்சம்பாடி ஆச்சான், ஈச்சம்பாடி ஜீயர் திருவடிகளே சரணம்.**

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய:
ஸ்ரீமுடும்பை பூர்ணாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## ஸ்ரீ முடும்பை நம்பி என்கிற ஸ்ரீ வரதாசாரியர் ஸ்வாமி – வருஷ திருநட்சத்திரம் தை - ஹஸ்தம்

### தனியன்கள்

### திருநட்சத்திர தனியன்

ராமானுஜ முநே: சிஷ்யம் ஸ்ரீவத்ஸாங்கித ஸுப்ரியம் /
மகரே ஹஸ்தாவதீர்ணம் வாத்ஸ்யம் வரதமாச்ரயே //

### நித்ய தனியன்கள்

ஸ்ரீராமாநுஜ ஸம்யமீந்த்ரசரணம் ஸ்ரீவத்ஸ சிஹ்ந ப்ரியம்
ஸேவேஹம் வரதார்ய நாமகமமும் ஸுக்த்யா ப்ரஸித்தம் முதா /
ஆபால்யாத் பரிபூர்ண போத சடஜித் காதாநுராகோஜ்வலம்
வாத்ஸ்யம் பூர்ணம் உதாரம் ஆச்ரிதநிதிம் வாத்ஸல்ய ரத்னாகரம் //

ஸ்ரீராமாநுஜ யோகீந்த்ர பதபங்கஜ ஷட்பதம் /
முடும்பை பூர்ணமநகம் வந்தே வரதஸம்க்ஞகம் //

ஸ்ரீமத் ராமாநுசார்ய ஸ்ரீபாதாப்ஜ மதுவ்ரதம் /
ஸ்ரீவத்ஸபூர்ணமநகம் வந்தே வரதஸம்க்ஞகம் / /

### சீர்

வாழி முடும்பை வரதாரியன்தன் மலரடிகள்
வாழியவன் திருநாமம் வாய்மொழிகள் - வாழியே
எந்தை எதிராசமுனி இன்னருளால் எழில்மாறன்
தென்தமிழ்நூல் தெளிந்துரைக்கும் சீர்.

## வாழித்திருநாமம்

எத்திசையும் புகழ்முடும்பைக்கு இறைவனார் வாழியே
எழுபத்துநாலில் ஒருவராய் இலங்குமவன் வாழியே
உத்தமனாம் ஆழ்வானுக்கு உகப்புடையோன் வாழியே
ஒளிர்மகிழ் மாறன் மறைக்கு உருகுமவன் வாழியே
அத்திகிரி அருளாளர்தம் அடிபணிவோன் வாழியே
அடியவர்க்கு ஆழிசங்கம் அளித்தருள்வோன் வாழியே
சுத்தமுடை தையிலத்தம் தோன்றினான் வாழியே
தொல்புகழ் வரதாரியன் தன் துணைப்பதங்கள் வாழியே.

## வடிவழகு

எதிராசன் அடிபணியும் எழில்முடி மிகவாழி
இனியசெந்திருமுக மண்டலமும் வாழி
பதிவான நாமமணி நன்னுதலும் வாழி
பாடியமும் தமிழ்மறையும் பகர்நாவும் வாழி
சதிரான வளைக்கழுத்தும் திருமார்பும் வாழி
சாற்றிய வெண்புரிநூலும் மாலைகளும் வாழி
கதியான முடும்பைநம்பி கழல்களிரண்டு முடனே
கருணை மாநோக்கும் கரமும் ஊழிஊழி வாழியே.

## தொங்கல்

தேசிகர்கள் வாழத் திருப்பதிகள் தாம் வாழ
பாஷியமுடன் தமிழ் மறையும் வாழ – மாசில்புகழ்
மன்னு முடும்பை நகர் வந்த வரதாரியனே
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

மேலே உள்ள தனியன்கள், சீர், வாழித்திருநாமம், வடிவழகு, மற்றும் தொங்கலை அடியேனுக்கு கொடுத்து உதவிய ஆழ்வார் திருநகரி ஆத்தான் வடக்குத்திருமாளிகை ஸ்ரீ உ.வே.கண்ணன் வேங்கட வரதாசாரியார் ஸ்வாமிக்கும் மற்றும் ஆழ்வார் திருநகரி ஸ்ரீ உ.வே கோவிந்தன் ஸ்வாமிக்கும் அடியேன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருநாமம் - வரதாசாரியர்
அவதாரஸ்தலம் - முடும்பை : கோத்ரம் - ஸ்ரீவத்ஸகோத்ரம்
இவர் எம்பெருமானாரின் ஒரு சகோதரியின் கணவர் ஆவார்
திருக்குமாரர் - ராமாநுஜ நம்பி

எம்பெருமானார் ஏற்படுத்திய 74 சிம்மாசனாதிபதிகளில் இவரும் ஒருவர் ஆவார்.

## முடும்பை நம்பி வம்ஸத்தின் பெருமை

ஸ்ரீமுடும்பை நம்பி காஞ்சிபுரத்துக்கருகில் முடும்பை என்னும் அக்ரஹாரத்தில் ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் அவதரித்தார். இவருடைய இயற்பெயர் ஸ்ரீவரதாசாரியர். இவர் எம்பெருமானாரின் ஒரு சகோதரியின் கணவர். இவர் பால்யத்திலிருந்தே மஹாஞானியாகவும், ஆழ்வார்கள் அருளிச்செயல்களில் ஆழ்ந்த ஞானமும் ஈடுபாடும் உடையவராகவும், ப்ரஸித்தமான பண்டிதராகவும், உதாரராகவும், வாத்ஸல்யபரிபூர்ணராயும், தோஷமற்றவராகவும் இருந்தார். தேஹஸம்பந்தத்தோடு மட்டுமல்லாது, ஆத்மஸம்பந்தமும் வேணுமென்று எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்தார். யதிராஜரின் திருவடித்தாமரைகளிலேயே சுற்றி வரும் வண்டு போன்றவர். கூரத்தாழ்வானின் ப்ரியத்துக்குப் பாத்ரமானவர். நல்ல ஞான அனுஷ்டானங்களை உடையவர். கௌரவம் தோற்ற முடும்பை நம்பி என்றே எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

## எம்பெருமானார் முடும்பை நம்பியை சதுஸ்ஸப்ததிகளில் (74 சிம்மாசனாதிபதிகளில்) ஒருவராக நியமித்தல்

ஓராண் வழியாக வந்த குருபரம்பரையின் நடுநாயகரத்னமான ஸ்ரீஉடையவர் ஒரு சமயம் வீரநாராயணபுரம் எழுந்தருளினார். அங்குள்ள பெரிய ஏரியின் 74 மதகுகள் வழியாகப் பாயும் நீரானது. சுற்றியுள்ள அத்தனை ப்ரதேசங்களையும் வளங்கொழிக்கச் செய்வதைப் பார்த்தார். நம் ஸம்ப்ரதாயமும் இதே போல் செழித்தோங்கிப் பெருகி ஜனங்களை வாழ்விக்க வேணும் என்று திருவுள்ளம் பற்றினார். ஆயிரக்கணக்கான தம் சிஷ்யர்களிலே, ப்ரதான 74 சிஷ்யர்களைத் தேர்ந்தெடுத்தருளி, அவர்கள் மூலம் மக்களிடத்தில் ஞானம், அனுஷ்டானம், பக்தி, வைராக்யம், ப்ரீதி, கைங்கர்யப் பயிர்களை வளர்த்திட சங்கல்பம் செய்தார். எம்பெருமானார் தர்சனத்தில் பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் பஞ்சஸம்ஸ்காரம் செய்து, அவர்களை வைஷ்ணவர்களாக்கி, அவர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்பதே இந்த ஸிம்ஹாஸநாதிபதிகளுக்கு உடையவர் இட்ட பணியாகும். முடும்பை நம்பியையும் (ஸஹோதரியின் பர்த்தா) இவர்களுள் ஒருவராக நியமித்தார். இவர்களே சதுஸ்ஸப்ததி ஸிம்ஹாஸநாதிபதிகள் எனப்படுவர். இந்த ஆசார்யர்களின் திருவம்சத்தவர்களே ஆசார்யபுருஷர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

## முடும்பை நம்பியின் வம்சத்தாரைப் பற்றிய ஒரு சிறு குறிப்பு

இவர் திருக்குமாரர் ஸ்ரீராமாநுஜ நம்பி. முதலியாண்டான் போலே எம்பெருமானுருக்கு ஸ்ரீராமாநுஜ நம்பியும் மருமான் ஆவார். இவர் தனியன் கீழே வருமாறு :

பாஷ்யக்ருத் பாகிநேயோஸௌ பவசந்தாப சாந்தயே /
வரதார்யாத்மஜோஸ்மாகம் பூயாத் ராமாநுஜாஹ்வய //

ஸ்ரீராமாநுஜ நம்பியின் குமாரர் முடும்பையாண்டான் (தாசரதி). இவர் முடும்பையிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு குடிபெயர்ந்தார் என்பதை ஸ்ரீரங்கவாஸப்ரியம் என்ற இவர் தனியனிலிருந்து அறியலாம். இவர் குமாரர் தேவப்பெருமாள் என்னும் வரதார்யர். இவர் குமாரர் இளையாழ்வார் என்னும் லக்ஷ்மணாசாரியர்.

இளையாழ்வாருக்கு இரண்டு திருக்குமாரர்கள். அவர்களில் ஒருவர் க்ருஷ்ணபாதகுரு என்னும் வடக்குத் திருவீதிப்பிள்ளை. இவர் நம்பிள்ளையின் காலக்ஷேப கோஷ்டியில் ப்ரதான சிஷ்யர்களாயிருந்த இரு க்ருஷ்ணமாசார்யர்களில் ஒருவர். (மற்றவர் திருநாமம் பெரியவாச்சான் பிள்ளை. இவர் வியாக்கியான சக்கரவர்த்தி என்று உலகம் போற்றுமாறு நாலாயிரம் பாசுரங்களுக்கும் வியாக்கியானம் எழுதி உபகரித்தார். நம்பிள்ளையின் நியமனப்படி திருவாய்மொழிக்கு இருபத்துநாலாயிரப்படி என்ற வியாக்கியானம் அருளினார்). இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை என்றே ப்ரஸித்தர். இந்த நாடறிய மாறன் மறைப்பொருளை ஈடு முப்பத்தாறாயிரப்படியாக ப்ரசாதித்தவர். திருவாய்மொழியைக் காத்த குணவாளர். இவர் ஆசார்ய ஸம்மதி என்ற க்ரந்தமும் அருளிச் செய்தார். இவர் பெரியவாச்சான் பிள்ளையைவிட மூன்று மாதங்களே வயதில் மூத்தவர்.

வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கு குமாரர்கள் இருவர். முத்தவர் ஸ்ரீபிள்ளை லோகாசாரியர். இவர் புகழ்பெற்ற அஷ்டாதச ரஹஸ்யங்களை அருளிச்செய்து ப்ரமாணங்களைக் காத்ததோடு, துருஷ்கக் கலாபத்தில் நம்பெருமாளை ஸ்ரீரங்கத்தினின்றும் எழுந்தருளப்பண்ணி, ப்ரமேயத்தையும் காத்தருளினார். இவர் திருத்தம்பியார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். இவர் திருப்பாவைக்கு ஆறாயிரப்படி, திருவிருத்தத்திற்கு ஆறாயிரப்படி, திருப்பல்லாண்டு வ்யாக்யாநங்கள், ஆசார்யஹ்ருதயம், அருளிச் செயல் ரஹஸ்யம், சரணாகதிமாலை, பட்டோலை ஆகியவை அருளிச் செய்தார். இவ்விருவரும் நைஷ்டிக ப்ரம்சாரிகளாயிருந்து விட்டனர். இளையாழ்வாரின் மற்றொரு குமாரர் வரதாசாரியர். இவர் குமாரர் ராமாநுஜகுரு. இவர் குமாரர் அழகப்பங்கார். இவர் குமாரர்

பேரருளாள ஸ்வாமி என்கிற தேவராஜ குரு. இவர் குமாரர் ஸ்ரீராமாநுஜம் பிள்ளை, ஆத்தான் ஸ்வாமியின் திருத்தகப்பனார்.

## முடும்பை வம்சத்தின் தன்னேற்றம்

மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் முடும்பை வம்சத்தின் பெருமையை கீழ்க்கண்ட பாசுரத்தில் தெரிவித்துள்ளார். (53ஆம் பாசுரம்)

**அன்னபுகழ்முடும்பை** யண்ணலுலகாசிரியன்
இன்னருளால் செய்தகலை யாவையிலும் - உன்னில்
திகழ்வசனபூடணத்தின் சீர்மை யொன்றுக்கில்லை
புகழலவிவ்வார்த்தை மெயிப்போது.

நம்பி என்ற பதம் **பூர்ணர்** என்று பொருள் படும். ஆசார்யர்களுக்கு நம்பி என்று முதன் முதலில் திருநாமம் இட்டவர் ஸ்ரீமதுரவிகளாவர். தமது ஆசார்யரான நம்மாழ்வாரை **குருகூர் நம்பி** என்று குறிப்பிட்டார்.

மணவாளமாமுனிகள் அருளிச் செய்துள்ள முமுக்ஷுப்படி தனியன்களில் முடும்பை வம்சத்தின் பெருமையை குறிப்பிட்டுள்ளார். அவைகளை கீழே அனுபவிப்போம் :

வாழி யுலகாசிரியன் வாழியவன் மன்னுகுலம்
வாழி முடும்பையென்னு மாநகரம் - வாழி
மனஞ்சூழ்ந்த பேரின்ப மல்குமிகு நல்லார்
இனஞ்சூழ்ந் திருக்கு மிருப்பு.

ஓது முடும்பை யுலகா சிரியனருள்
ஏது மறவாத வெம்பெருமான் - நீதி
வழுவாச் சிறுநல்லூர் மாமறையோன் பாதந்
தொழுவார்க்கு வாரா துயர்.

முடும்பை நம்பி வம்சத்தில் அவதரித்த பிள்ளை லோகாசார்யரை போற்றி உரைக்கும் பாசுரத்தை கீழே அனுபவிக்கலாம்.

வாழி உலகாசிரியன் வாழியவன் மன்னுகுலம்
வாழி முடும்பை என்னும் மாநகரம் - வாழி
மனஞ் சூழ்ந்த பேரின்ப மிகு நல்லார்
இனஞ் சூழ்ந்திருக்குமிருப்பு.

வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா, எறும்பியப்பா, இராமாநுஜம் பிள்ளை, ஆத்தான் ஸ்வாமி ஆகியோர் முடம்பை வம்சத்தில் அவதரித்தவர்கள்.

மேலே குறிப்பிட்டுள்ள விஷயங்கள் ஆழ்வார் திருநகரி ஸ்ரீமதாத்தான் மேலத்திருமாளிகை சிஷ்ய சபை வெளியிட்டுள்ள நூலில் இருந்தும்,
ஆத்தான் ஸ்ரீ.உ.வே வரததேசிகாசாரியார் ஸ்வாமி, கிழத்திருமாளிகை, ஷஷ்டியப்தபூர்த்தி மலரில் இருந்தும் ஸ்ரீ.உ.வே கி.அப்பாழ்வார் தொகுத்து அருளிய ஆசார்யர்கள் வைபவ சுருக்கம் என்னும் நூலில் இருந்தும் எடுக்கப்பட்டது.

<u>ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா ஸ்வாமியின் வம்ச பரம்பரை</u>

முடும்பை நம்பி
|
இராமானுஜ நம்பி
(முதலியாண்டானை போலே எம்பெருமானாருக்கு இவரும் மருமான் ஆவார்)
|
முடும்பையாண்டான் என்னும் தாசரதி (ஸ்ரீரங்கத்திற்கு குடிபெயர்ந்தவர்)
|
தேவப்பெருமாள் என்னும் வரதார்யர்
|
இளையாழ்வார் என்னும் லக்ஷ்மணாசார்யர்
| |
மன்னாராசார்யர் ஸ்ரீகிருஷ்ணபாத குரு என்னும்
| வடக்குத்திருவீதிப் பிள்ளை
பராங்குச நம்பி |
| பிள்ளைலோகாசார்யர்
விரக்தி ஸ்ரீநிவாஸாசார்யர் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்
இவர் இரண்டாவது குமாரர்
|
அனந்தாசார்யர்
|
ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா(மணவாள மாமுனிகள் ஏற்படுத்திய அஷ்டதிக் கஜங்களில் ஒருவர்)
|
அண்ணனப்பா அனந்தாசார்யர் அழகிய மணவாளப் பெருமாள்

இந்த வம்ச பரம்பரை மிகவும் நீண்டு உள்ளதால் இவருக்கு பிறகு அவதரித்தவர்களை பற்றிய விவரங்களை இங்கே கொடுக்க முடியவில்லை. மேலும் இந்த திருவம்சத்தார்கள் பல திவ்ய தேசங்களில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் வம்சபரம்பரையை இங்கே கொடுப்பது மிகக் கடினம். மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் திருநாங்கூர் வைகுந்த விண்ணகரம் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா சிஷ்ய சபை 1982ஆம் வருட ஆண்டு மலரில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

<u>ஸ்ரீமத் ஆத்தான் ஸ்வாமி வம்ச பரம்பரை</u>

முடும்பை நம்பி
|
ராமானுஜ நம்பி
(முதலியாண்டானை போலே எம்பெருமானாருக்கு இவரும் மருமான் ஆவார்)
|
முடும்பையாண்டான் என்னும் தாசரதி
|
தேவப்பெருமாள் என்னும் வரதார்யர்
|
இளையாழ்வார் என்னும் லக்ஷ்மணாசார்யர்
| |
வரதாசார்யர் ஸ்ரீகிருஷ்ணபாத குரு என்னும்
| வடக்குத்திருவீதிப் பிள்ளை
ராமானுஜ குரு |
1. பிள்ளைலோகாசார்யர்
அழகப்பங்கார் 2.அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்
|
தேவராஜ குரு (பேரருளாள ஸ்வாமி)
|
ராமானுஜம் பிள்ளை (மணவாள மாமுனிகள் சிஷ்யர் - இவர் ஒன்றான வானமாமலை ஜீயர் ஸ்வாமியின் அஷ்டதிக் கஜங்களில் ஒருவர்)
|
ஆத்தான் ஸ்வாமி
|
ஞானத் திருஷ்டி அழகப்பங்கார் ஸ்வாமி

இந்த வம்ச பரம்பரை மிகவும் நீண்டு உள்ளதால் இவருக்கு பிறகு அவதரித்தவர்களை பற்றிய விவரங்களை இங்கே கொடுக்க முடியவில்லை. மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் ஸ்ரீ.உ.வே கி.அப்பாழ்வார் தொகுத்து அருளிய ஆசார்யர்கள் வைபவ சுருக்கம் என்னும் நூலில் இருந்தும் எடுக்கப்பட்டது.

எறும்பியப்பாவின் வம்ச பரம்பரை அடியேனுக்கு கிடைக்கவில்லை.

இந்த இரு வம்ச பரம்பரைகளையும் உற்று நோக்கும் போது, நமக்கு ஒன்று புலனாகும். வடக்குத் திருவீதிப்பிள்ளையின் திருத்தம்பியார் காலத்திற்கு பிறகு முடும்பை வம்சம் மூன்று திருவம்சங்களாக பிரிந்து போயிற்று. அவையாவன : ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா, எறும்பியப்பா, ஆத்தான் வம்சம்.

மங்களாஶாஸன பரை: மதாசார்ய புரோகமை: /
ஸர்வைஶ்ச பூர்வை ராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம் //

முடும்பை நம்பி திருவடிகளே சரணம்

வாசிக தோஷ: க்ஷந்தவ்ய:

ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## குருகைக்காவலப்பன் - வருஷ திருநட்சத்திரம் - தை - விசாகம்

### தனியன்

ம்ருகே விஸாக ஸம்பூதம் நாதமௌநி பதாஸ்ரீதம் /
ஜ்ஞாந யோகாதி ஸம்பந்தம் குருகாத்ய சஷமாஸ்ரயே //

நாதமௌநி பதாஸக்தம் ஜ்ஞாநயோகாதி ஸம்பதம் /
குருகாதிப யோகீந்த்ரம் நமாமி ஸிரஸா ஸதா //

**ஆசாரியன் - ஸ்ரீமந்நாதமுனிகள்**
**திருவவதார ஸ்தலம் - திருக்குருகூர்**
**புருஷாகாரர் - புண்டரீகாசஷர்**
**இருப்பிடம் - ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருப்பள்ளி. அது அன்று முதலாகச் சோழ தேசத்தில் திருக்காவேரி தீரத்தில் குருகைக் காவலப்பன் கோயிலென்று ப்ரஸித்த மாயிற்று.**

### வாழித்திருநாமம்

மகரமதில் விசாகம் நாள் வந்துதித்தான் வாழியே
மாறன்தாள் நாதமுனி மலரடியோன் வாழியே
நிகரில்நன் ஞானயோகம் நீண்டு செய்வோன் வாழியே
நிர்ணயமாயைந்துபொருள் நிலையறிவோன் வாழியே
அகமறுக்குமிராமர்பதம் ஆசையுள்ளோன் வாழியே
ஆழ்வார்கள் மறையதனை ஆய்ந்துரைப்போன் வாழியே
செகதலத்தில் குருகூரில் செனித்த வள்ளல் வாழியே
செய்யகுருகைக் காவலப்பன் திருவடிகள் வாழியே.

### இவர் அருளிய மூன்றாம் திருவந்தாதித் தனியன்

சீராரும் மாடத் திருக்கோவ லூரதனுள்
காரர் கருமுகிலைக் காணப்புக்கு – ஒராத்
திருக்கண்டே னென்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே யுகந்து.

ஸ்ரீமந்நாதமுனிகள் இவருக்கு யோக ரஹஸ்யார்த்தத்தை உபதேசித்தல்

இவரை அழைத்து ஸ்ரீமந்நாதமுனிகள் `உமக்கு நாம் சொன்ன தர்சனதாத்பர்ய யோக ரஹஸ்யார்த்த விசேஷங்களை அவதரிக்க இருக்கும் யமுனைத் துறைவருக்கு உபதேசியும்' என்று நியமித்தார்.

ஸ்ரீஆளவந்தாரும் குருகைக்காவலப்பனும்

ஸ்ரீமணக்கால் நம்பிகள் நியமித்தபடி, ஆளவந்தார் ஸ்ரீபாதத்து முதலிகள் சிலரோடு குருகைக்காவலப்பனை சேவிக்க கங்கைகொண்ட சோழபுரம் சென்று சேர்ந்தார். அங்கே நம்பிகள் சொன்ன அடையாளப்படி குருகைக்காவலப்பன் குகைபோன்ற ஒரிடத்தில் யோகத்தில் இருப்பதைக் கண்டு சேவித்தார். இவர்கள் ஒரு சுவர் மறைவிலே நின்று கொண்டு அவர் நிஷ்டை கலையும் நேரத்தை எதிர்பார்த்திருந்தனர். இங்ஙனம் அவர்கள் மறைவிலிருந்ததை பெருமாள் இவருக்கு தன் செயல்கள் மூலம் உணர்த்தினார்.

`இங்கு சொட்டைக்குலத்தவர் யாரேனும் வந்திருக்கீர்களா' என்று வினவினார். உடனே ஆளவந்தார் அவரை தெண்டனிட்டு வணங்கி `ஸ்வாமீ அடியேன் யமுனைத்துறைவன். தேவரீர் ஆக்ஞையை எதிர்பார்த்து இருந்தேன்' என்று தெரிவித்தார். குருகைக்காவலப்பன் ஆளவந்தாரிடம் தேவரீர் இங்கு வந்ததென் நோக்கம் என்று கேட்க அதற்கு அவர் `தேவரீரிடம் அடியேன் பாட்டனார் ஸ்ரீமந்நாதமுனிகள் நேரில் அறிந்து கொள்ளும்படி சில ரகசியங்கள் வைத்துப்போயிருப்பதாகவும் அதை தெரிந்து கொள்ளும்படி ஆனை. அதனை நிறைவேற்றிக் கொள்ளவே தேவரீர் திருவடிகளை நாடி வந்தேன்' என்று கூறினார். குருகைக்காவலப்பன் ஆளவந்தாரின் ஆர்வத்தை மிகவியந்து அவரை அப்படியே தழுவிக் கொண்டு `அப்பனே அது உண்மைதான். அதை உரியவராகிய உம்மிடம் சேர்ப்பிக்கவே எனக்கும் ஆனை. ஆனால் இது உரிய சமயமன்று. என்னுடைய அந்திம காலத்தில் அவற்றை உமக்குக் கூறுகிறேன்' என்று கூறினார்.

ஆளவந்தாரும் `ஸ்வாமீ! அடியேன் ஸ்ரீரங்கத்திற்கு போய்விட்டேனானால் தேவரீர் அந்திம காலம் அடியேன் அறிவதெங்கனம்?' என்று விண்ணப்பக்க, அவரும் `வருகிற புஷ்யமாதத்திலே, குரு புஷ்யயோகத்திலே அபிஜித் முகூர்த்தத்திலே நமக்கு சரீராவஸானம் (சரீரத்துக்கு முடிவு) நிகழக்கூடும். அதற்கு முன்பு வந்து தெரிந்து கொள்ளவும்' என்று சொன்னார். ஆளவந்தாரும் அவர் திருவடிகளிலே தெண்டனிட்டுக் கோயிலுக்கெழுந்தருளினார்.

ஆளவந்தார் திருவனந்தபுரம் செல்லுதலும் குருகைக்காவலப்பன் திருநாடு அலங்கரித்தலும் (ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம்))

ஸ்ரீரங்கத்தில் திருவத்யயன உற்சவம் ஆரம்பமாயிற்று. இராப்பத்து பத்தானாளன்று அரையர் திருவாய்மொழியிலே `கடுவினை களையலாகும்' (10-2-8) என்ற பாசுரத்தை அபிநயத்தோடு விளக்கி வந்தார். `நடமினோ நமர்கள் உள்ளீர்' என்ற பதம் வரும்போது, அரையர் என்ன காரணத்தினாலோ ஆளவந்தாரை அணுகி இந்த பதத்தை பலமுறை கூறினார். இது அவர் செய்தது தற்செயலன்று என்று நினைத்து, பரம்பொருள்தான் அவர் மூலமாக இந்த ஆணையை இட்டிருக்க வேண்டும் என்று நிச்சயித்து, பெரியபெருமாளிடம்

இதனைக் கூறி, திருவனந்தபுரம் நோக்கித் தலயாத்திரையாக ஆளவந்தார் தன் சீடர்களுடன் பிரயாணமானார். பலநாட்கள் அப்பத்மநாபனை ஸேவித்து மகிழ்ந்தார்.

ஒருநாள் திடீரென்று ஆளவந்தாருக்குத் தம்மிடம் குருகைக்காவலப்பன் குறித்த தினம் பற்றிய நினைவு தோன்றிற்று. குருகைகாவலப்பன் தமக்கு இட்டுதந்த திருமுகத்தைப்பார்த்தார். மாதமும் திவஸமும் அன்றாகவே இருந்தபடியாலே, ஆளவந்தார் மிகவும் மனம் உடைந்தவராய் `ஒரு புஷ்பகவிமானம் உண்டாகிலன்றோ அங்குபோய்ச் சேரலாம், அதுவும் பெற்றோமில்லையே' என்று சோகித்தார். பெருமாள் இதற்கு **நாம் செய்தபடி காணுமிது. ஸேஷத்வஜ்ஞாநமே அமையும் என்று அருளினார்.** `எதற்கும் நாம் உடனே பிரயாணமாவோம்' என்று தீர்மானித்து அனந்தனிடம் கண்ணும் கண்ணீருமாய்ப் பிரியா விடைபெற்று விரைவாக அவர் ஊர் நோக்கி நடந்தார். இவர் தாமதமாக போனதால், பாட்டானார் குருகைகாவலப்பனிடம் சொல்லி வைத்திருந்த யோக ரகசியங்கள் இவருக்கு கிடைக்காமல் போயின. இதுவே எம்பெருமானின் திருயுள்ளமாகும்.

வார்த்தாமாலை 403 வார்த்தையின் விவரணம் (பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளியது)

எளிவரும் இயல்வினன் நிலைவரம்பில பலபிறப்பா யொளிவரும் (திருவாய்மொழி 1-3-2) என்கிற பாசுரத்திற்கு மணக்கால்நம்பி அர்த்த விசேஷம் அருளிச்செய்யும் போது, ஆளவந்தார் இப்படி குணவானயிருக்கிற அவனை ஸாசஷாத்கரிக்க விரகில்லையோ ? என்று கேட்டார். எனக்கு ஸேஷத்வாநு ஸந்தாநமே அமையும். நீர் அப்பன் இருக்கும் இடம் செல்லும் என்று சொன்னார். இவரும் அங்கு சென்றார். அவரும் காலம் குறித்துவிட, இவரும் திருவனந்தபுரம் சென்றார். அங்கு இவர் அக்காலத்தை நினைக்க அப்பன் பக்கல் போக ஒரு புஷ்பக விமானம் பெற்றிலோமே என்று வருத்தப்பட்டர். பெருமாள் இதற்கு **நாம் செய்தபடி காணுமிது. ஸேஷத்வஜ்ஞாநமே அமையும் என்று அருளினார். இதன் கருத்து :**

பக்தியோகத்தை அநுஷ்டித்து தன்னை நேரே கண்டால் தன்னை அநுபவிப்பதில் ஸ்வார்த்ததை உண்டாகிவிடும் ஆகையாலே, அப்பன் குறித்த காலத்தை ஆளவந்தார் மறக்கும்படி செய்து ஆத்மாவின் ஸேஷத்வ பாரதந்த்ர்ய ஜ்ஞானமே பரமபதத்தில் பரார்த்தாநுபவ கைங்கர்யங்களை விளைத்துவிடும் ஆகையாலே அதுவே போதும் என்று பெருமாள் அருளினார் என்பது கருத்து. **நாமும் ஸேஷத்வஜ்ஞாம் பெற்று எம்பெருமானை அடைவோம்.**

**(மேலே குறிப்பிட்ட விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி வெளியிட்டு உள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரி என்ற நூலில் இருந்தும் மற்றும் வார்த்தாமாலை நூலில் இருந்தும் எடுக்கப்பட்டது)**

**குருகைக்காவலப்பன் திருவடிகளே சரணம்.**

**வாசிக தோஷ: சஷந்தவ்ய:**

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## சொட்டை நம்பி, நாலூரான் - வருஷ திருநட்சத்திரம் - தை – பூரட்டாதி

## சொட்டை நம்பி (ஆளவந்தார் திருக்குமாரர்)

### தனியன்

மகரே சைகபாத்யே ச யாமுநாசார்ய நந்தநம்
ராமாநுஜார்ய ஸச்சிஷ்யம் பூர்ண தேஸிக மாஸ்ரயே

இவருடைய வாழித்திருநாமம் கிடைக்கவில்லை

திருவவதார ஸ்தலம் - வீரநாராயணபுரம் (காட்டு மன்னார் கோயில்)
திருத்தகப்பனார் - ஆளவந்தார்
திருத்தமயனார் - திருவரங்கப்பெருமாள் அரையர்
குடி – சொட்டை
குமாரர் - என்னாச்சான் - இவர் குமாரர் - பிள்ளையப்பன்
இவர் நம்பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்வார்.
ஆசார்யர் - எம்பெருமானார்

இவர் எம்பெருமானார் ஏற்படுத்திய 74 சிம்மாசனாதிபதிகளில் ஒருவராவர்.

`தன் தனக்கு இன்றிநின்றானை' (திருவாய்மொழி 4-5-7) என்ற சொல் தொடருக்கு `ஆத்மாநம் மாநுஷம் மந்யே என்று சொன்ன இராமபிரானுக்கே இந்தப்பெருமை சேரும்' என்று ஒரு வித்யாஸமான விளக்கம் சொல்லி எல்லோரையும் வியக்க வைத்தாராம் இவர்.

### நம்பெருமாளிடத்தில் இவர் கொண்டு இருந்த மிகுந்த ஈடுபாடு

பொல்லாக்குறளுருவாய் - நாச்சியார் திருமொழி (11ஆம் திருமொழி 5ஆம் பாசுரம்) வ்யாக்யானத்தில் இவரைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை கீழே அனுபவிப்போம்.

ஆளவந்தார் மகனார் சொட்டை நம்பி ஒரு நாள் திருக்கோட்டியூர் நம்பி நெகிழும்படி ஒரு வார்த்தை சொன்னார். இவருடைய அந்திம தசையிலே முதலிகள் அடையப்புக்கிருந்து நீர் நினைத்துக் கிடக்கிறது என் ? என்று கேட்டார்கள். அதற்கு இவர் ஆளவந்தார் ஸ்ரீபாதத்தின் ஸம்பந்தம் பரமபத ப்ராப்தி பண்ணித்தந்தல்லது விடாது. அங்கே போனால் ஸ்ரீவைகுண்டநாதன் முகம் நம்பெருமாள் திருமுகமண்டலம் போலே குளிர்ந்து இல்லையாகில் முறித்துக்கொண்டு இங்கே திரும்பி வந்து விடுவேன். ஆனால் நச புநராவர்த்ததே என்கிறபடி, பரமபதம் போனவர்கள் திரும்பி வரமுடியாதே என்று சொன்னாராம்.

நிறமுயர் கோலமும் பேரும் இவைஇவையின்று - திருவிருத்தம் 44ஆம் பாசுரத்தின் வ்யாக்யானத்திலும் மேலே சொன்ன நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டள்ளது.

## நாலூரான்

### தனியன்

மகரே சைகபாத்யே ச சதுர்க்ராம நிவாஸிநம்
கூரநாத குரோ: ஸிஷ்யம் ஸேவே ஸுப குணார்ணவம்

இவருடைய வாழித்திருநாமம் கிடைக்கவில்லை

ஆசார்யர் - கூரத்தாழ்வான்

## ஸ்ரீகூரத்தாழ்வானின் கருணையின் எல்லை நிலம் - நாலூரானுக்கு முக்தி நல்கினார்

கொடிய பகைவனிடத்திலும் கருணை காட்டும் இரக்க மனமுடையவர் நம் கூரத்தாழ்வான். கண்ணிழப்பதற்கும் பெரியநம்பிகள் உயிரழப்பதற்கும் நாலூரானேமுக்கிய காரணமாவான். பகவான் பாகவதாபசாரம் செற்தவற்களை பொறுக்கமாட்டான். அப்படி பட்டவர்கள் ஆத்ம நாஸமடையும் என்பது சாஸ்திரம். அப்படி ஆகாமல் பகவானைக்கொண்டே அவ்வபசாரத்தைப் பொருப்பித்தருளினார் உதார ஹ்ருதயம் படைத்த கூரத்தாழ்வான்.
அதுபோல் நாமும் செய்யத்தகாதவற்றைச் செய்தாலும் ஆசாரிய ஸம்ந்தத்தால் ஈடேறி விடாலாம் எனில் அது முடியாது. நாலூரான் பின்னால் ஏற்படக்கூடிய அநர்த்தங்களை ஆலோசியாமல் சோழராஜ சபையில் ஏதோ ஒருவார்த்தை சொல்லப்போக கடைசியில் நிகழ்ந்தவற்றைக் கண்டு மிகவும் அநுதாபப்பட்டான். நம்மாலன்றே இவ்வநர்த்தம் நிகழ்ந்தது என்று வருந்தி அழுதான். அதறிந்த ஆழ்வான் நாம் அவனுடைய பிழையை மன்னித்தாலும் எம்பெருமான் நம்மிடமுள்ள பரிவினால் அவனை தண்டித்து விடுவான் என்றஞ்சி `நான் பெற்ற லோகம் நாலூரானும் பெறவேண்டும்` என்று வரம் பெற்றார். அறிந்தே பிழைபுரிந்த விரஸுந்தரனுக்கு பராஸரபட்டர் பரமபதம் அளிக்கவில்லை. **புத்திபூர்வகமாகப் பிழை செய்தவன் தண்டனை அனுபவித்தே தீரவேண்டும்.**

(ஸ்ரீ சு.ரகுராமன்(பாலாஜி) ஸ்வாமி அருளியுள்ள ஒரு சிறு குறிப்பில் இருந்து மேலே சொன்னது எடுக்கப்பட்டது)

**<u>பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளியுள்ள வார்த்தாமாலை 269ஆம் வார்த்தை</u>**

**கூரத்தாழ்வான் தேவிகள் ஆண்டாள் அருளியது:**

**ஆசார்யன் விஷயத்தில் அபசாரம் பண்ணின நாலூரானும் ஈடேறினான். பகத்விஷயத்தில் அபசாரம் பண்ணின ஸிஸுபாலனும் ஈடேறினான். பாகவத விஷயத்தில் அபசாரம் செய்தவர்கள் இன்னார் ஈடேறினாரென்று இதுக்கு முன்பு கேட்டறிவதில்லை.**

**விவரணம் - நாலூரான் க்ருமிகண்டனிடம் மந்திரியாய் இருந்து ஆசார்யனான கூரத்தாழ்வான் கண்ணிழக்கக் காரணமாய் இருந்தான். ஆழ்வான் எம்பெருமானிடம் நான் பெற்ற லோகம் நாலூரானும் பெற வேணும் என்று ப்ராத்தித்ததால் இவனும் ஈடேறினான். அம்பரீஷன் போன்ற ஒரொருவர் பாகவத விஷயத்தில் அபசாரப்பட்டால் அந்த பாகவதரிடம் மன்னிப்பு வேண்டிப் பெற்றாலொழிய துர்வாஸர் போன்ற ரிஷியாக இருந்தாலும் ஈடேறமுடியாது. பாகவதர் பலர் விஷயத்தில் அபசராப்பட்ட க்ரிமிகண்டன் போன்றவர்களுக்கு விமோசனமே இல்லை என்று கருத்து.**

**பகவத அபசாரத்தைக் காட்டிலும் பாகவத அபசாரத்தின் கொடுமையைக் காட்கிறது இந்த வார்த்தை.**

**மேலே சொன்ன விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி தொகுத்து வெளியுட்டுள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரி என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது**

**சொட்டை நம்பி, நாலூரான் திருவடிகளே சரணம்.**

**வாசிக தோஷ: சஷந்தவ்ய:**